# மன்னா

## முருங்கன் டொன் பொஸ்கோவின் ஏற்பாட்டில்
## மன்னார் மறைமாவட்ட இளைஞர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்
# “இளையோரோடு இளையோருக்காக”








முருங்கன் டொண் பொஸ்கோவின் சலேசிய சபை அருட்பணியாளர்களின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட இளைஞர்களுக்கான “இளையோரோடு இளையோருக்காக’ என்னும் நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது. கடந்த மே மாதம் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று நாள் முழுவதும் முருங்கனில் உள்ள புனித டொன் பொஸ்கோ தொழில்நுட்பக் கல்லூரியில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலுமிருந்து ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களும், இளம் பெண்களும் இந்நிகழ்வுகளில் ஆர்வத்தோடு பங்கேற்றனர். இந்நிகழ்வில் ஏனைய சமயங்களைச் சேர்ந்த இளைஞர்களும், இளம் பெண்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## “நம்மட பாதருக்கும் மாற்றமா .... ? எங்க பாப்பம்....!”
## பல காலமாக எதிர்பார்க்கப்பட்ட மன்னார் மறைமாட்ட அருட்பணியாளர்களுக்கான புதிய பணி நியமனங்கள் 4ஆம் பக்கத்தில்!

## புனித அந்தோனியார் திருவிழா நல்வாழ்த்துக்கள்!




யூன் மாதம் 13ஆம் திகதி புனித அந்தோனியார் திருவிழா. உலகெங்கும் உள்ள கத்தோலிக்க மக்கள் புனித அந்தோனியாரின் திருவிழாவை மகிழ்வோடும் உற்சாகத்தோடும் கொண்டாடியுள்ளனர். மன்னார் மறைமாவட்டத்தில் மட்டும் 45இற்கும் அதிகமான ஆலயங்கள் புனித அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்டவையாக உள்ளன.

கோடி அற்புதராம் புனித அந்தோனியாரின் பரிந்துரை நிறைவாகக் கிடைக்க செபிக்கின்றோம். புனித அந்தோனியாரின் திருவிழாவைக் கொண்டாடிய அனைவருக்கும் திருவிழா நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். - மன்னா நிர்வாகம்

## மன்னா பத்திரிகையின் புதிய ஆசிரியராக அருட்பணியாளர் லக்ஸ்ரன் டி சில்வா நியமனம்

மன்னார் மறைமாவட்டத்தின் மாதாந்த கத்தோலிக்க பத்திரிகையான ‘மன்னா’வின் புதிய ஆசிரியராகவும் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் ‘கலையருவி’யின் புதிய இயக்குனராகவும் அருட்பணியாளர் அ. லக்ஸ்ரன் டி சில்வா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வவுனியா மறைக்கோட்டத்தில் உள்ள வேப்பங்குளம் பங்கின் பங்குத்தந்தையாக தற்போது பணிபுரிகின்றார். புதிய பணிப்பொறுப்பை ஏற்கும் லக்ஸ்ரன் அடிகளாரை உலகெங்கும் பரந்துள்ள மன்னா வாசகர்கள், எழுத்தாளர்கள் சார்பாக வாழ்த்தி வரவேற்கின்றோம். இவருடைய புதிய பணிகளில் இறைவனின் அருட்கரம் நிறைவாக இருக்க இறையாசீர் வேண்டுகின்றோம்.

## அந்தோனியார் புரம் பங்கில் புதிய ஆலயம் திறப்பு





அந்தோனியார் புரம் பங்கில் புதிதாகக் கட்டப்பட்ட புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழாவும், மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகைக்கான வரவேற்பு நிகழ்வும் யூன் மாதம் முதலாம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. அந்தோனியார் புரம் பங்குத்தந்தை அருட்பணியாளர் அ. றஜனிகாந்த் அடிகளாரின் தலைமையில் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## செபமாலைதாசர் துறவற சபையின் புதிய உயர் தலைவராக
## அருட்திரு ஜஸ்ரின் ராஜ் (செ.தா)

செபமாலைதாசர் துறவற சபையின் புதிய தலைவராக அருட்பணியாளர் ஜஸ்ரின் ராஜ் (செ.தா) அடிகளார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த மே மாதம் 13ஆம் திகதி செபமாலைத்தாசர் சபையின் தலைமையகம் இருக்கும் பங்களூரில் நடைபெற்ற பொதுஅமர்வின்போதே இவர் இச்சபையின் புதிய உயர் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.


இவர் திரு. திருமதி செல்லத்துரை சந்தனா மேரி அவர்களின் மூத்த புதல்வனாக 22.12.1966ஆம் ஆண்டு மன்னாரில் பிறந்தார். செபமாலைதாசர் துறவற சபையின் சிறிய குருமடத்தில் 1983ல் இணைந்த இவர், 1988இல் தனது முதல் துறவற அர்ப்பணத்தைச் செய்து 1996இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னா பத்திரிகைப் பணியிலிருந்து
# விடைபெறுகிறேன்!

மன்னா பத்திரிகையின் ஆசிரியராகக் கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிசெய்த நிலையில் தற்போது இப்பணிப்பொறுப்பில் இருந்து விடைபெறுகின்றேன். கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரை (2010 ஜனவரி தொடக்கம் 2011 மே வரையான ஒன்றரை ஆண்டுகள் நீங்கலாக) இப்பணியைச் செய்துள்ளேன். இந்த நீண்ட காலப்பகுதியில் எனது பணியில் என்னோடு ஒத்துழைத்த மன்னா வாசகர்கள், மன்னா விநியோகஸ்தர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை இதயத்தின் ஆழத்தில் இருந்து தெரிவிக்கின்றேன்.

ஒரு மறைமாவட்டப் பத்திரிகை என்ற வரையறைகளைத் தாண்டி தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் வாசகர்களைக்கொணட ஒரு பத்திரிகையாக மன்னா வலம் வருகின்றது. எனது பணியில் என்னை ஊக்குவித்து ஆலோசனைகள் வழங்கிய - வளங்கிவரும் மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் மற்றும் இன்னாள் மேதகு ஆயர்களுக்கும், குருமுதல்வர்கள், சக குருக்கள், பொதுநிலையினருக்கும் எனது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

புதிய ஆசிரியருக்கு உங்கள் நிறைவான ஒத்துழைப்பை வழங்கி மன்னாவின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குக் கைகொடுக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றேன்.



**நன்றி நிறைந்த உள்ளத்துடன்,**
**அருட்பணியாளர்**
**தமிழ் நேசன் அடிகளார்**
**– மன்னா ஆசிரியர் –**

### அன்பான அறிவித்தல்

மன்னா பத்திரிகைக் கணக்கை ஒப்படைக்க வேண்டி இருப்பதனால், மன்னா பத்திரிகைக்கான பணத்தைச் செலுத்தாதவர்கள் 2018 யூன் மாதம் வரையான உங்கள் பணத்தை கூடியவிரைவில் செலுத்தி ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## குருக்களுக்கான பணி மாற்றங்கள்

*மாற்றம் ஒன்றே மாறாதது என்பார்கள். மாற்றம் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தம். உலகில் எல்லாமே மாறிக்கொண்டுதான் இருக்கிறது. மாற்றம் இன்றேல் ஏற்றம் இருக்க முடியாது. மாற்றம் இன்றேல் வளர்ச்சி இருக்க முடியாது. இந்நிலையில் பணித்தளங்களில் பணியாற்றுகின்றவர்களும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை மாற்றங்களை எதிர்கொள்வது அவர்களுக்கும் நல்லது அவர்கள் பணிபுரியும் பணித்தளத்திற்கும் நல்லது எனலாம். குருக்கள் தமது பணித்தளங்களில் இருந்து பிரியாவிடை பெற்றுச் செல்வதும் புதிய பணியாளர்கள் புதிய பணித்தளங்களைப் பொறுப்பேற்பதும் திருச்சபையில் ஒன்றும் புதிதல்ல. இந்நிலையில் இந்தப் பணிமாற்றங்கள் தொடர்பான சில நடைமுறைசார்ந்த சிந்தனைகளை இங்கே பகிர்ந்துகொள்ள விழைகின்றேன்.*

### இடமாற்றத்திற்காகக் காத்திருப்பு

*மன்னார் மறைமாவட்டத்தில் 95 வீதமான குருக்களுக்கு தற்போது இடமாற்றங்கள், பணிமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களினால் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*பங்குகளில், ஆணைக்குழுக்களில், திருச்சபையின் நிறுவனங்களில் பணிபுரிந்த பல குருக்கள் தமது பணிக்காலத்தைக் கடந்த நிலையில் தமக்கான இடமாற்றத்தை எதிர்பார்த்திருந்தனர். மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் எதிர்பாராத திடீர் சுகவீனமும் அதை அடுத்து புதிய ஆயரை நியமிப்பதில் ஏற்பட்ட காலதாமதமும் உரிய காலத்தில் குருக்கள் இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலமையைத் தோற்றுவித்தது. எனினும் புதிய ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் தான் பணிப்பொறுப்பு ஏற்று ஆறு மாதங்களுக்குள் வெற்றிகரமாக இந்த இடமாற்றங்களைச் செய்துள்ளார்.*

### தனித்துவத்தை மதிப்போம்

*பணியாளர்கள் தமது புதிய பணித்தளங்களைப் பொறுப்பேற்கும் இக்காலத்தில் எப்படிப்பட்ட மனநிலையோடு இறைமக்கள் அவர்களை அணுகவேண்டும் என்பது இங்கு முக்கியமானது. ஒவ்வொரு பணியாளரும் தனித்துவமானவர்கள். ஒருவரைப்போல் இன்னுமொருவர் இருக்க முடியாது. எனவே ஒவ்வொருவருடைய தனித்துவத்தை மதிப்பதும், ஏற்றுக்கொள்வதும் அவசியமான ஒன்று. முன்பு இருந்தவரோடு புதிய பணியாளரை ஒப்பிடுவது, அல்லது புதிய பணியாளரோடு முன்பு இருந்தவரை ஒப்பிடுவது சரியான அணுகுமுறை அல்ல. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி இருக்கும். ஒவ்வொருவருக்கும் உள்ள ஆர்வம், ஆர்வமின்மை, ஈடுபாடு, ஈடுபாடின்மை போன்றவை வேறுபடும், மாறுபடும். எனவே ஒவ்வொரு பணியாளரையும் அவர்களுடைய தனித்துவத்தோடு அவர்களை நோக்குவதும், ஏற்றுக்கொள்வதும் இன்றியமையாத விடயமாகும்.*

### ஆவலாதி அவதூறு அருவருக்கத்தக்கது

*பணியாளர்களின் பலவீனங்களை மிகைப்படுத்தி பேசுவது அல்லது அவர்களைப்பற்றி ஆவலாதி அவதூறு பேசுவது தவிர்க்கப்படவேண்டும். கடவுளால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் கடவுளுக்கே கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள். எனவே நமக்குப் பணிசெய்ய வந்த பணியாளர்கள் குறித்து நாம் தீர்ப்புக்கூற முடியாது.*

*ஒரு பணியாளரைப்பற்றி அதிருப்திகள் இருக்குமாயின் நேரடியாக அவரிடம் சென்று அன்போடு, அக்கறையோடு அவருடன் உரையாடுவது, அவருடைய தவறைச் சுட்டிக்காட்டுவது நல்லது. அதைவிடுத்து பொது இடங்களில் பணியாளர்களைப்பற்றி விமர்சிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.*

### முன்சார்பு எண்ணங்கள் கூடாது

*புதிய பணித்தளங்களைப் பொறுப்பேற்கும் பணியாளர்கள் முன்சார்பு எண்ணங்களோடு யாரையும் அணுகக்கூடாது. முன்சார்பு எண்ணத்தை ஆங்கிலத்தில் Prejudice என்று அழைப்பார்கள். அதாவது ஒருவரைப்பற்றி நன்கு தெரியாத நிலையில் மற்றவர்கள் மூலம் பெறப்படும் தகவல்களை அடிப்படையாக வைத்து அந்தக் குறிப்பிட்ட நபரைப்பற்றிய ஒரு எண்ணத்தைக் கொண்டிருப்பதை இது குறிக்கும். ஒரு பணியாளரோடு ஒத்துவராதவர் அல்லது முரண்பட்டவர் அடுத்துவரும் பணியாளரோடும் அவ்வாறே இருப்பார் என்று கூறமுடியாது. எனவே நமது தொடர்பாடல், உறவாடல், அணுகுமுறை மூலம் ஒவ்வொருவரைப் பற்றியும் நாமே அறிந்து, தெரிந்து, தெளிந்துகொள்வது அவசியமாகும்.*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை***

***அருட்பணியாளர் தமிழ் நேசன்,***

***மன்னா ஆசிரியர்***

# நினைவுகூர்ந்து செபிப்போம்

9ஆம் ஆண்டு நினைவு



நோபேட் அடிகளார்

**யூன் 20**


3ஆம் ஆண்டு நினைவு



அவிதப்பர் அடிகளார்

**யூன் 22**

5ஆம் ஆண்டு நினைவு



விக்ரர் குரூஸ் அடிகளார்

**யூலை 04**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்பணி. சீமான்பிள்ளை நோபேட் அடிகளார் இறைபதம் எய்திய 9ஆம் ஆண்டு நிறைவு (2009) யூன் மாதம் 20ஆம் திகதி ஆகும். அருட்பணி. சவிரி விக்ரன் அவிதப்பர் அடிகளார் இறைபதம் எய்திய 3ஆம் ஆண்டு நிறைவு (2015) யூன் மாதம் 22ஆம் திகதி ஆகும். அமதிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. விக்ரர் குரூஸ் (அமதி) அடிகளார் (அருட்பணி. ஏ. சேவியர் குரூஸ் அடிகளாரின் சகோதரர்) இறைபதம் அடைந்த 5ஆம் ஆண்டு நிறைவு (2013) யூலை மாதம் 4ஆம் திகதி ஆகும். இறையடி சேர்ந்த இக்குருக்களுக்காக இத்தினங்களில் சிறப்பாக வேண்டிக்கொள்வோம்.

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

#### யூன்

01. புனித அந்தோனியார் - சிற்பியாறு
02. பதுமை மாதா திருவிழா - காஞ்சிரங்குளம் - சேமமடு
03. நற்கருணை ஆண்டவர் விழா - யோசப்வாஸ் நகர், கீரி
- குழந்தை இயேசு திருவிழா - செம்மண்தீவு
05. சகாய மாதா திருவிழா - கல்நாட்டினகுளம்
- தூய அந்தோனியார் விழா - நரிகலைச்சான் (குஞ்சுக்குளம்)
08. இயேசுவின் திருஇருதயப் பெருவிழா - குருக்கள் மறைக்கோட்ட ரீதியில் நற்கருணை வழிபாட்டில் ஈடுபடுவர்.
09. திருஇருதய ஆண்டவர் விழா - புதிய வேலர் சின்னக்குளம்
13. தூய அந்தோனியார் விழா - தள்ளாடி, 2ம் கட்டை (மடுறோட்), இறம்பைக்குளம், செட்டிகுளம், சுவாமித்தோட்டம், துவரங்கேணி, பள்ளக்கோட்டை, மணற்குளம், பொன்தீவுகண்டல், தரவன்கோட்டை, தட்சனாமருதமடு, கறுக்காகுளம், கொக்குப்புடையான், சிறுத்தோப்பு, பிடாரிகுளம், உவரி, கனகராயன்குளம், ஒலிமடு, சிறுக்கண்டல், நெடுங்கண்டல், மன்னார் டிப்போ, பெரிய தம்பனை.
16. திருஇருதய ஆண்டவர் விழா - வேப்பங்குளம் (நேரியகுளம்)
- புனித அந்தோனியார் விழா - பணிகர் புளியங்குளம் (ஓமந்தை)
17. புனித அந்தோனியார் திருவிழா - பாலைப்பெருமாள்கட்டு, சிறுகட்டு, (செல்பெட்டி), ஆச்சிபுரம், கூமாங்குளம் (வேப்பங்குளம்), பெரிய பண்டிவிரிச்சான்.
- திருஇருதய ஆண்டவர் திருவிழா - இருதயபுரம்
- புனித அந்தோனியார் சிற்றாலயம் - தீவு (வுஞ்சியன்குளம்)
19. புனித பிரான்சிஸ்கு சவேரியார் - சவேரியார்புரம்
- புனித அந்தோனியார் திருவிழா - கோவிற்குளம், பலகைமுனை, ஸ்ரேசன்.
22. புனித அந்தோனியார் திருவிழா - முதலியார்குளம்
23. அன்புக் கன்னியர் அருட்சகோதரிகள் விழா
- மடுத்திருப்பதியின் ஆடித் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்.
- புனித அந்தோனியார் திருவிழா - மூன்றாம்பிட்டி, பன்றிக்கெய்தகுளம்
- திருஇருதய ஆண்டவர் விழா - பரிகாரிகண்டல், மூன்றாம்பிட்டி,
24. புனித அந்தோனியார் திருவிழா - சாவற்கட்டு, சின்னப்பண்டிவிரிச்சான்.
- சதாசகாய அன்னை ஆலயம் - கோதண்டர், நொச்சிகுளம்.
- திருஇருதய ஆண்டவர் திருவிழா - கவயன்குடியிருப்பு.
25. திருஇருதய ஆண்டவர் பெருவிழா - சின்னக்குளம்.
- புனித அந்தோனியார் திருவிழா - குருக்கள் புதுக்குளம்.
- திருஇருதய ஆண்டவர் பெருவிழா - காயக்குடியிருப்பு, கவயன்குடியிருப்பு
29. தூய இராயப்பர் ஆலயம் - உயிலங்குளம்
30. புனித இராயப்பர் திருவிழா - முறியாகுளம்

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## பாப்பரசர் தினம்

**யூன் 17**

**ஞாயிறு**



**மையப்பொருள் :**

**“நல்லிணக்கத்தின் அடையாளம் நீரே”**

**“You are sign of reconciliation”**

நமது அன்பிற்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல், உள, ஆன்மீக நலன்களுக்காகவும், அவருடைய கருத்துக்களுக்காகவும் செபிப்போம்.

## அருட்தந்தை அவிதப்பர் அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவு

அருட்தந்தை விக்ரன் அவிதப்பர் அடிகளார் எமது மண்ணைவிட்டுப் பிரிந்தாலும் நமது மக்களின் இதயங்களில் என்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார். கனிந்த முகமும், இளமைப் பருவமும், இளகிய நெஞ்சமும், பணிந்த குணமும் பவள மேனியும், பாசங்கொண்ட கனிந்த பார்வையும், களங்கமில்லாப் பண்பும் கொண்ட குருவே! இனியும் மனிதப் பிறவி காணுமோ உம்மைப்போல் ஒருவரை!

மரணம் என்பது முடிவல்ல, மறு உலகப் பயணத்தின் ஆரம்பம். மரணத்திற்கு விதி விலக்கு கிடையாது. சிறியவர், பெரியவர் படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், குருக்கள், பொது நிலையினர் கிடையாது. 24 மணி நேரமும் நாம் தயார்நிலையில் இருக்க வேண்டும்.

அவிதப்பர் அடிகளாருடைய மறைவு மன்னார் மறைமாவட்டத்திற்கு ஓர் இழப்பாகும். இவர் பணிபுரிந்த பங்குகளான இலுப்பைக்குளம், பேசாலை, தலைமன்னார் மக்களின் இதயங்களை அன்பால் வென்றவர். அனைவருக்கும் முன்மாதிரிகையான குருவாகத் திகழ்ந்தவர். இவரைச் சந்திக்கின்ற அனைவரையும் இவர் பெருமனத்தோடும் மகிழ்ச்சியோடும் வாழ்த்துவார். இப்படியான ஒரு அன்பான குரு நம்மைவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

இவருடைய பிரிவால் துயருறும் இவருடைய அன்புத் தாயார், உறவினர்கள், பிச்சைகுளத்து கிராம மக்கள், நண்பர்கள் சக குருக்கள், துறவிகள் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்ட மக்கள் சார்பாகவும், வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற கத்தோலிக்க மக்கள் சார்பாகவும் குறிப்பாக இவர் பணிபுரிந்த சுவிஸ்லாந்து மக்கள் சார்பாகவும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம். இவரின் ஆன்மா சாந்திபெறவும் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி, இப்படிக்கு மன்னார் மறைமாவட்டத்தின்மேல் பற்றுள்ள எஸ். ஞானகோன் மார்க், அமெரிக்கா.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# குருத்துவம் கடவுளுக்கும், அவருடைய மக்களுக்கும் சேவை செய்வதற்கே

## குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கில் கர்தினால் மல்கம் ஆண்டகை

குருத்துவம் என்பது கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் சேவை செய்வதற்காகவே அன்றி வேறு எந்த நோக்கத்தையும் கொள்ளவில்லை. இதனை எபிரேய மடலில் தெளிவாகக் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம் எனக் கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் மேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.



கொழும்பு உயர்மறைமாவட்டத்தைச் சேர்ந்த 12 திருத்தொண்டர்கள் கடந்த மே மாதம் 12ஆம் திகதி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். அன்றைய தினம் தனது மறையுரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது, குருக்கள் இறைமக்களிடமிருந்தே கடவுளால் தேர்ந்துகொள்ளப்படுகின்றார்கள். இறைவன் தேர்வுசெய்து தனது பணியினை மக்களிடையே ஆற்றுவதற்காக அவர்களை அனுப்புகின்றார். கிறிஸ்து மேன்மையான குரு, தன் தந்தைக்குப் பலி நிறைவேற்றி மக்களின் இணைப்பாளரானார். எனவே குருக்களும் கடவுளுக்கும், மக்களுக்கும் சேவைபுரிந்து இணைப்பாளராக இருக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

அங்கு தொடர்ந்து கூறிய கர்தினால் ஆண்டகை, “நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். எனவே நீங்கள் என்னில் இணைந்திருங்கள்” என்ற கிறிஸ்துவின் குரலுக்குச் செவிகொடுத்து, புனித பவுலைப்போல் அவருடைய பணியினை எடுத்துச்செல்ல அழைக்கப்பட்டுள்ளீர்கள். பழைய ஏற்பாடு தொடக்கம் குருக்களின் தலைமீது கைவைத்து செபித்து அபிஷேகம் செய்வது என்பது, கடவுளின் பராமரிப்பில் இருப்பதற்கும், அவருடைய மந்தையை மேய்ப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப்படும் நிகழ்வாக இருக்கின்றது. ஆகவே கடவுளுடன் மட்டும் ஒன்றித்திருங்கள் என்றார். தொடர்ந்து, குருக்களின் பணியினைப்பற்றி விபரித்த கர்தினால் அவர்கள், புனித ஜோன் மேரி வியான்னி மற்றும் திருத்தந்தை புனித 2ஆம் அருளப்பர் சின்னப்பர் ஆகியோருடைய குருத்துவத்தின் மேன்மை பற்றிய கருத்துக்களை விளக்கிக் கூறினார்.

எனவே குருக்களாகத் திருப்பொழிவு செய்யப்படவிருக்கின்ற நீங்கள் கீழ்ப்படிவு, ஏழ்மை, தாழ்ச்சி போன்ற உயரிய பண்புகளைக் கொண்டு வாழ்வை நடத்துங்கள். உங்கள் வாழ்வை முழுவதுமாக கடவுளுக்கு ஒப்புக்கொடுங்கள். உங்களது நாளாந்த இரகசியங்களை அவருக்குச் சொல்லுங்கள். உங்கள் விருப்பு வெறுப்புக்களை அன்றி கடவுளின் திட்டத்திற்கு செவிகொடுத்து வாழுங்கள் என்றார்.

# மடுத்திருப்பதியில் ஆடித் திருவிழா



மடு அன்னையின் ஆடித்திருவிழா இவ்வாண்டும் வழமைபோல் நடைபெறவுள்ளது. யூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பிக்கப்படும். யூலை மாதம் 1ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் நற்கருணை ஆராதனையும் 2ஆம் திகதி காலை 6.15 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

இவ்விழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மடுப் பரிபாலகர் அருட்திரு. எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் மறைமாவட்ட ஆயர் குருமுதல்வர் ஆகியோரின் வழிநடத்தலில் மன்னார் மறைமாவட்டக் குருக்களின் ஒத்துழைப்போடு இடம்பெற்று வருகின்றன.

# மன்னார் மறைமாவட்டத்தில் சிறப்பாக இடம்பெற்ற குருத்துவத் திருப்பொழிவு நிகழ்வு





மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நான்கு தியாக்கோன்கள் கடந்த மே மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் இவர்களைக் குருக்களாகத் திருப்பொழிவு செய்தார்.

ஆட்காட்டிவெளிப் பங்கைச் சேர்ந்த அருட்திரு. மரிசால் சதாஸ்கர், வஞ்சியன்குளம் பங்கைச் சேர்ந்த அருட்திரு. றோக்நாதன் மேரி பஸ்ரியன், வஞ்சியன் பங்கின் புதுக்கமம் கிராமத்தைச் சேர்ந்த அருட்திரு. மடுத்தின் தேவறாஜன், விடத்தல்தீவுப் பங்கைச் சேர்ந்த அருட்திரு. வேதநாயகம் றஞ்சன் சேவியர் ஆகியோரே இந்தப் புதிய குருக்கள் ஆவர். இத்திருநிகழ்வில் மன்னார் மறைமாவட்ட முன்னாள் திருத்தூதுப்பணி நிர்வாகி மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்து குருக்களும், துறவிகளும் பெருந்தொகையான இறை மக்களும் கலந்துகொண்டனர்.

# தூய ஆவியானவரின் திருவிழாவை முன்னிட்டு திருவிழிப்பு செப வழிபாடு






கடந்த மே மாதம் 20ஆம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தூய ஆவியாரின் பெருவிழாவிற்கான ஆயத்தமாக மே மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணி தொடக்கம் 19ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.00 மணிவரை மாந்தை தூய லூர்து அன்னை திருத்தலத்தில் மறைமாவட்ட ரீதியிலான திருவிழிப்பு செப வழிபாடு நடைபெற்றது. பல மக்கள் இவ்வழிபாட்டில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இவ்வழிபாட்டில் அருட்பணி. றஜனிகாந் அடிகளார் பாடல்களை முன்னெடுத்துச் செல்ல, அருட்பணி. நியூட்டன் அடிகளார் இறை புகழ்ச்சியை நடாத்தினார். அருட்பணியாளர்கள் பிரான்சிஸ் மரி டீ கோல், ச. ஜெயபாலன், றெஜினோல்ட், யூட் குரூஸ், றொக்சன் குரூஸ், டெஸ்மன் அஞ்சலோ ஆகியோர் தூய ஆவியாரின் செயற்பாடுகளை மையப்படுத்திய தியான உரைகளை வழங்கினார்.

அதிகாலை 5.00 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இம்மனுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களின் திருப்பலியுடன் அன்றைய திருவிழிப்பு செபவழிபாடு நிறைவடைந்தது.

# இந்திய நிதி உதவியுடன் மடுமாதா திருத்தலத்தில் 300 வீடுகள் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள்





கிறிஸ்தவ, சுற்றுலாத்துறை அமைச்சின் வேண்டுகையின் பேரில் இந்திய அரசின் நிதியுதவியுடன் மடுமாதா திருத்தலத்தில் திருப்பயணிகளின் பயன்பாட்டிற்காக அமைக்கப்படவுள்ள 300 வீட்டுத்திட்டத்திற்கான ஆரம்பக் கலந்துரையாடல் மற்றும் ஆய்வுப்பணிகள் கடந்த மே மாதம் 23ஆம் திகதி மடுமாதா திருத்தலத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை, மடுமாதா திருத்தலப் பரிபாலகர் அருட்பணி. ச. எமிலியானுஸ்பிள்ளை அடிகள், கிறிஸ்தவ அமைச்சின் இயக்குனர் திரு. குணவர்த்தன, இந்தியத் தூதரக அபிவிருத்திப் பிரிவு இயக்குனர் திரு. மஞ்சுலால், கிறிஸ்தவ, சுற்றுலாத்துறை அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் திரு. எஸ். எல். கசீம், பிரதம கணக்காளர் திரு. கே.எம்.பி.கே. பண்டார, மடு பிரதேசச் செயலர் திரு. பி. ஜெயகரன், மன்னார் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. றொகான் குரூஸ் ஆகியோரும் மற்றும் பல அரசதுறைசார் பணியாளர்களும் கலந்துகொண்டனர். இவ்வீட்டுத்திட்டப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்த வேலைத்திட்ட முகவர்களுக்கான கேள்வி கோரல் விளம்பரம் விரைவில் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியத்திற்கான

# புதிய நிர்வாகம் தெரிவு







மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானமானது கடந்த 09.03.2018 தொடக்கம் 11.03.2018 திகதி வரை மருதமடுத் திருத்தலத்தில் அமைந்துள்ள தியான இல்லத்தில் இடம்பெற்றது.

தியானத்தின் முடிவில் கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக திரு. எல். எம். தர்மதாஸ் அவர்களும், செயலாளராக திரு. ஜி. எல். விமலன் அவர்களும், பொருளாளராக திரு. எஸ். எமில்றாஜ் லோகு அவர்களும், உப தலைவராக திருமதி. ஜி. எம். பாஸ்கரன் குருஸ் அவர்களும், உப செயலாளராக திருமதி. ஐ.என். ஜே. சிறிதரன் குருஸ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மன்னார் கோட்டப் பிரதிநிதிகளாக திரு. ஏ. ஈ. நிக்சன் சொய்சா, திருமதி. எம். ஜி. கே. றிமான்ஸ் டலிமா ஆகியோரும், முருங்கன் கோட்டப் பிரதிநிதிகளாக திரு. ரி. இருதயறாஜா குருஸ், திரு பி. றெஜிஸ் பெர்ணாண்டோ ஆகியோரும், வவுனியாக் கோட்டப் பிரதிநிதியாக திரு. எஸ். எக்ஸ். யூட் ஜெயசீலன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கான
# புதிய பணி நியமனங்கள்

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கும், மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிய வந்துள்ள துறவற சபைகளின் குருக்களுக்குமான புதிய பணிப்பொறுப்பு நியமனங்களை அறிவித்தார். கடந்த மே மாதம் 28ஆம் திகதி அன்று மன்னார் ஆயர் இல்லத்தில் குருக்களுக்கான மாதாந்தக் கூட்டத்தின்போதே இந்தப் புதிய நியமனங்களை ஆயர் அவர்கள் வெளியிட்டார்.

1. அருட்பணி. அ. விக்ரர் சோசை.
   குருமுதல்வர் - மன்னார் மறைமாவட்டம்,
   மறைமாவட்டப் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்,
   மறைமாவட்ட அபிவிருத்தித்திட்ட இணைப்பாளர்.
   இயக்குனர் - கொல்பிங்
2. அருட்பணி. ச. கிறிஸ்ரியன் வாஸ்.
   மறைமாவட்ட ஆன்மீக, புதுப்பித்தல் பணி இயக்குனர்.
3. அருட்பணி. பி. யேசுராஜா
   பங்குத்தந்தை - தாழ்வுபாடு.
4. அருட்பணி. ச. எமிலியானுஸ்பிள்ளை
   இயக்குனர் குடும்பம், பொதுநிலையினர் பணி.
5. அருட்பணி. சூ.அ. கி. ஜெபாலன் குருஸ்
   பங்குத்தந்தை - எழுத்தூர்.
6. அருட்பணி. தி. நவரெட்ணம்
   பங்குத்தந்தை - அடம்பன்
7. அருட்பணி அ. இராயப்பு
   பங்குத்தந்தை - சாந்திபுரம்,
   ஆன்மீக இயக்குனர் - மறைமாவட்ட மரியாயின் சேனை பக்தி சபை
8. அருட்பணி லோ. ஞானாதிக்கம்
   பங்குத்தந்தை - சிறுக்கண்டல்
9. அருட்பணி. மொ. போ. பீற்றர் மனோகரன்
   இணைப்பங்குத்தந்தை - புனித செபஸ்ரியார் பேராலயம் மன்னார், மறைமாவட்ட முதன்மைச் செயலர் (Chancellor).
10. அருட்பணி. ச. தேவராஜா கொடுதோர்
    பங்குத்தந்தை - பேசாலை, சட்ட முதன்மைக் குரு (Judicial Vicar), மன்னார் மறைசாட்சிகளின் பணி (Vice Postulator of Martyrs of Mannar), புதிய திருமுழுக்குக் குழு ஆன்மீக இயக்குனர் (Spiritual Director of Neo Catechumenate)
11. அருட்பணி. ப. எவ்.டெஸ்மன் குலாஸ்
    அதிபர் - தூய ஜோசப்வாஸ் இறையியல் கல்லூரி, மன்னர் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் குழு செயலர்.
12. அருட்பணி. சு.ஜொ. பெப்பி சோசை
    பரிபாலகர் - மடுமாதா திருத்தலம்
13. அருட்பணி. பி.சே. றெஜினோட்
    பங்குத்தந்தை - பம்பைமடு
    இயக்குனர் - மறைக்கல்வி உப பணியகம், வவுனியா
14. அருட்பணி. செ. ஸ்ரீபன்ராஜா
    பங்குத்தந்தை - அரிப்பு
15. அருட்பணி. ச. மரியதாசன் (சீமான்)
    பங்குத்தந்தை - பள்ளிமுனை
    மறைமாவட்ட காணி உறுதிகள் கண்காணிப்பாளர்
    மறைமாவட்ட எரிபொருள் நிரப்பு நிலைய பொறுப்பாளர்
16. அருட்பணி. அ. ஞானப்பிரகாசம்
    பங்குத்தந்தை - மன்னார் தூய செபஸ்தியார் பேராலயம், மன்னார் மறைக்கோட்ட முதல்வர், தலைவர் - மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழு
17. அருட்பணி கி. அந்தோனிதாஸ் டலிமா
    இயக்குனர் - மறைக்கல்வி, திருவிவிலியம், கல்விப்பணி,
    இயக்குனர் - மறைமாவட்ட குருசில்லோ இயக்கம்
18. அருட்பணி ம. ஜெயபாலன்
    பங்குத்தந்தை - வவுனியா
    இயக்குனர் உளவள ஆற்றுப்படுத்தல்
19. அருட்பணி. டே. அலெக்ஸ்சாண்டர் சில்வா (பெனோ)
    பங்குத்தந்தை - தோட்டவெளி
    இயக்குனர் - தோட்டவெளி வேதசாட்சிகள் திருத்தலம்
20. அருட்பணி. ச. மார்க்கஸ்
    பங்குத்தந்தை - வங்காலை
21. அருட்பணி. அ. யூட் குருஸ்
    பங்குத்தந்தை - நானாட்டான்
22. அருட்பணி. சூ. மரியதாஸ் லியோன்
    பங்குத்தந்தை - மாந்தை
23. அருட்பணி. இ. அகஸ்ரின் புஸ்பராஜா
    பங்குத்தந்தை - தலைமன்னார்.
24. அருட்பணி. க. அருள்பிரகாசம்
    பங்குத்தந்தை - பொந்தீவுகண்டல்
    இயக்குனர் - தூய ஜோசப்வாஸ் பணிக்குழு
25. அருட்பணி. பா. கிறிஸ்து நேசரெட்ணம் (தமிழ் நேசன்)
    அதிபர் - மடுமாதா சிறிய குருமடம்
    மறைமாவட்ட தேவ அழைத்தல் ஊக்குனர்
    இயக்குனர் - மறைமாவட்ட பல்சமைய உரையாடல் மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழு
26. அருட்பணி. சீ. ஜெயபாலன் - மறைமாவட்ட நிதியாளர்
27. அருட்பணி. செ. இராஜநாயகம்
    பங்குத்தந்தை - வேப்பங்குளம் பங்கு,
    வவுனியா மறைக்கோட்ட முதல்வர்.
28. அருட்பணி. செ. அன்ரன் - இயக்குனர் - வாழ்வுதயம்
29. அருட்பணி. ம.அ. ஜெயசீலன்
    பங்குத்தந்தை - முருங்கன்
30. அருட்பணி. ச. சத்தியராஜ்
    பங்குத்தந்தை - ஆட்காட்டிவெளி
    மடு மறைக்கோட்ட முதல்வர்
31. அருட்பணி. லீ. சுரேந்திரன் றெவல்
    பங்குத்தந்தை - கற்கிடந்தகுளம்
    முருங்கன் மறைக்கோட்ட முதல்வர்
32. அருட்பணி. ச. பிரான்சிஸ் மெரி டிகோல்
    பங்குத்தந்தை - ஜோசப்வாஸ் நகர்
    உதவி சட்ட முதன்மைக்குரு (Assistant Judicial Vicar)
33. அருட்பணி. ச. சவுல்நாதன்
    இயக்குனர் - அன்பியம், திருப்பாலத்துவசபை,
    நற்செய்தி அறிவிப்புப்பணி.
34. அருட்பணி. இ. செபமாலை - பங்குத்தந்தை - செட்டிகுளம்
35. அருட்பணி. எ. டெனி கலிஸ்ரஸ்
    பங்குத்தந்தை - தேவன்பிட்டி
36. அருட்பணி. சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ
    இயக்குனர் - மறைமாவட்ட இளைஞர் பணி
    மறைமாவட்ட குருக்கள் அவைச் செயலர்
37. அருட்பணி. க.அ. அருள்ராஜ் குருஸ்
    உயர்கல்வி - பெல்ஜியம்
38. அருட்பணி. பி.யூட் ஞானராஜ் குருஸ் (நேரு)
    பங்குத்தந்தை - வஞ்சியன்குளம்
39. அருட்பணி. அ. ஆரோக்கியம்
    இயக்குனர் - தியான இல்லம் மடு,
    இயக்குனர் - மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு
40. அருட்பணி. கா. அன்ரன் சுகுணராஜ் குருஸ்
    பங்குத்தந்தை - ஓமந்தை
41. அருட்பணி. யே. ஜெஸ்லி ஜெகானந்தன்
    பங்குத்தந்தை - கீரியன்குடியிருப்பு
42. அருட்பணி. அ. லக்ஸன் டி சில்வா
    இயக்குனர் - சமூகத்தொடர்பு அருட்பணி மையம்,
    பதிப்பாசிரியர் - மன்னா
43. அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்
    பங்குத்தந்தை - கோமரசன்குளம்
    சிறப்புப் பணி - கல்வாரித் திருத்தலம்
44. அருட்பணி அ. மரியதாசன் குருஸ் (றொக்சன்)
    உயர்கல்வி - உரோம்
45. அருட்பணி. சூ. மில்ரன் தேவராஜா
    பங்குத்தந்தை - அளவக்கை
46. அருட்பணி. அ. ரஜனிகாந்
    பங்குத்தந்தை - பறப்பாங்கண்டல்
    மறைமாவட்ட பாடல்கள், பாடகர்குழுப் பொறுப்பாளர்
47. அருட்பணி. செ. அன்ரன் தவராஜா
    பங்குத்தந்தை - உயிலங்குளம்
48. அருட்பணி. வெ. எமில் எழில்ராஜ்
    பங்குத்தந்தை - கட்டைக்காடு
49. அருட்பணி. எ. டெஸ்மன் அஞ்சலோ
    பங்குத்தந்தை - சிலாவத்துறை
50. அருட்பணி. ச. அருட்குமரன்
    பங்குத்தந்தை - விடத்தல்தீவு
51. அருட்பணி. பீ. லோறன்ஸ் லியோன்
    பங்குத்தந்தை - முள்ளிக்குளம் (புதிய பங்கு)
52. அருட்பணி. ர. றெறன்ஸ் கலிஸ்ரஸ் குலாஸ்
    பங்குத்தந்தை - பண்டிவிரிச்சான்
53. அருட்பணி. லெ. றொனிஸ் வாஸ்
    பங்குத்தந்தை - குஞ்சுக்குளம்
54. அருட்பணி. இ. அன்ரனி சோசை
    மறைமாவட்ட காணிகள் பெருந்தோட்டங்கள் பணிப் பொறுப்பாளர்
55. அருட்பணி. யே. அமல்ராஜ் குருஸ்
    பங்குத்தந்தை - காத்தான்குளம்
56. அருட்பணி. பா. றொசான்
    பங்குத்தந்தை - மடுறோட் (புதிய பங்கு)
57. அருட்பணி. நி. மேரி பெயிலன் குருஸ்
    பங்குத்தந்தை - அந்தோனியார்புரம்
58. அருட்பணி பே. சாள்ஸ் தயாளன் கூஞ்ஞ
    உதவி அதிபர் - மடுமாதா சிறிய குருமடம், மன்னார்
59. அருட்பணி. நீக்கலஸ்
    ஆயரின் செயலாளர்
    பதிப்பாசிரியர் - 'செயாரிங்' SHARING (மறைமாவட்டக் குருக்களுக்கான ஆங்கிலச் செய்தி மடல்),
    வழிநடத்துனர் - மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஒன்றியம்
60. அருட்பணி. ப. ஜோன் ஸ்ரனின் சோசை
    பதுளை மறைமாவட்டத்தில் பணி
61. அருட்பணி ம. சதாஸ்கர்
    உதவிப் பங்குத்தந்தை - செட்டிகுளம்
62. அருட்பணி. றோ. மேரி பஸ்ரியன்
    உதவிப் பரிபாலகர் மடுத்திருப்பதி.
63. அருட்பணி. ம. தேவராஜன்
    உதவிப் பங்குத்தந்தை - வவுனியா
64. அருட்பணி. வே. ரஞ்சன் சேவியர்
    உதவிப் பங்குத்தந்தை - தூய செபஸ்தியார் பேராலயம்
65. அருட்பணி. மரிய கிளைன் வி.ச.
    உதவிப் பங்குத்தந்தை - வங்காலை
66. அருட்பணி பசில் கிளைன் (வி.ச.)
    உதவிப் பங்குத்தந்தை - பேசாலை
67. அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் அ.ம.தி
    இயக்குனர் - மறைமாவட்ட மூத்தோர் சங்கம்
68. அருட்பணி. ஆரோக்கியசாமி (கப்புசியன்)
    பங்குத்தந்தை - தரணிக்குளம்
69. அருட்பணி. பி.ல. நீக்கிலஸ் குருஸ் (சந்திரபோஸ்) அ.ம.தி
    பங்குத்தந்தை - இலுப்பைக்குளம்
70. அருட்பணி. ஜெ. ஜெரால்ட் (அ.ம.தி.)
    பங்குத்தந்தை - கனகராயன்குளம்
71. அருட்பணி. ஏ. தேவசந்தராசா (அ.ம.தி)
    பங்குத்தந்தை - தட்சனாமருதமடு
72. அருட்பணி .................. (திருவுளப்பணியாளர் சபைக் குரு)
    பங்குத்தந்தை – சிறுத்தோப்பு
73. அருட்பணி. ப. றெக்ஸ் குலாஸ் அ.ம.தி.
    ஒப்புரவு அருட்சாதனம் வழங்குனர் - மடுத்திருப்பதி

### 1. ஆயரின் ஆலோசனைக்குழு (College of Consulters)

அருட்பணி. அ. விக்ரர் சோசை
அருட்பணி ச. எமிலியானுஸ்பிள்ளை
அருட்பணி. ச. தேவராஜா கொடுதோர்
அருட்பணி. அ. ஞானப்பிரகாசம்
அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா
அருட்பணி. ச. மாக்கஸ்
அருட்பணி. செ. அன்ரன்

### 2. மறைமாவட்ட நிதிக்குழு (Finance Committee)

அருட்பணி. அ. விக்ரர் சோசை
அருட்பணி. சீ ஜெயபாலன்
அருட்பணி. ச. எமிலியானுஸ்பிள்ளை
அருட்பணி. ச. தேவராஜா கொடுதோர்
அருட்பணி. சு. ஜொ. பெப்பி சோசை
அருட்பணி ச. மாக்கஸ்

### 3. குருக்களின் நலன்புரிக் குழு (Priests Welfare Board)

அருட்பணி. அ. விக்ரர் சோசை
அருட்பணி சீ. ஜெயபாலன்
அருட்பணி. அ. ஞானப்பிரகாசம்
அருட்பணி. லீ. சுரேந்திரன் றெவல்
அருட்பணி. ச. சத்தியராஜ்.
அருட்பணி. செ. இராஜநாயகம்
அருட்பணி. ச. சவுல்நாதன்

### 4. குருமட. குருத்துவ மாணவர்கள் உருவாக்கல் குழு (Seminary Formation)

அருட்பணி. அ. விக்ரர் சோசை
அருட்பணி. பா.கிறிஸ்து நேசரெட்ணம் (தமிழ் நேசன்)
அருட்பணி. சூ. அ. கி. ஜெபாலன் குருஸ்
அருட்பணி. அ. இராயப்பு
அருட்பணி. லோ. ஞானாதிக்கம்
அருட்பணி. ச. தேவராஜா கொடுதோர்
அருட்பணி. கிறிஸ்துநாயகம்
அருட்பணி. அ. ஞானப்பிரகாசம்

### 5. மடு உள்ளகக் கட்டமைப்பு பணிக்குழு (Madhu Infra Structure Comittee)

அருட்பணி. அ. விக்ரர் சோசை
அருட்பணி. சு. ஜொ. பெப்பி சோசை
அருட்பணி. ச. எமிலியானுஸ்பிள்ளை
அருட்பணி. பி. யேசுராஜா
அருட்பணி. ப. டெஸ்மன் குலாஸ்
அருட்பணி. செ. அன்ரன்
அருட்பணி. ச. சத்தியராஜ்
அருட்பணி. இ. செபமாலை
அருட்பணி. அ. ஆரோக்கியம்

### 6. மன்னா பத்திரிகைக் குழு (MANNA Paper Committee)

அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா
அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா
அருட்பணி டே. அலெக்ஸ்சாண்டர் சில்வா
அருட்பணி. ச. மாக்கஸ்
அருட்பணி பா.கிறிஸ்து நேசரெட்ணம் (தமிழ் நேசன்)
அருட்பணி. யே. ஜெகானந்தன்

### 7. வாழ்வுதயம் பணிப்பாளர் குழு (Valvuthayam Board)

அருட்பணி. அ. விக்ரர் சோசை
அருட்பணி. செ. அன்ரன்
அருட்பணி. ச. எமிலியானுஸ்பிள்ளை
அருட்பணி. சு.ஜொ. பெப்பி சோசை
அருட்பணி. ம. ஜெயபாலன்
அருட்பணி. யே. அமல்ராஜ் குருஸ்

### 8. மறைமாவட்ட காணி நிர்வாகக் குழு (Land Committee)

அருட்பணி. அ. விக்ரர் சோசை
அருட்பணி. சீ. ஜெயபாலன்
அருட்பணி. இ. அன்ரனி சோசை
அருட்பணி. தி. நவரெட்ணம்
அருட்பணி. செ. ஸ்ரீபன்ராஜா
அருட்பணி. ச. மரியதாசன் (சீமான்)
அருட்பணி. சூ. மரியதாஸ் லியோன்
அருட்பணி. யே. ஜெகானந்தன்

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# உயிலங்குளம் பங்கில் ஆயருக்கான வரவேற்பும் புனித வளனார் சபை சகோதரியின் முதல் துறவற அர்ப்பணமும்







உயிலங்குளம் பங்குச் சமூகம் கடந்த மே மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை இரண்டு முக்கிய நிகழ்வுகளை தனது பங்கில் நடாத்தியது. தங்களது பங்கிற்கு முதன் முதலாக வருகைதந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வையும், துறவற முதல் அர்ப்பண நிகழ்வையும் உயிலங்குளம் பங்குச் சமூகம் நடாத்தியது.

லியோன்ஸ் புனித வளனார் துறவற சபைக்கு இலங்கையிலிருந்து முதலாவதாகத் தன்னை அர்ப்பணித்த மன்னாரைச் சேர்ந்த அருட்சகோதரி சியாமி றம்மியா மிராண்டா அவர்களினது முதல் அர்ப்பண நிகழ்வே அங்கு இடம்பெற்றது.

உயிலங்குளம் பங்கின் பெரியவர்கள், இளைஞர்கள் ஆயர் அவர்களைக் கள்ளிகட்டைக்காடு சந்தியிலிருந்து உந்துருளிப் பவனியாக அழைத்துவந்தனர். உயிலங்குளம் பிரதான வீதியிலிருந்து தூய பேதுருவானவர் ஆலயத்திற்குச் செல்லும் சந்தியில் வைத்து பங்கின் பெரியவர்கள் மற்றும் கலைஞர்கள் கவியால் ஆயரை வாழ்த்தி வரவேற்று அழைத்துவந்தனர். அதன்பின்னர் உயிலங்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் மேலைநாட்டு வாத்திய மகிழ்வோசையுடன் ஆயர் அழைத்துவரப்பட்டார்.

ஆலயத்தின் முற்றத்தில் அமைந்துள்ள பிரதான பாதையில் வைத்து மேதகு ஆயர், பங்குத்தந்தை அருட்பணி ச. மரியதாஸ் லியோன், முதல் அர்ப்பணத்தை மேற்கொள்ளவிருந்த அருட்சகோதரி சியாமி றம்மியா மிராண்டா, அவருடைய பெற்றோர், லீயோன்ஸ் புனித வளனார் துறவற சபை அருட்சகோதரிகளின் பெங்களூர் மாகாணத்தின் தற்போதைய முதல்வர், முன்னைநாள் முதல்வர் ஆகியோர் வரவேற்கப்பட்டு ஆலயப் போட்டிக்கோவிற்கு அழைத்துவரப்பட்டனர்.

இதன்பின்னர் ஆரம்பமாகிய திருப்பலியில் அருட்சகோதரி சியாமி றம்மியா மிராண்டா அவர்களின் முதல் அர்ப்பண திருவழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றது.

லியோன்ஸ் புனித வளனார் துறவற சபை அருட்சகோதரிகள் இலங்கையின் மன்னாரில் முதன் முதலாக 2014ஆம் ஆண்டு மன்னார் முன்னைநாள் ஆயர் பேரருட்கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் அழைப்பின்பேரில் பணியை ஆரம்பித்தனர். தற்போது மன்னார் மறைமாவட்டத்தில் மன்னார் நகரிலும், உயிலங்குளம் பங்கில் நொச்சிக்குளத்திலும் பணியாற்றுகின்றனர். இவ்வருடம் திருக்குடும்ப அருட்சகோதரிகள் வங்காலைப் பங்கிலிருந்து தங்களுடைய பணியை முடித்துக்கொண்டு வெளியேறிய நிலையில், வெற்றிடமாக இருந்த அந்த இடத்தையும் மனமுவந்து ஏற்று தங்களுடைய பணி எல்லையை விசாலப்படுத்தியுள்ளனர். அத்தோடு இவ் அருட்சகோதரிகள் யாழ் மறைமாவட்டத்தில் மணற்காடு பங்கிலும் தங்களது இல்லத்தை அமைத்துப் பணிசெய்து வருகின்றனர்.

இலங்கையிலிருந்து லியோன்ஸ் புனித வளனார் துறவற சபை அருட்சகோதரிகளின் குழுமத்திற்குத் தன்னை அர்ப்பணித்த முதல் துறவி என்ற வரலாற்றுப் பதிவை அருட்சகோதரி சியாமி றம்மியா மிராண்டா ஏற்படுத்தியுள்ளார். இந்த நிகழ்வுகள் அனைத்தையும் பங்கு மக்களோடும், அருட்சகோதரிகளோடும் இணைந்து உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணி ச. மரியதாஸ் லியோன் அடிகளார் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

# எழுத்தூர் பங்கில் மன்னார்ஆயருக்கான வரவேற்பு

எழுத்தூர் பங்கு இறைமக்களினால் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்கள் கோலாகலமாக வரவேற்கப்பட்டார். கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி ஞாயிறு அன்று இடம்பெற்ற இந்நிகழ்வினை பங்கின் நான்கு ஆலயங்களான எழுத்தூர், கீரி, பட்டித்தோட்டம் மற்றும் ஜீவபுரம் ஆகியன இணைந்து நடாத்தின.

எழுத்தூர் பங்கிற்குட்பட்ட கிராமங்களில் ஒன்றான பட்டித்தோட்டம் கிராமத்தில் ஆயர் இல்லம் அமைந்து இருப்பதனால் ஆயர் இல்ல நுழைவாயிலில் இருந்து ஆயர் அவர்கள் எழுத்தூர் பாடசாலை நுழைவாயில் வரைக்கும் மோட்டார் சைக்கிள் பவனி ஊடாக அழைத்துவரப்பட்டார். நான்கு ஆலயங்களையும் சேர்ந்த இளையோர், வளர்ந்தோர் என அறுபது உறுப்பினர்களுக்கும் மேற்பட்டோர் வெள்ளைநிற சேட்டும், கறுப்பு நிற ஜீன்சும் அணிந்தவர்களாக இப்பவனியில் பங்கெடுத்தனர். பாடசாலை நுழைவாயிலின் முன்பாக ஆயர் அவர்கள் தனது வாகனத்தில் இருந்து இறங்கியவுடன் ஆயர் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மன்னார் தூய சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியின் பேண்ட் வாத்திய இசை முழங்க ஆலய வளவு நுழைவாயில் வரைக்கும் அழைத்துவரப்பட்டார். ஆயரைத் தொடர்ந்து இறை மக்கள் பவனியில் வந்துகொண்டிருந்தனர். ஆலய வளாக நுழைவாயிலில் இருந்து ஆலய நுழைவாயில் வரைக்கும் ஆண்டகை அவர்கள் பங்கின் சிறார்களினால் மலர் தெளிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்.

தொடர்ந்து திருப்பலி இடம்பெற்றது. திருப்பலி நிறைவில் பங்குத்தந்தை பி. ஜேசுறாஜா அடிகளார் ஆயரது வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக எடுத்தியம்பினார். தொடர்ந்து ஆயரது உரை இடம்பெற்றது. ஆயர் தமது உரையில் பங்கின் நான்கு ஆலயங்களைச் சேர்ந்த இறை மக்களும் ஒன்றாக இணைந்து தம்மை வரவேற்றமையையிட்டு மகிழ்வதாகக் கூறினார். அத்தோடு காலப்போக்கில் மக்களது தேவைகளை இனங்கண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் கூறி தனது இறை ஆசீரை வழங்கினார். அத்தோடு நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன.

# சிலாவத்துறைப் பங்கில் ஆயருக்கான வரவேற்பும் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனமும்

சிலாவத்துறைப் பங்குச்சமூகம் கடந்த மே மாதம் 13ஆம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை காலை தங்கள் பங்கிற்கு முதன் முதலாக வருகைதந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களை அன்போடு வரவேற்றனர். பங்கிற்கு வருகைதந்த ஆயரை உந்துருளிப் பவனியோடு ஆலயத்தின் முன்னுள்ள பிரதான வீதிவரை அழைத்துவந்தனர். அதன்பின்னர் ஆயர் அவர்கள் தமிழ்ப் பண்பாட்டு முறைப்படி மாலையிட்டு வரவேற்கப்பட்டார். பின் பாடசாலை மாணவர்களின் மேற்கத்திய மகிழ்வொலியோடு ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

தொடர்ந்து ஆயர் அவர்கள் இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்து பங்கிலுள்ள 39 இளம் பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கினார்.

இத்திருநிகழ்வில் சிலாவத்துறைப் பங்கில் உள்ளடக்கப்பட்ட கிளை ஆலயங்களான முள்ளிக்குளம் பரலோகமாதா ஆலய மக்கள், காயாக்குளி புனித யூதாததேயு ஆலய மக்கள், கொக்குப்படையான் புனித யாகப்பர் ஆலய மக்களுள், பொற்கேணி கார்மேல் மாதா ஆலய மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். பங்குத்தந்தை அருட்பணி. செ. தவறாஜா அடிகளார் பங்கு அருட்பணி உறுப்பினரோடும், பங்கில் பணியாற்றும் அருட்சகோதரிகளோடும் இணைந்து அனைத்து நிகழ்வுகளையும் ஒழுங்கமைத்து நெறிப்படுத்தியிருந்தார்.

இந்நிகழ்வின் படங்களை அருகே காணலாம்.

# திருவிவிலியப் போட்டி – 2018

## மறைமாவட்ட மட்டப் போட்டி – பெறுபேறுகள்

மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தினால் கிறிஸ்தவ சமய விவகார திணைக்களத்தின் அனுசரணையுடன் பேச்சு, வினாவிடை (மனனம்) ஆகிய போட்டி நிகழ்வுகள் பங்கு மற்றும் மறைக்கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டு பின்னர் கடந்த 06.05.2018 அன்று மறைமாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டது.

இப்போட்டிகளில் வெற்றிபெற்று கொழும்பு தேசிய மட்டப் போட்டிகளுக்குச் செல்ல தகமைபெற்று தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு:

### பேச்சு – தமிழ்:

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் - வி. நிதுஸ்கா,
- மன்னார்ப்பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.

2ஆம் இடம் - ம. ரெசான்
வங்காலைப் பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.

3ஆம் இடம் - டெ. பஸ்ரினி டலிமா
முருங்கன் பங்கு, முருங்கன் மறைக்கோட்டம்.

**மேற்பிரிவு:**

1ஆம் இடம் - க. வனுசா
செட்டிகுளப்பங்கு, வவுனியா மறைக்கோட்டம்.

2ஆம் இடம் - செ. ஆன் றொஸ்லின் டயஸ்,
தாழ்வுபாடு பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.

3ஆம் இடம் - கோ. றீவா
இலுப்பைக்குளப்பங்கு வவு. மறைக்கோட்டம்.

### பேச்சு – ஆங்கிலம்:

**கீழ்ப்பிரிவு:**

1ஆம் இடம் - P. சுவிற்றிகா
மன்னார்ப்பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.

2ஆம் இடம் - A. பஸ்ரினி
மன்னார்ப்பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.

3ஆம் இடம் - D. துவாரகா
விடத்தல்தீவு பங்கு, மடு மறைக்கோட்டம்

**மேற்பிரிவு:**

1ஆம் இடம் - X. றிசேறா
மன்னார்ப்பங்கு மன்னார் மறைக்கோட்டம்

2ஆம் இடம் - R. றெனோசா,
மன்னார்ப்பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.

3ஆம் இடம் - B. கனியுலா
மன்னார்ப்பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.

### வினாவிடை (மனனம்):

**கீழ்ப்பிரிவு: (குழு)**

1ஆம் இடம் - விடத்தல்தீவு பங்கு, மடு மறைக்கோட்டம்
2ஆம் இடம் - தலைமன்னார் பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.
3ஆம் இடம் - முருங்கன் பங்கு, முருங்கன் மறைக்கோட்டம்.

**மேற்பிரிவு: (குழு)**

1ஆம் இடம் - முருங்கன் பங்கு, முருங்கன் மறைக்கோட்டம்
2ஆம் இடம் - வங்காலை பங்கு, மன்னார் மறைக்கோட்டம்.
3ஆம் இடம் - வேப்பங்குளம் பங்கு, வவுனியா மறைக்கோட்டம்.

இப்போட்டிக்கு முன்னாயத்தங்களை மேற்கொண்ட பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நடுவர்களாகக் கடமைபுரிந்தவர்கள் இன்னும் பலவிதங்களில் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆனி மாதம் 30ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேசியமட்டப் போட்டிக்கு செல்லவிருக்கும் மாணவர்களை மென்மேலும் ஊக்கப்படுத்தி ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- தகவல் : மன்னார் மறைக்கல்வி நிலையம்




அரசியல் விழிப்புணர்வுக் கட்டுரை

# இலங்கையின் மத அரசியலும் மக்களும்

– நிவேதனா டிக்ஷன் –
(B.A (Hons) in Political Science)

மதம் என்கின்ற விடயமானது இப்பூமியில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதர்களின் மன உணர்வுகளிலும் அவர்களது செயற்பாடுகளிலும் மிக மிக ஆழமாக பதியப்பட்டுள்ள ஒரு அம்சமாகும். இம்மதம் என்கின்ற எண்ணக்கருவானது மிருக வாழ்க்கையில் வாழ்ந்த மனிதனையும் அவனது சமூகத்தினையும் அழிவுநிலையில் இருந்து மீட்டு புதுப்படைப்பாக மாற்றியமைத்த ஒரு கருவூலம் எனலாம். இத்தகைய தன்மையானது ஆரம்ப காலங்களில் - அதாவது மதம் உருவானதாக நம்பப்படுகின்ற காலங்களில் - மதமானது மனிதனைத் தவறான வழியில் செல்வதை தடுப்பதற்கும் சமூகக் குழுக்களை நல்வழிப்படுத்துவதற்குமான ஒரு ஊடகமாக மட்டுமே காணப்பட்டது.

மதம் என்பது ஓர் உணர்வு. அதனை மக்கள் அடையாளப்படுத்தும் விதம் மட்டுமே வேறு. உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் மதத்தின்பால் ஈர்க்கப்பட்டு அவர்களது மனதினையும், ஆன்மாவையும் தூய்மையாக வைத்திருக்க முற்பட்டதன் விளைவே மதமாகும். இது மிகவும் புனிதமானதொரு அம்சமாகும்.

இருப்பினும் சமூகக் கட்டமைப்பானது அரசாக மாற்றமடைந்த நிலையில் இப்புனிதமான மதம் என்கின்ற விடயமானது ஆட்சி விடயத்தில் ஒரு முக்கியமான பங்கை வகித்தது, இன்றும் வகித்து வருகின்றது எனலாம். சர்வதேச அரசியலில் ஈடுபட்டுள்ள அனைத்து நாடுகளுக்குள்ளும் ஒவ்வொருவிதமான இனக்குழுமங்கள் ஒவ்வொன்றும் பின்பற்றுகின்ற மதங்கள் இன்று அரசியலில் முக்கிய பங்கைப் பெற்றுள்ளன. அதுமட்டுமன்றி ஒவ்வொரு நாடுகளும் மதத்தின் செல்வாக்கினையும் அதன் பெறுமதிகளையும் தங்களது அரசியல் யாப்பினூடாக உறுதிப்படுத்தியுள்ளன.

மேற்படி காணப்படுகின்ற மதமானது மனிதனது வாழ்க்கையையும் தாண்டி இன்று பல படிகள் முன்னோக்கி அரசியல் செயற்பாடுகளில் மிக முக்கியமான பங்கை நேரடியாகவும், மறைமுகமாகவும் வகித்து வருகின்றதனை நம்மில் எத்தனைபேர் அறிந்து வைத்துள்ளோம் என்றால் அது ஒரு கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது.

## இலங்கை அரசியல் வரலாற்றில் மதம் நுழைந்த விதம்

மேற்படி காணப்படுகின்ற இம்மதமானது இலங்கை அரசியலில் எவ்வாறான தாக்கத்தினை அல்லது அதனது செல்வாக்கு எவ்வகையானதாக உள்ளது என்பதை நோக்கும்போது, குறிப்பாக 1798இல் இலங்கையின் காலனித்துவச் செயலாளரான "ஹியு கினெக் ஹோர்ன்" என்பவர் தனது பிரபல்யமான 1799இன் குறிப்பேட்டில் இரு தேசிய இனங்களும் (சிங்களவர், தமிழர்) புராதன தோற்றுவாய்களைக் கொண்டவர்களென்றும் சமயம், மொழி மற்றும் பழக்கவழக்கங்களில் முழுமையாக வேறுபட்டனவென்றும் வர்ணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் நம் இலங்கை ஒரு பல்லின சமூகத்தைக் கொண்ட நாடு என்பதால் இங்கு பல மதங்களும் உண்டென்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் வர்த்தகத்தை நோக்கமாகக்கொண்டு இலங்கைக்குக் கடல் மார்க்கமாக வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் தமது வர்த்தகத்தைக் கரையோரப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தியதோடு காலப்போக்கில் தங்களது மதத்தையும் பரப்பினர். 'வாஸ்கொடகாமா'வின் கருத்தின்படி "வாசனைப் பொருட்களையும் கிறிஸ்தவர்களையும் தேடியே வந்தோம்" என்று கூறியதன்மூலம் அவர்களின் மதம் பரப்பும் எண்ணப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. இவர்கள் கிறிஸ்தவம் மற்றும் புரட்டஸ்தாந்து சமயங்களை இலங்கையில் பரப்பினர். இவர்களுக்கு எதிராக சுதேசிகள் அகிம்சைப் போராட்டம், கிளர்ச்சி, எதிர்ப்புப் போன்றவற்றை மேற்கொண்டு சுதந்திரத்தைக் கோரியபோது பிரித்தானியர் இலங்கையில் காணப்பட்ட மதப்பிரிவுகளை முன்னிறுத்தி மக்களை பிளவுக்குட்படுத்துவதனை தமது உபாயமாகக் கைக்கொண்டனர்.

இலங்கையில் மதம்சார் அரசியல் நிலையினை கூர்மைப்படுத்தியவர்களில் பிரித்தானியருக்கு முக்கிய பங்குண்டு. அன்றைய இதனது தாக்கமே இன்றும் இலங்கை அரசியலில் தனது ஆதிக்கத்தைச் செயற்படுத்தி வருவதோடு பலவகையான முரண்பாடுகளையும் நாளுக்குநாள் தோற்றுவித்து வருகின்றது எனலாம்.

இலங்கை அரசியலில் மதத்தின் வகிபங்கை நோக்கும்போது, "இலங்கைத் தீவு ஒரு பௌத்தபள்ளி, அதன் அங்கத்தவர்கள் சிங்கள பௌத்தர்கள் மட்டுமே" என்ற தம்மதீபக் கோட்பாடு இங்கு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கோட்பாடே இலங்கையில் இன்று அரசியல் முரண்பாட்டுத் தன்மைக்கு அத்திவாரமாக உள்ளது.

சிங்கள இனத்தின் ஸ்தாபகரான விஜயன் புத்தபகவான் பரிநிர்வான நிலையை அடையும் தறுவாயில் இலங்கையில் வந்திறங்கினான் என மகாவம்சம் கூறுகின்றது. இற்றைக்கு 2228 ஆண்டுகளிற்கு முன்பே பௌத்த சமயம் இலங்கைக்குள் புகுந்ததாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக விஜயனாலும் அவனது தோழர்களாலும் பௌத்த மதம் இங்கு ஸ்தாபிக்கப்பட்டது எனவும் கூறப்படுகின்றது. இத்தகைய செய்திகள் கி.பி 5ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த பாளி நூல்களில் மட்டுமல்ல சிங்கள இலக்கியங்களிலும் புராதனக் கதைகளிலும் இடம்பெற்றிருந்தமையானது சிங்கள பௌத்த இராச்சியம் என்ற கருத்தைத் தவிர்க்க முடியாத வகையில் உருவாக்கியிருந்தன.



வரலாற்றில் காலத்திற்குக் காலம் இடம்பெற்ற தென்னிந்திய படையெடுப்புக்கள், அரசியல் போட்டிகள் பற்றிய தகவல்கள் சிங்கள பௌத்த மக்கள் மத்தியிலே இனவாதத்தைத் தூண்டும் வகையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. திராவிடர் - குறிப்பாகத் தமிழர் - படையெடுப்பாளர்களாக, தம்மதீபக் கோட்பாடுகளை அழிப்பவர்களாக பாளி நூல்கள் மற்றும் சிங்கள புராண இலக்கியங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். மகாவம்சத்தில் துட்டகாமினி - எல்லாளன் போராட்டம், சூளவம்சத்திலே கலிங்க மாகனின் ஆட்சி என்பன இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

## விளைவுகள்

இத்தகைய பின்னணியோடு அடுத்துவந்த காலப்பகுதியை நோக்குகையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்த பௌத்த சமயம் திரும்பவும் அரியாசனத்தில் ஏற்றப்பட வேண்டும் என்ற புத்த பிக்குகளதும், மதவாதிகளதும் கொள்கைதான் சிங்கள – பௌத்த தேசியவாதமாகப் பரிணமித்தது. ஆகவே இந்த அமைப்பில் வேறு மதங்களையும், மொழிகளையும், கலாசாரங்களையும் பின்பற்றும் ஏனையவர்களுக்கும் சிறுபான்மையின் மக்களுக்கும் இடமில்லை என்ற கொள்கை திட்டமிட்டு வளர்க்கப்பட்டது.

பௌத்த சமய அடிப்படைவாதம் பௌத்த சமய மறுமலர்ச்சியாக உருவெடுத்தது. அதாவது பௌத்தமதக் கொள்கை என்ற நிலையிலிருந்து தடம்மாறி சிங்கள – பௌத்த தேசியமாக உருப்பெற்றது. குறிப்பாக பௌத்த அடிப்படைவாதிகள் (Colonel Olcott, Blavatsky) பௌத்த சமயத்தை மக்கள் மத்தியில் பரப்புவதற்குப் பல வழிகளைக் கையாண்டார். புதிய கல்வி நிலையங்கள் மூலமும் வெகுஜனத் தொடர்பூடகங்களான பத்திரிகை, வானொலி, துண்டுப்பிரசுரங்கள் மூலமும் தமது கொள்கைகளைப் பரப்ப முற்பட்டனர். பௌத்தம் மதமாகப் பின்பற்றப்படாமல் அரசியல் கலாசாரக் கருவியாகப் பயன்படத் தொடங்கியது. பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் நாளடைவில் அரசியல் பௌத்தமாக உருவெடுத்தது. இதன் அடிப்படை ஏனைய மதங்களைப் பின்பற்றும் சிறுபான்மை மக்களை வன்முறையில் ஈடுபட அழைப்புவிடுத்தது.

1948ஆம் ஆண்டில் D.S. சேனநாயக்கா தலைமையில் ஆட்சி அமைத்த UNP (ஐக்கிய தேசியக்கட்சி) அரசாங்கம் மதம் குறித்து தனியான கவனத்தைச் செலுத்தியிருக்கவில்லை. 1950ஆம் ஆண்டில் பௌத்த குருமார்களின் குழுவொன்று பிரதமரைச் சந்தித்துப் பௌத்த மதத்திற்கு தனிப்பட்ட அரச பாதுகாப்பும், ஆதரவும் வழங்கும்படி கோரிக்கை விடுத்தபோது பிரதமர் அதற்கு உடன்படாதவராக அரசு என்பது மதச்சார்பற்றதாக இருக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடதக்கது.

இவ்வகையில் பௌத்த குருமார்களின் 1950களின் முற்பகுதியில் நடுப்பகுதியிலும் இடம்பெற்ற அரசியல் பிரவேசமானது இலங்கை அரசியலில் பாரிய தாக்கத்தினையும் விளைவுகளையும் ஏற்படுத்தியது. அக்காலத்தில் பௌத்த பிக்குகள் சுயமான இயக்கமுடைய குழுவாக அரசியலில் செயற்பட்டனர். அரசியல் மாற்றத்திற்கான கருவியாகவும் விளங்கினர்.

"Urmila Phadnis" என்பவரது எடுத்துக்காட்டின்படி இலங்கையின் பின்காலணித்துவக் கட்ட அரசியலில் சிங்கள பௌத்தம் என்ற சொல்லாடலைப் புகுத்தி அரசியல் விவாதத்தின் போக்கை மாற்றியதோடு சிங்கள தேசியவாதக் கருத்தியலையும் இவர்களே வரையறுத்து உருவாக்கினர்.

இதன் விளைவுதான் சகிப்புத்தன்மையற்ற பௌத்தம், பிறரை புறத்தே ஒதுக்கி வைக்கும் பௌத்தம், குறுகிய இனக்குழும தேசிய கருத்தியலைக் கொண்ட பௌத்தம் என்ற அடைமொழிகளால் வருணிக்கக்கூடிய சமயக் கோட்பாடு அரசியலுக்குள் நுழைக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

D. S. சேனாநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட பௌத்தமத பிரச்சினையின்போது அவர் விசாரனைக் குழுவை நியமிப்பதாகவும் அக்குழு சோல்பரி அரசியல் திட்டத்தின் சிறுபான்மையோர் காப்பீடாக விளங்கிய 29வது சரத்து 11 உப பிரிவின் கீழ்வரும் விடயங்களுடன் முரண்படும் வகையில் அமையலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு மதத்திற்கும், இனத்திற்கும், கலாசார பிரிவிற்கும் இடைப்படாத கட்டுப்பாடுகளையும், தடைகளையும் இன்னொரு மதத்திற்கும், இனத்திற்கும், கலாசார பிரிவினருக்கும் இடப்படும் வகையில் சட்டங்கள் இயற்றப்படலாகாது. ஒரு மதத்தின் யாப்பு விதியை மாற்றியமைக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமானால் அம்மதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைக் குருமாரின் அங்கீகாரமின்றி சட்டங்கள் இயற்றப்படலாகாது.

இத்தகைய நிலைமையினை மாற்றத்துக்குள்ளாகும் வகையில் S.W.R.D பண்டாரநாயக்கா அவர்கள் அரசியலில் இன, மத, மொழி அடையாளங்களை முதன்மைப்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு புதிய பாதையை ஆரம்பித்து வைத்ததுடன் அதன் வாயிலாக இலங்கையில் தேசிய இன முரண்பாடுகள் துரிதமடைய வழிவகுத்தார். குறிப்பாக 1950களில் இருந்து பௌத்த மதத்திற்கு விசேட அரசியல் அமைப்பு ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்ததோடு நாடு முழுவதும் பௌத்த மதமே அரச மதமாக்கப்பட வேண்டும் எனவும் குரல் எழுப்பியிருந்தார்.

இதன் விளைவே மதச்சார்பற்ற கட்சியாக கருதப்பட்டுவந்த ஐக்கிய தேசியக்கட்சி பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக கட்சியின் கொள்கையினை "பௌத்த மதமே அரச ஆதரவுபெற்ற மதமென" மாற்றியமைத்தமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அரசரத்தினம் அவர்களின் கருத்துப்படி இப்புதிய தேசியவாதத்தின் அரசியல் நோக்காக இலங்கையர் தேசியத்தில் இருந்து சிங்கள, பௌத்த மூலங்களை வேறுபடுத்தி ஏனைய சமூகம் பிரிவினரின் மேலாகத் தங்களுடைய தனிமுதன்மையை நிலைநாட்டுவதாக காணப்பட்டது என்கின்றார்.

1956ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் பிரசாரங்கள் மக்கள் மத்தியில் பௌத்தமத இனவாத உணர்வினை தூண்டிவிட்ட மிக முக்கியமான நிகழ்வாகும். இதன் பயன் பண்டாரநாயக்காவினால் அமைக்கப்பட்ட கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் இரு பௌத்த பல்கலைக்கழகங்கள் மற்றும் 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள மொழிச்சட்டம் இலங்கை அரசியல் வரலாற்றில் பாரியதொரு முரண்பாட்டிற்கு வழிவகுத்தது எனலாம். பௌத்த மதத்திற்குச் சார்பான மற்றுமொரு நடவடிக்கையாக பௌத்த சாசன கமிசன் நியமனம் செய்யப்பட்டதைக் குறிப்பிட முடியும். இவை அனைத்தும் தமிழ் பேசும் மக்களின் நலன்களிற்கு மாறான வகையிலே செயற்பட்டு வந்திருப்பதனையே காணமுடிகின்றது.

1957 பண்டா – செல்வா ஒப்பந்தம் மற்றும் 1965 டட்லி – செல்வா ஒப்பந்தம் இவை இரண்டும் செயலிழந்தமை அரசியல்வாதிகள் பௌத்த அமைப்புக்களை பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் பௌத்த மதத்திற்கு முதன்மையும் ஆதரவும் தேசிய அரசாங்கத்தால் விசேடமான முறையில் வழங்கப்பட்டதோடு ஏனைய மதங்களுக்கான சுதந்திரமும் ஆதரவும் அளிக்கப்படுதல் என்பது வெறும் தேர்தல் பிரசாரம் என்ற நிலையிலேயே இருந்தமையும் அவதானிக்க முடிகின்றது.

தேசிய அரசாங்கத்திலே உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு. M. திருச்செல்வத்தின் பெயரில் 1968இல் கோணேஸ்வரர் பிரதேசத்தை இந்துக்களின் புனித பூமியாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்க கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டவேளை திருகோணமலையினை சிங்கள பிரதேசமாக்கும் நோக்கம்கொண்டு செயற்பட்டுவந்த சேருவெல விகாராதிபதி கோணேஸ்வரர் பிரதேசம் பௌத்த மதத்தின் பழமையான தலமிருந்த பகுதியென அரசிடம் அறிக்கை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து அந்நடவடிக்கை நிறுத்தப்பட்டமையினைக் குறிப்பிடலாம். சில வகையான மதம் சார்பான முரண்பாடு அற்ற தீர்மானங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும்போது பௌத்த மத அமைப்புக்கள் அதனைக் கடும் எதிர்ப்பின் மத்தியில் தடுத்து நிறுத்தியதனை வரலாற்றின் ஊடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இதுவரை இல்லாத அளவு முக்கியத்துவத்தினை பௌத்த மதத்திற்கு வழங்கியிருந்தது. The Republic of Srilanka shall give to Buddhism the foremost place and according it should be the duty of state to protect and poster Buddhism while assuring to all religions the rights secured by section 18 (i) (d)

இதனைத் தொடர்ந்து 1975இன் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் திட்டத்திலும் பௌத்த மதம் குறித்து தனி முதன்மை வழங்கப்பட்டிருந்தது. இந்த அரசியல் யாப்பே இப்போதும் இலங்கை அரசியலில் நடைமுறையில் இருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இவ்வாறு சுதந்திரத்தின் பிற்பாடு அறிமுகப்படுத்தப்பட்ட இரு அரசியல் திட்டங்களும் இலங்கையர்களை பௌத்த மதவாதம் சூழலுக்குள் ஆழ்த்தியுள்ளமையானது இலங்கை அரசியலில் முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு சாதகமாய் அமைந்த காரணியாகும். 1917ஆம் ஆண்டு வரலாற்று வல்லுனரான கலாநிதி சேர். போல் ஈ பீரிஸ் என்ற சிங்களப் பேரறிஞர் றோயல் ஏசியாட்டிக் கொசைட்டியில் உரையாற்றியபோது பின்வரும் கருத்தை முன்வைத்தார்.

"இலங்கைக்கு விஜயன் வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே ஐந்து சிவ ஈஸ்வரங்கள் சிறப்புடன் இருந்தன. அவை திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம் என்பவையாகும். இந்த ஐந்து சிவாலயங்களும் பஞ்சேஸ்வரங்களும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களால் சிதைக்கப்பட்டிருந்தன.

இக்கருத்தின் மூலம் இலங்கையின் இந்து மதமும் ஓர் தொன்மையான மதம் என்பது புலனாகின்றது. இவை 2550 ஆண்டுகள் பழமையானது என்பதும் உண்மையே.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

பொதுநிலையினர் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

- பீ. கிறிஸ்பி குருஸ், தன்னார்வப் பணியாளர், பேசாலை -

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15). பொதுநிலையினரின் நடப்பாண்டிலே பயணம் செய்துகொண்டிருக்கும் பொதுநிலையினருக்கு இயேசு ஆண்டவரின் உத்தானத்தின் நற்செய்தி இது. எமது மன்னார் மறைமாவட்ட அருட்பணி இலக்கு "பொதுநிலையினரின் அழைப்பும், பணியும், உருவாக்கமும்" ஆகும். நற்செய்திதான் எமது வாழ்வின் இலக்கு. அது ஆழமாக்கப்படவேண்டும், அதிகமாக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தவே மீண்டும் ஓராண்டு நீடிக்கப்பட்டுள்ளது. இதுவே இவ்வாண்டின் தூரநோக்கு. உலகம் முடியும்வரை இயேசுவின் குரலும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். இந்த உண்மையைச் சற்று விரிவாகச் சிந்திப்போம்.

## 1. பொதுநிலையினர்

பொதுநிலையினர் இல்லாத திருச்சபை உயிரோட்டமில்லாத திருச்சபையாகும். பொதுநிலையினர் என்று யார் அழைக்கப்படுகிறார்கள் என்றால் திருமுழுக்குப்பெற்ற அனைவரும் பொதுநிலையினரே. இயேசு தேர்ந்தெடுத்த திருத்தூதர்கள் பொதுநிலையினர். "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச்சொத்தான மக்கள்" (1பேதுரு 2:9). கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்றவர்கள், கிறிஸ்துவின் உடலின் உறுப்புக்கள், இறை அரசைத் தேடி உலகில் இயேசுவுக்கு சான்றுபகர்ந்து வாழ்பவர்கள். நற்செய்தியின் ஒளியில் கிறிஸ்தவ மதிப்பீடுகளின்படி வாழ்வது, ஏழ்மை, தாழ்மை, பிறரன்பு, அர்ப்பணம் போன்ற மதிப்பீடுகளைக் கடைப்பிடித்துத் திருச்சபைக்குக் கீழ்ப்படிவது இவர்களது சிறப்பு அம்சமாகும்.

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கின்றீர்கள். நீங்கள் உலகுக்கு ஒளியாய் இருக்கின்றீர்கள். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க" (மத். 5:13). பொதுநிலையினர் வாழ்வு புளிக்காரமாக அமைய வேண்டும். கிறிஸ்துவை அறிவிக்கும் பொறுப்பான பதவி அவர்களுடையது. உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக வாழ்வது பொதுநிலையினரின் அழைத்தலாகும். பொதுநிலையினர் உலகு சார்ந்தவர்கள்.

இப்பொதுநிலையினர் குடும்பம், உழைப்பு, பதவி, அரசியல் போன்ற உலகியல் நிலைகளால் உள்வாங்கப்பட்டவர்கள். பற்பல பொறுப்புக்கள் அவர்களைச் சுற்றியிருக்கும். இவர்கள் மத்தியில் ஆன்மதாகம் கொண்ட பொதுநிலையினர் தேர்ந்தெடுக்கப்பட்டு திருநிலைப் பணியாளர்களோடு சேர்ந்து பங்கேற்கும் திருஅவையாகச் செயற்படுகின்றார்கள்.

## 2. திருநிலையினர்

இறைமக்களான பொதுநிலையினரிடமிருந்து இறைவன் திருநிலையினரைத் தெரிந்தெடுக்கின்றார். நீரில் இருந்து நீரைப் பிரித்தெடுத்து அதைப் பதப்படுத்துவதுபோல திருப்பணி ஆற்ற பொதுநிலையினரில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டவர்கள்தான் திருநிலையினர். இவர்கள் அபிஷேகம் பெற்றவர்கள். தனித்துவமாக வாழத் தங்களை அர்ப்பணம் செய்தவர்கள். உலகுசார்ந்த தொடர்புகள் இன்றி பொதுநிலை ஆடுகளைக் கண்காணிக்க ஆயராக, ஆன்மீக வழிகாட்டிகளாக அர்ச்சிக்கப்பட்டவர்கள். திருப்பணி ஆற்றுவது, ஆன்மாக்களை இறை அருகில் கொண்டுபோய்ச் சேர்ப்பது போன்ற பாரிய பொறுப்பு இவர்களதே. பொதுநிலையினரோடு இணைந்து திருச்சபையின் வளர்ச்சிக்காக ஊக்குவிப்பாளராக செயற்படுவது இவர்களது சிறப்பான பணியாகும்.



## 3. அழைப்பு

இறைவனின் மாபெரும் கொடை அழைப்பு. எமது வாழ்வு, எமது தெரிவு அல்ல. அது கொடை, தானம். "நான் நானாக வரவில்லை. அவரே என்னை அனுப்பினார்" (யோவா. 8:42) கானான் நாட்டுக்குப் போ என்று ஆபிரகாமை அழைத்தார். வரலாறு பிறந்தது! அடிமைகளை மீட்க முட்செடியின் நடுவே மோசேயை அழைத்தார். சரித்திரம் பிறந்தது! "யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?" (எசாயா 6:8) என இறைவன் குரல் கொடுத்தார். தீர்க்கதரிசிகளும், நீதித்தலைவர்களும் புறப்பட்டுச் சென்றார்கள், வாழ்வு பிறந்தது! தம் மகனை இவ்வுலகுக்கு அனுப்ப அன்னை மரியாவுக்கு அழைப்பு வந்தது. புதிய ஏற்பாடு பிறந்தது! வாக்களித்த தூய ஆவியை உலகுக்கு அனுப்பினார், திருச்சபை பிறந்தது! திருச்சபைக்குள் திருமுழுக்கு மூலமாக இறைமக்கள் பிறந்தனர். இதுதான் அழைத்தலின் மேன்மை.

இயேசு சீடர்களை அழைத்தார். தம்மோடு இருக்கவேண்டும் என்பதற்காக! இதுதான் அழைத்தலின் அத்திவாரம். அழைப்புப் பெற்றவர்கள் அவரோடு இருக்கவேண்டும். இல்லையேல் கனிகொடுக்க முடியாது. கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவருடைய அன்பு நற்செய்தியைப் பகிர்ந்தளிக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். "இறைவார்த்தையை அறிவிக்க வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் கருத்தாயிரு" (திமோ. 4:2).

## 4. உருவாக்கம்

கிறிஸ்துவை அறிந்தாலொளிய அவரை பறைசாற்றமுடியாது. சீடர்கள் இயேசுவோடு இருந்ததால் அவர்கள் கண்டதையும், கேட்டதையும், தொட்டு உணர்ந்ததையும் எடுத்துரைத்தார்கள் (தி.ப. 4:20). கிறிஸ்துவுக்குள் சீடர்கள் உருவாக்கப்பட்டார்கள் எப்படியெனில் தங்கள் நேரத்தை, தங்கள் வாழ்க்கையைக் கொடுத்தார்கள். இயேசுவின் செப மனநிலையைப் புரிந்துகொண்டு எங்களுக்கும் கற்றுத்தாரும் என்று கேட்டார்கள். இயேசு போதித்த வார்த்தைகளுக்கு செவிமடுத்தார்கள். உவமை மூலம் கூறிய விளங்காத உண்மைகளைக் கேட்டு அறிந்துகொண்டார்கள்.

அவர் செல்லுமிடமெல்லாம் பின்னால் சென்றார்கள். அவர் செய்த அதிசயங்கள் அற்புதங்களைக் கண்ணால் கண்டு மெய்சிலிர்த்துப் போனார்கள். அவரை அன்பு செய்தார்கள். விசுவாசித்தார்கள், மெசியா என்று ஏற்றுக்கொண்டார்கள்.

ஆகவே இயேசு பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்கள்மேல் பொழிந்து உலகெங்கும் சென்று எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தார். இதனை மையமாகக்கொண்டு திருநிலையினர் பொதுநிலையினரை உருவாக்குகின்றார்கள். இறைபிரசன்னம், இறைபணி, மறை அறிவிப்புப் பக்திச்சபைகள், அன்பியங்கள், மேய்ப்புப்பணிச் சபைகள் மூலம் மக்களோடு உறவு நிலையை ஏற்படுத்தி பொதுநிலையினரை உருவாக்குகின்றார்கள். அவர்கள் பெற்ற இறையியல் அறிவை மறையுரை ஆற்றும்போது பொதுநிலையினர் அறிந்து கொள்ளுகின்றார்கள். கருத்தமர்வுகள், காலத்திற்கு ஏற்றவாறு வழிபாட்டுப் பொறுப்பினை பகிர்ந்துகொடுப்பது, ஆலயத்தின் தேவைகள் கவனிக்கப்படும்போது உருவாக்கம் தொடர்கின்றது.

மேலும் பக்தி சபைகள், மன்றங்கள், பங்கு மேய்ப்புப்பணிச் சபைகள், அன்பியங்கள் மூலம் பொதுநிலையினர் பலர் உள்வாங்கப்படுகின்றார்கள். தூய ஆவியை பெற்றுக்கொண்ட ஆதித்திருச்சபை, "திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (தி.ப. 4:42). இதுதான் உருவாக்கம்.

## 5. பணி

பணி என்றால் பணிந்து வாழ்வது. ஆன்மீகப்பணி என்பது உலகளாவிய பணி அல்ல. அது இறையரசுப்பணி, உன்னதமான பணி. இயேசு ஆண்டவரே இதைச் செய்து காட்டியுள்ளார். "பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன்" (மத். 20:28), "நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும், ஏனெனில் இதற்காகவே நான் வந்திருக்கின்றேன்" (மாற். 1:38). இப்பணியை நாம் செய்வதற்கு முதலில் இயேசுவின் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். பணிவு, தாழ்மை, கீழ்ப்படிவு இந்த அறப்பண்புகள் பணி வாழ்வுக்கு சிகரம் வைப்பது போலாகும். "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வை அற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலைசெய்து அனுப்பவும் என்னை அனுப்பியுள்ளார்" (லூக். 4:18). இதுதான் இயேசுவின் பணி. நோயற்றவர்களுக்கு அல்ல நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை எனவும் இயேசு கூறினார்.

பணி என்பது கடினமான ஒரு பயணம். "ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதுபோல நான் உங்களை அனுப்புகின்றேன்". எதிர்கொள்ளவேண்டிய சவால்கள் நிறையவே உண்டு. பாலைவனச் சோதனைகளும், கொல்கொத்தாவின் சிலுவைகளும், பணிவாழ்வின் ஏணிப்படிகளாகும். சொல்லெறியும், கல்லெறியும் கூடவே வரும். இதனை எதிர்கொள்ள இயேசு காட்டிய வழி உண்டு. அதுதான் செபமனநிலை. இயேசு கருக்கலோடு எழுந்து தந்தையைச் சந்திக்கச் சென்றார். தனிமையான இடம் தேடிச் சென்றார். மலைமீது ஏறிச்சென்றார் என்று நற்செய்தி கூறுகின்றது. இயேசுவின் பணிக்கு உந்துசக்தியாக இருந்தது தந்தையோடு அவருக்கு இருந்த உறவுநிலை, பரிசுத்த ஆவியின் ஒருங்கிணைப்பு. இதனை அறிந்ததால்தான் சீடர்களும் செபிக்கக் கற்றுத்தாரும் என்றார்கள். பணிவாழ்வுக்கு சில விதிமுறைகள் உண்டு. என்ன கொண்டுபோகலாம், என்ன கொண்டுபோகக்கூடாது என்பது அவற்றில் சில.

கொண்டுபோகக்கூடாதது - எனது பெருமை

கொண்டுபோகவேண்டியது - இறைவார்த்தை, செபம்.

இதுவே நற்செய்தி அறிவிப்பு பணியின் கோலும், கைத்தடியும் ஆகும். தொடர்க பணி.


# சாட்சிய வாழ்வின் உச்சத்தின் .....
# கிளரீசிய சபையின் 109 மறைசாட்சிகள் அருளாளர்களாக!

*ற. அஜந்தன் குலாஸ், "காசா கிளாறட்" கிளரீசிய நவசந்நியாச இல்லம், குருநாகல்*

2017ஆம் ஆண்டு ஐப்பசி 21ஆம் நாள் அகில உலக கிளரீசிய துறவற சபையினருக்கு மிகமுக்கியமான நாளாகும். அதாவது தமது விசுவாசத்திற்காய் வீரசாட்சியம் பகர்ந்த 109 கிளரீசிய மறைபணியாளர்கள் திருத்தந்தையின் பிரதிநிதியான கர்தினால் எஞ்சலோ அமாத்தோ அவர்களால் ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனா நகரில் அமைந்துள்ள திருக்குடும்ப பேராலயத்தில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

உலகிற்கு அதிகளவு மறைசாட்சிகளைப் பெற்றுக்கொடுத்த துறவற சபைகளில் கிளரீசிய சபையும் ஒன்றாகும். சாட்சிய வாழ்வின் உச்சத்திற்குச் சென்ற கிளரீசிய மறைபணியாளர்கள் வெவ்வேறு காலப்பகுதிகளில் திருச்சபையால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள். 1992ஆம் ஆண்டு 51 பேர் (பரபாஸ்ரோ), 2005ஆம் ஆண்டு 1 (மெக்சிக்கோ) மற்றும் 2013ஆம் ஆண்டு 23 பேர் (தரகோணா)

விசேடமாக கடந்த ஆண்டில் (2017) அருட்தந்தை மத்தேயு காஸ்சல்ஸ், அருட்சகோதரர் பெறான் செப்பிறாஸ் மற்றும் குருத்துவப்பயிற்சி மாணவரான தியோப்பி லோகசாகஸ் ஆகியோரோடு மற்றும் 106 மறைசாட்சிகள் பார்சிலோனாவில் இடம்பெற்ற விசேட திருப்பலியில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். இப்புனித நிகழ்வானது கிளரீசிய சபைக்கும், அனைத்துலகத் திருச்சபைக்கும் அபரீவிதமான ஆசீர்வாதங்களை அருளும் நிகழ்வாகும். மறைசாட்சியத்திற்கான வித்தானது ஏற்கனவே இத்துறவற சபை நிறுவுனரான புனித அந்தோனி மரிய கிளாரட்டின் உள்ளத்தில் ஊன்றப்பட்ட ஒன்று என்பது கியூபா நாட்டில் அவருக்கெதிராக இடம்பெற்ற கொலை முயற்சியில் தெளிவாகின்றது.




இம்மறைசாட்சிய முன்மாதிரிகையானது எம் துறவற சபை வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு காரணங்களுக்காகத் துன்புறுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட மறைபணியாளர்களின் சாட்சிய வாழ்வின் வழியாகத் தெளிவாகின்றது. இவர்களில் பெரும்பாலான அருட்பணியாளர்கள், உள்ளகப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள், மெக்சிக்கோவிலும், ஸ்பெயினிலும் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்களில் கொலைசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் கிளரீசிய துறவறசபையில் வெவ்வேறு நிலைகளிலும் இருந்த வெவ்வேறு வயதிற்கு உட்பட்டவர்கள்.

2017 ஐப்பசி மாதம் 21ஆம் நாள் ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற இப்புனித நிகழ்வானது வெறுமனே கிளரீசிய மறைபணியாளர்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக இது முழுத்திருச்சபைக்கும் உரிய நிகழ்வு. ஏனெனில் இந்த 109 பணியாளர்களும் திருச்சபையின் மறைசாட்சிகள். இவர்கள் அனைவருக்கும் சொந்தமானவர்கள். திருச்சபையானது எக்காலத்திலும் தம் மறைசாட்சிகளின் குரலுக்கும், அவர்களின் முன்மாதிரிகையான வாழ்விற்கும் மிகுந்த கவனம் செலுத்திவருகின்றது. மறைசாட்சிகளின் தியாகம் திருச்சபை வரலாற்றில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதொன்றாகும். இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தி விழுமியங்களுக்கு சான்றுபகரும் இவர்களின் முன்மாதிரிகையான வாழ்வு அவரில் நம்பிக்கைகொண்ட ஏனையவர்களுக்கு உந்துசக்தியாக அமைகின்றது.

2014ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ஆம் திகதியன்று முதலாம் நூற்றாண்டின் மறைசாட்சிகளை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ், "இன்றும் மறைசாட்சிகளின் காலமாகவே விளங்குகின்றது. நீரோ மன்னனின் காலத்தைப்போலவே இக்காலத்திலும் மறைசாட்சிகளின் தொகைக்குக் குறைவே இல்லை. மத்திய கிழக்கு நாடுகளில் கிறிஸ்தவர்கள் அதிகளவில் துன்புறுத்தப்படுகின்றனர். எனவே துன்புறும் எம் சகோதர சகோதரிகளுக்காக இறைவனை வேண்டுவோம்" எனக் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் பெரும் எண்ணிக்கையிலான ஆண்களும், பெண்களும் தம் வாழ்வை கிறிஸ்துவிற்காகத் தியாகமாக்கியுள்ளனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 74

# நாய்களில் இருந்தாவது நல்லறிவும் பிறக்கட்டும்!

### *தாய் நாய்!*

என்னுடைய நண்பர் ஒருவர் தனிமையாக வாழ்ந்துவந்த வயோதிபத் தாய் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தார். அவ்வயோதிபத் தாய் ஏறக்குறைய பன்னிரெண்டு நாய்களை வளர்த்து வருகின்றாள். இதனால், அத்தாயின் வளவிற்குள் செல்வது நண்பருக்குப் பெரிய பயங்கர அனுபவமாகிவிட்டது! பன்னிரெண்டு நாய்களும் சேர்ந்து குரைத்துக்கொண்டு கடிக்க வந்தால் எப்படி இருக்கும்? பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளான நண்பர் ஒருவாறாக அச்சந்திப்பை முடித்துவிட்டு வந்துவிட்டார். அச்சந்திப்புப்பற்றி பின்னர் குறிப்பிட்டபோது, “பன்னிரெண்டு நாயோடு தாய் நாயையும் சேர்த்து அவ்வீட்டில் பதின்மூன்று நாய்களைப் பார்த்துவிட்டு வந்தேன்!” என்றார்! தனது பிள்ளைகள் இருந்தும், தான் தனியாக இருக்க வேண்டும், எவரின் உதவியும் தனக்குத் தேவையில்லை என அடம்பிடித்துக்கொண்டு, தனது சொத்துக்களை யாரும் சூறையாடிவிடுவார்கள் என்று கூறிக்கொண்டு, யாருடைய உதவியையும் நாடாது ‘தனிக்காட்டு ராணி’யாக அவள் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டார் நண்பர். பன்னிரெண்டு நாய்களுக்கும் ஒரு தாயென்றாலும் தேவையல்லவா! அவ்வகையில்தான் தலைப்பு வரையப்பட்டிருக்கின்றது என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என்பதில் நம்பிக்கை உண்டு!

சில வீடுகளின் வெளிவாசல்களில் ‘கடிநாய் கவனம்’ என எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். வளர்ப்பு நாய்களிடம் இருந்து பொதுவாகத் தப்பிவிடலாம். ஆனால், வீடுகளில் ‘இருக்கின்றவை’களிடம் இருந்து தப்பிப்பிழைப்பது கடினமானதாகிவிடும்! ஆக, மேற்சொன்னதைச் சிறு திருத்தத்தோடு ‘இவ்வீட்டில் கடிநாய்கள் உண்டு. கவனம்!’ எனப் புரிந்துகொள்வதுதான் உசிதமானது.

### *‘நாயே! உனக்குமொரு நாடா?’*

‘நாயே உனக்குமொரு நாடா’ எனத் தொடங்கும் வார்த்தைகளில் ஈழத்துக் கவிஞர் காசியானந்தன் ஒரு பாடல் எழுதியிருந்தார். அப்பாடல் வரிகளின் பொருள் இன்னும் நம் ஈழவள நாட்டிற்குப் பொருந்துவதாகவே தெரிகின்றது. இவ்வுருவகத்தின் ஊடாக பல சங்கதிகளைச் சொல்லவிளைகின்றார் கவிஞர். இப்பாடலை வைத்துக்கொண்டு பல தரத்தாரையும் உருவகிக்கலாம்போல் தோன்றுகின்றது. இப்பாணியில்தான், ‘கேவலம்’ என்றொரு கவிதையை சில ஆண்டுகளுக்குமுன் நம் நாட்டில் நிலவிய அரசியல் சூழலை மனதிற்கொண்டு, “எங்கள் பிள்ளைகள் வேட்டையாடப்பட்டபோது இம்மண்ணில் தெருநாய்கள்கூட பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டன!” என எழுதியிருந்தேன். ஏனெனில் நாய்களைக் கொல்வது குற்றமாகவும் ‘பயங்கரவாதிகள்’ என்ற போர்வையில் மனிதர்களைச் சுட்டுத்தள்ளுவது வீரமாகவும் கருதப்பட்டது!

ஒரு வகையில், ஈழவள நாட்டில் வாழும் அனைத்து இனக்குழுமங்களுக்கும் இப்பாடல் பொருந்துவதாகவே தெரிகின்றது. ஏனெனில், இத்தனை ஆண்டுகள் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு மூன்று, நான்கு தசாப்த காலமாக எத்தனையோ உயிர்களை இழந்தபின்னரும் சுமூகமான ஒரு சூழல் நிலவும் இக்காலத்திற்கூட அரசியல் தீர்வைக் காணமுடியாத நம் தலைவர்களைப் பார்த்து, ‘நாயே உனக்குமொரு நாடா?’ என்று கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது? சரியாகத்தானே கவிஞன் பாடியிருக்கின்றான் எனச் சொல்லத் தோன்றுகின்றது. இது, நாடளாவிய தேசிய ரீதியில் சுட்டிக்காட்டக்கூடிய ஒன்று.

அடுத்து, தமிழ் தேசியத்தை எடுத்துக்கொண்டால் இக்கட்டத்தில் என்னவென்று சொல்வது! இவ்வாண்டில் (2018) நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வட மாகாணத்தில் பெரும்பான்மை இருக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெற்றுக்கொண்டது. அப்படியிருந்தும் எலும்புத்துண்டைக் கண்டால் உடலை வாலாக வளைத்து நிற்கும் நாய்களைப்போல சில இலட்சங்களுக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களில் சிலர் பெரும்பான்மை இனக்கட்சிகளுக்கு இரகசியமாக ஆதரவு தெரிவித்து சில உள்ளூராட்சி மன்றங்களை பெரும்பான்மை இனக்கட்சிகள் கைப்பற்றக் காரணமாய் ஆகியிருக்கின்றார்கள். இவர்களைப் பார்த்து, ‘நாயே உனக்குமொரு நாடா?’ என்று கேட்கவேண்டும்போல இருக்கின்றது. அப்படிக் கேட்பதில்தான் என்ன பிழை இருக்கின்றது?

### *‘நாணும் அச்சமும் நாய்கட்கு!’*

‘ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்...’ எனத் தொடங்கி, ‘நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்’ என மகாகவி பாரதியார் பாடுகின்றபோது பெண்ணடிமைத்தனத்தில் இருந்து பெண்கள் விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்கு பாரதியை இவ்வாறாகப் பாடவைத்தது. பெண்கள் என்பவர்கள் அச்சம், மடம், நாணம், பயிற்ப்பு ஆகிய அக அணிகலங்களைக் கொண்டிருக்கவேண்டும். ஆனால், இதனையே அடிமைச்சங்கிலிகளாக ஆக்கி அவர்களைக் காலங்காலமாக அடுப்படியில் அடிமைகளாக வைத்திருந்தார்கள். இக்கொடூரமான நிலைகண்டு கொதித்தெழுந்தான் பாரதி. அதன் விளைவுதான் பாரதியின் ‘நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்’ என்ற பாடல்!



எனினும், பாரதி கண்ட புதுமைப்பெண்ணை இன்னும் எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கவேண்டி இருப்பதுதான் துரதிஸ்ரவசமாகும்.

### *இயேசுவின் பார்வையில்!*

“...பிள்ளைகள் வயிரார உண்ணட்டும். பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுதல் நல்லதல்ல...’ என இயேசுவின் போதனை (மாற்கு 7:27) ஒன்றில் புலப்படும். விவிலிய பார்வையில் மிக ஆழ்ந்த ஒரு பார்வையை இக்கூற்றோடு வருகின்ற வார்த்தைகள் ஏற்படுத்தினாலும் சாதாரணமாக ஒவ்வொன்றையும் அதற்குரிய தரத்தில் வைத்துப் பேணவேண்டும், ஒவ்வொன்றிற்குரிய மதிப்பையும் அவற்றுக்குரிய வகையில் கொடுக்கவேண்டும் என்பது பொருளாகின்றது. அவ்வாறெனில், பிள்ளைகள் உறங்கும் கட்டிலில் நாய் பூனை போன்ற செல்லப்பிராணிகளை வைத்திருப்பது, அத்தகைய இடத்தைக் கொடுப்பது ஏற்புடையதல்ல. சில பேர்வழிகள் ஒரு குழந்தைக்குச் செலவிடும் பணத்தைவிட அதிகமான தொகையை நாய் பூனை போன்ற பிராணிகளுக்குச் செலவிடுகின்றார்கள். இது நியாயமானதல்ல என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பது கிடையாது!

நாய் பூனை போன்றவை தாங்களாகவே தங்கள் உணவைத் தேடும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், மனிதன் பரிநாம வளர்ச்சி அடைவதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே நாய் பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டது என்று பத்து ஆண்டுகளாக நாய்கள்பற்றி ஆய்வுகள் நடத்திவரும் டொக்ரர் ஜெக் செங் சுட்டிக்காட்டுகின்றார். இன்னும் மனிதருக்குத்தான் நாய்கள் வேண்டுமே தவிர மனிதர் இல்லாமலே நாய்கள் உயிர்வாழக்கூடியன என்கின்றார். மனிதகுலம் அழிந்துபோனாலும் உயிர்வாழக்கூடிய ஒரே இனம் நாய் என்று தன் ஆய்வுகள் மூலம் நிறுவுகின்றார் மேற்சொன்ன ஆய்வாளர். நம் ஊர்களிலும் நகரப் பகுதிகளிலும் நாய்களின் பெருக்கத்தினையும் தெருநாய்களின் அட்டகாசங்களையும் பார்க்கின்றபோது இதே போக்கில் போனால் நாய்களின் ஆட்சிதான் விரைவில் நடைபெறும்போல் தோன்றுகின்றது! ஏன், இப்போதுகூட எப்படியான ஆட்சி நடக்கின்றது? அப்படியான ஆட்சிதானே நடக்கின்றது என்று யாரும் கூறினாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை!

### *நான்கு கால்களை வைத்து இருகால்களுக்குச் சொல்லப்படும் அறிவுரை!*

‘நாய்க்கேன் போர்த் தேங்காய்’ என்றொரு பழமொழி இருக்கின்றது. இவ்வாறு ஒருவரைக் குறித்துக் குறிப்பிட்டால், ‘உனக்கேன் தேவையில்லாத வேலை’, ‘உனக்குப் பொருத்தமில்லாத வேலையை ஏன் செய்கிறாய்?’ என்பதே புரிந்துகொள்ளப்படும் பொருளாகும். ‘நாயை நடுக்கடலில் விட்டாலும் நக்குத் தண்ணிதான்’ என்று இன்னொரு முதுமொழி உண்டு. ஒருவருடைய இயல்பை, குணத்தை மாற்றமுடியாது என்பதைக் குறிக்கச் சொல்லப்படும் ஒரு முதுமொழியாக இதனைப் பார்க்கலாம்.

மேலும், ‘நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன’ என்று வேறொரு பழமொழியும் இருக்கின்றது. கொள்கைகளை, வாக்குறுதிகளை விட்டுவிட்டு சந்தர்ப்பவாதிகளாக மாறுகின்றவர்களை இவ்வாறாகக் குறிப்பிடுவார்கள். உதாரணமாக, அன்றாடம் அல்லலுறும் காணாமலாக்கப்பட்டோரை தேடும் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் காத்திருப்போர் போன்றவர்களின் நலனை முன்னுரிமைப்படுத்தாது தங்கள் ‘சுகபோக அரசியலை’ முன்னெடுக்கும் அரசியல்வாதிகளைக் குறித்து ‘நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன’ என்றும் சாதாரண மக்கள் பேசிக்கொள்கின்றார்கள்.

இன்னும், ‘நாய் வாலை நிமிர்த்த முடியாது’ எனப் பெரியவர்கள் கூறுவார்கள். அதாவது ஒருவருடைய பழக்க வழக்கங்களை மாற்றுவது இயலாத காரியம், ஒருவருடைய இயல்புகளை மாற்றுவது முடியாத விடயம் அல்லது ஒருவருடைய பிடிவாதப்போக்குகளில் இருந்து மாற்ற நினைப்பது சாத்தியப்படாத ஒன்று என்று பொருள் கொள்ளப்படுகின்றது. சில மனிதர்களின் செயற்பாடுகள் அவர்களின் போக்குகளை மாற்றமுடியாதது போன்றே இருந்துவிடுவதையும் பார்க்கலாம்.

திறந்த வீட்டிற்குள் பூருகின்ற நாய்போல என்ற உருவகத்தையும் சொல்லுகின்றார்கள். உரியவரிடம் எவ்வகையான அனுமதியும்இல்லாமல் ஒன்றைப் பயன்படுத்தும்போது அல்லது ஒருவர் தான் நினைத்தபடி ஒருவருடைய உடமையைக் கையாளுகின்றபோது மேற்சொன்னவாறாகக் கூறுவார்கள். கப்பைக் கண்டால் காலை உயர்த்தும் நாய்கள்போல அல்லாமல் கவனமாக இருக்கவேண்டும் எனச் சில பெரியோர் குறிப்பிடுவார்கள். கண்ணியமாய் இருக்கவேண்டும், ஒழுக்கமாக வாழவேண்டும் என்பதை அழுத்திச் சொல்வதற்கு இவ்வாறான உருவகத்தையும் பயன்படுத்துகின்றார்கள்.

### *நாய்ச்சாதி சொல்வது மனிதசாதிக்குப் புரியுமா!*

“உறங்கிக் கிடக்கின்றது ஊர்! ஆனால், நாலாபக்கமும் நாய்கள் மட்டும் நடமாடித்திரிகின்றன!” என்றும், “நன்றிகெட்ட நாயே! என இனிமேலும் இகழாதே மனிதா! நம்மோடு வாழ்ந்துகொண்டும் நன்றிமறவாது இற்றைவரை இருப்பது நானும் நீயுமல்ல! நாய்தான்!” எனவும் இரு கவிதைகளை நாயை வைத்துக்கொண்டு நாசூக்காக எழுதியிருந்தேன். இதில்வரும் முதலாவது கவிதை இராணுவ மிகை நடமாட்டத்தையும், குடாநாட்டுக் கோஸ்டிகளின் குழப்பங்களையும், மேலும் தெருநாய்களின் அத்துமீறிய அடாவடித்தனங்களையும் கோடிட்டுக் காட்டுபவையாக இருப்பது புரியும்.

“வீட்டுக்கொரு நாயை வளர்த்தும் மனிதன் விசுவாசத்தைக் கற்றுக்கொள்ளவில்லையே! இனி நாய்கள் மனிதனை வளர்த்து, அதைக் கற்றுக்கொடுக்குமா?” எனக் கவியரசு கண்ணதாசன் நாய்களிடமிருக்கும் விசுவாசத்தை விபரிப்பார். கவிஞர் சோ. பத்மநாதன், ‘நாய்கள்’ என்ற தலைப்பில் வடக்கிருத்தல் என்ற கவிதைத் தொகுதியில், “அந்நாளில் ஊரைவிட்டு ஓடாதிருந்து மதிப்பில் உயர்ந்தீர். இன்றும் வேற்றரவம் கேட்டால் விடாது குரைக்கின்றீர். எமக்கில்லா மான உணர்வு உமக்கு, வந்தவிதம் எந்தவிதம்?” என நாயின் மான உணர்வின் மதிப்பினை எடுத்தியம்புகின்றார்.

மேலும், தமிழர் தாயமெங்கும் நடைபெற்ற போரில் மக்கள் இடம்பெயர்ந்தபோது நாய்களின் பொறுப்பில்தால் வீடுகள் விடப்பட்டன! எவ்வளவு விசுவாசமாக அவை இருந்தன என்பதற்கு கவிஞர் சோ. பத்மநாதனின் மேற்கூறப்பட்ட கவிதைத் தொகுதியில் ‘வீடு பேறு’ என்ற கவிதை தக்க சான்றாகும். இதேபோல 25.10.2009இல் மித்திரனில் வெளிவந்த ‘இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய்’ என்ற கவிஞர் யோ. புரட்சியினுடைய கவிதையும் இதற்குச் சிறந்த ஆதாரமாகும். இக்கவிதைகளைப் படிக்கின்றபோது கண்ணீர் வரும்!

“நாய்கள் செய்யும் வேலையை மனிதர்கள் செய்வதால் மனக் குழப்பத்தில் திரிகின்றன தெருநாய்கள்!” என வித்தியாவின் படுகொலையைப் பின்னணியாக வைத்து அலைக்ஸ் பரந்தாமன் எழுதியிருந்தார். இப்படியாக, இவைபோல, நாய்களை வைத்தே நியாயமான கவிஞர்கள் கவிதைகளின் ஊடாகச் சக மனிதர்களுக்கு நல்லறிவூட்ட விளைகின்றார்கள். சுனாமியாக எழுந்து நிற்கும் கேள்வி என்னவெனில், எந்த அளவிற்கு நாய்ச்சாதி சொல்லும் விடயம் மனித சாதிக்குப் புரியுமோ என்பதுதான்!

### *நாய்க் குணம்!*

வயது முதிர்ந்த ஓய்வுநிலையிலுள்ள அருள்தந்தையர்கள் வாழும் இல்லத்தில் ஓர் அருள்தந்தை நாய் வளர்த்தார். அந்நாய் ஒரு வயதான அருள்தந்தையைக் கடித்துவிட்டது. கடிவாங்கிய அருள்தந்தை, “உங்களுடைய நாய் என்னைக் கடித்துவிட்டது!” எனச் சொல்ல அந்நாயை வளர்க்கும் அருள்தந்தை, “நாய், தன்ர வேலையைச் செய்யுந்தானே!” என்று சர்வசாதாரணமாகக் கூறினார்! பின்னர் நிலைமை எப்படி இருந்திருக்கும் என எண்ணிப்பார்க்க வேண்டியதில்லைத்தானே!

கடந்த ஆண்டு (2017) மார்கழி மாதம் அமெரிக்காவில் கோகிலேன்ட் வர்ஜீனியா மாகாணத்தில் 22 வயது நிரம்பிய இளம் பெண்ணான பெத்தானி ஸ்ரீபன்ஸ் என்பவரின் உடலில் பல பாகங்களில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டாள். அவளின் இறப்புக் குறித்து பொலிசார் எவ்வித தகவல்களையும் ஆரம்பத்தில் வழங்கவில்லை. இருப்பினும் பெத்தானியின் உறவினர்கள் நண்பர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பொலிசார் பெத்தானிக்கு நடந்த விபரீதத்தை வெளியிட முன்வந்தார்கள். “...உடல் கைப்பற்றப்பட்ட அன்று பெத்தானியின் இடுப்புப் பகுதியை அவருடைய இரு நாய்களும் சாப்பிட்டுக்கொண்டிருந்தன. அதை நானும் மற்ற அதிகாரிகளும் நேரடியாகப் பார்க்க நேரிட்டது. இறந்த பெத்தானியின் குடும்பத்தை மனதில் வைத்தே அந்த இறப்புக் குறித்து அறிவிக்காமல் இருந்தோம்...” எனக் கூறியதோடு நாய்கள் எதற்காக அவளைக் கொன்றன என்ற விசாரணை நடந்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இவ்விடயம் அமெரிக்காவை மட்டுமல்ல முழு உலகையுமே ஒருகணம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருந்தது.

### *நாய்களால் ஏற்படும் தொல்லைகள்!*

தெருநாய்களால் ஏற்படும் வீதி விபத்துக்களில் நம் பிரதேசங்களில் படுகாயம் அடைந்தவர்களையும் இறந்துபோனவர்களையும் பதிவுசெய்தால் அது எண்ணிக்கையில் நூற்றுக்கணக்கானவையாக இருக்கும் என உறுதியிட்டுக் கூறலாம்! கட்டாக்காலி நாய்களுக்கு விசர் பிடித்து அதனால் நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு அநியாயமாகச் செத்தவர்கள் இன்னும் ஒரு பெரும் தொகையாக இருக்கும். மேலும் இரவு நேரங்களில் நாய்களால் ஏற்படும் தொல்லைகளினால் இரவு உறக்கத்தைத் தொலைப்பவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். மேலும், வீதிகளில் வீசப்படுகின்ற கழிவுப் பொட்டலங்களை இரவு முழுவதும் கிண்டிக் கிளறி நகர வீதிகளை நரகமாக்கிவிடும் நிலையும் இன்னொரு புறம்!

தெருநாய்களின் தொல்லைகளுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்பது எவ்வித தாமதமும், தயக்கமும் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பெரும் வேலைத்திட்டமாகும். ‘தெருநாயை அழிப்பது யார் பொறுப்பு?’ என 13.03.2018 அன்று வலம்புரிப் பத்திரிகை, ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்தது. இதில், வடபுலத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தெருநாய்த் தொல்லைகளிலும், துன்பங்களிலும் இருந்து மக்களை விடுவிக்கவடமாகாண ஆளுநர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியிருந்தது. இதனை ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் ஏன் மாகாண சபையும் ஒரு முன்மொழிவாகக் கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# நல்ல ஆயர் தன் மந்தைமீது எப்போதும் கவனமுடன் இருப்பார்

## - திருத்தந்தை பிரான்சிஸ் -



ஆயர்கள் தங்களின் மறைமாவட்ட மக்களின் வாழ்வில் ஈடுபட்டு, அவர்களுக்கு நெருக்கமாக இருந்து, அம்மக்களை ஓநாய்களிடமிருந்து பாதுகாப்பதற்கு எப்போதும் விழிப்பாய் இருக்குமாறு கடந்த மே மாதம் 05ஆம் திகதி அன்று காலையில் திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை, அந்தியோக்கிய கிறிஸ்தவ சமூகத்தில் ஏற்பட்ட இன்னலான தருணம் குறித்து விளக்கும் இந்நாளைய திருப்பலியின் முதல் வாசகத்தை மையப்படுத்தி மறையுரைச் சிந்தனைகளை வழங்கினார்.

தன் மறைமாவட்ட மக்களின் விசுவாசத்தைக் காத்து, அதில் அவர்களை உறுதிப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ள ஆயர்களின் பணிபற்றி விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையில் ஆடுகளின் பாதுகாவலர்கள் குறையாமல் இருக்க வேண்டும் என்று கூறினார்.

“எங்களுள் சிலர் அங்குவந்து தங்களுடைய பேச்சால், உங்களது மனதைக் குழப்பி கலக்கமுறச் செய்தனர் எனக் கேள்விப்பட்டோம்” என்று திருத்தூதர்கள் கூறியதை முதல் வாசகத்தில் வாசித்தோம் என்றுரைத்த திருத்தந்தை, தங்களை உண்மையான கிறிஸ்தவ இறையியலாளர் என நம்புவோர் இறைமக்களைக் குழப்பிவிடுகின்றனர் என்று கூறினார்.

ஆயர்கள் மிகவும் கவனமுடன் இருந்து ஓநாய்களிடமிருந்து தங்களின் மந்தைகளைக் காக்க வேண்டும் என்றும், ஓர் உண்மையான ஆயர் தன் ஒவ்வோர் ஆட்டின் பெயரையும் அறிந்துள்ளார் என்றும், இவ்வாறு இயேசு ஆயராக இருந்தார் என்றும் மறையுரையில் திருத்தந்தை கூறினார்.

தங்களின் ஆடுகளைப் பாதுகாக்கும் நல்ல மேய்ப்பர்களை ஆண்டவர் எப்போதும் நமக்கு அருளுமாறு செபிப்போம். நல்ல ஆயர்கள் இன்றி நாம் முன்னோக்கிச் செல்ல இயலாது என்று கூறி திருத்தந்தை தனது மறையுரையை நிறைவு செய்தார்.

# வாழ்வின் மாண்பு குறித்த மதங்களின் கண்ணோட்டங்கள்

## கிறிஸ்தவ - இஸ்லாமியக் கலந்துரையாடல்

ஜோர்தான் நாட்டில் பல்சமய ஆய்வுகளுக்கென உருவாக்கப்பட்டுள்ள அரச நிறுவனத்திற்கும், பல்சமய கலந்துரையாடல் திருப்பீட அவைக்கும் இடையே ஜோர்தானின் அம்மானில் அண்மையில் இடம்பெற்ற ஐந்தாவது கூட்டம் குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

“மதங்களும் வாழ்வின் மாண்பும்: கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமியக் கண்ணோட்டங்கள்” என்ற தலைப்பில் இடம்பெற்ற இரண்டு நாள் கலந்துரையாடலில், முதலில் இவ்விரு கண்ணோட்டங்களில் நிலவும் சவால்கள் குறித்தும், இரண்டாவது கலந்துரையாடல் வழங்கும் வாய்ப்புகள் குறித்தும், மூன்றாவது “அதன் ஏனைய கோணங்கள்” என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டன.

இறைவனின் கொடையான வாழ்வு என்பது, அதன் தொடக்கம் முதல் இயற்கையான முடிவுவரை பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனின் மாண்பும் உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும். ஏனெனில் உரிமைகளும் மாண்பும் மதிக்கப்படுவது நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகின்றது எனவும் பரிந்துரைகள் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

மேலும், குடியேற்றதாரர், புலம்பெயர்ந்தோர் ஆகியோர் மதிக்கப்படுதல், இளைய தலைமுறைக்கு நல்ல கல்வி வழங்குதல் போன்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டு இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு தரப்பிலிருந்தும் 12 பிரதிநிதிகளும் மூன்று பார்வையாளர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

# ஒன்றிப்பை நோக்கிய பயணத்தில் மனம் தளராதிருப்போம்

## - திருத்தந்தை பிரான்சிஸ் -

கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே ஒன்றிப்பு என்பது, ஒரேமாதிரியான தன்மையுடன் விளங்குவதல்ல, மாறாக தூய ஆவியாரில் பன்மைத்தன்மையில் ஒப்புரவுடன் இருத்தல் ஆகும் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆர்த்தடக்ஸ் கிறிஸ்தவ சபைத் தலைவர் ஒருவரிடம் கூறினார்.

செக் மற்றும் சுலோவாக்கிய பகுதியின் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபைத் தலைவரான பிரேசோவ் (Presov) பேராயர் இராட்டிஸ்லாவ் (Rastistlav) அவர்களைக் கடந்த 11.05.2018 அன்று காலையில் வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆகிய இருவரின் நற்செய்திப் பணிபற்றி எடுத்துரைத்தார்.

இவ்விரு புனிதர்களும், பல்வேறு கலாசாரங்கள் மற்றும் மரபுகளைக் கொண்ட கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையே பிரிவினைகள் ஏற்படாமல் இருப்பதில் வெற்றிகண்டவர்கள் என்றும், இவ்வாறு இவ்விரு புனிதர்களும், கிறிஸ்தவ ஒன்றிப்பின் உண்மையான முன்னோடிகளாக உள்ளனர் என்றும் கூறினார்.

ஆர்த்தடக்ஸ் பேராயர் இராட்டிஸ்லாவ் அவர்களின் வருகை, இரு கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே ஆன்மீகப் பிணைப்பையும், நட்பையும் வளர்க்கும் என்றும் புனிதர்கள் சிரில் மெத்தோடியஸ் ஆகியோரின் பரிந்துரை நாம் முழு ஒன்றிப்பை நோக்கி நடக்க உதவும் என்றும் திருத்தந்தை கூறினார்.

கத்தோலிக்கருக்கும், ஆர்த்தடாக்ஸ் சபைகளுக்கும் இடையே அமைந்துள்ள பன்னாட்டு இறையியல் உரையாடல் குழுவில் செக் மற்றும் கலோவாக்கிய பகுதியின் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபையும் இணைந்துள்ளதற்கு திருத்தந்தை நன்றி தெரிவித்தார்.

# இயேசுவில் நண்பர்களாய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்

கிறிஸ்துவோடு நட்புணர்வு கொண்டிருப்பதே நமக்கு வழங்கப்பட்டுள்ள கொடையும் அழைப்புமாகும். இயேசுவின் இதயத்திற்குள் நுழையும் அனுமதியையும், அவரது நட்பையும் கொடையாகப் பெற்றுள்ள நாம் ஒவ்வொருவரும் இக்கொடைக்கு இறைவன் எப்போதும் விசுவாசமாக உள்ளார் என்பதை உணர்ந்திருக்க வேண்டும்.

“அன்பில் நிலைத்திருங்கள்” என்ற நற்செய்தியில் கூறும் சொற்களை மையமாகக்கொண்டு தன் கருத்தைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசு தன் சீடர்களை பணியாட்கள் என்று அழைக்கவில்லை, மாறாக நண்பர்கள் என்றே அழைத்தார் என்பதைக் கூறி, தான் காட்டிக்கொடுக்கப்பட்ட வேளையிலும் யூதாசை நோக்கி, “நண்பா, எதற்காக வந்தாய்?” என்றே இயேசு அவரிடம் பேசினார் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

துன்ப வேளைகளில் விலகிச் செல்வது நட்பு அல்ல, ஏனெனில் நாம் பாவம் புரிந்து, இறைவனைவிட்டு விலகிச்சென்றாலும், அவர் நமக்காக என்றென்றும் காத்திருக்கின்றார் என்று கூறிய திருத்தந்தை, நாம் அன்பிலும் நட்பிலும் நிலைத்திருப்பதற்குத் தேவையான வரத்தை இறைவன் நமக்கு வழங்குமாறு மன்றாடுவோம் என்று தனது டுவிட்டர் செய்தியில் கூறினார்.

# உயிரை அன்புகூர்ந்து பாதுகாப்பதே உண்மையான அன்பு

## - திருத்தந்தை பிரான்சிஸ் -

நம் ஒவ்வொருவரின் அன்பும், தனக்கேயுரிய சுவையையும் துணிச்சலையும் இழக்காதிருக்க வேண்டுமெனில், நாம் இயேசுவின் அன்போடு நிலைத்திருக்க வேண்டியது அவசியம் என திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

உரோம் நகரின் தூய பேதுரு பேராலய வளாகத்தில் கூடியிருந்த விசுவாசிகளுக்கு அல்லேலூயா வாழ்த்தொலி உரையை திருப்பலி வாசகத்தின் அடிப்படையில் வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தந்தையாம் இறைவனிலிருந்து நமக்கு வரும் அன்பில் நாம் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமெனில் நம் சுயநலப்போக்குகளையும், பாவங்களையும் விட்டு விலகவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

அன்பு என்பது நம் ஒவ்வொரு நாள் வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் மனப்போக்குகள் வழியாகப் பெறப்படுகின்றது. இல்லையெனில் அது வெறும் மாயையாகிவிடும் என உரைத்த திருத்தந்தை, “நான் உங்களை அன்புகூர்ந்ததுபோல், நீங்கள் ஒருவரையொருவர் அன்புகூரவேண்டும்” என்ற இயேசுவின் கட்டளையைப் பின்பற்ற வேண்டும் என்றார்.

நம் பயணத்தில் நம்மோடு உடன் வரவிரும்பும் அனைவரையும் நாம் அன்புகூர்ந்து, நம் அன்பை அவர்களோடு பகிர்ந்து, இயேசுவின் அன்பில் அவர்களைக் கொண்டுவந்து இணைக்கவேண்டும் என்ற அழைப்பையும் திருத்தந்தை முன்வைத்தார்.

நம் இவ்வுலக வாழ்வின் முக்கிய கூறாக, அடுத்தவர்மீது நாம் காட்டும் அன்பு இருக்கவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதியோர், நோயாளிகள், கருவில் வளரும் குழந்தைகள் என ஒவ்வொருவரும் அன்புகூரப்பட்டு பாதுகாக்கப்படுவதே உண்மையான அன்பு எனவும் கூறினார்.

தன் அல்லேலூயா வாழ்த்தொலி உரையின் இறுதியில், மத்திய ஆபிரிக்கா நாட்டிக்காகச் செபிக்குமாறு அழைப்பு ஒன்றையும் திருத்தந்தை விடுத்தார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித ஃபுல்பேர்ட்



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

ஃபுல்பேர்ட் கி.பி. 952 அல்லது 960ஆம் ஆண்டில் பிறந்திருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். ஃபுல்பேர்ட் இத்தாலியில் உரோமை நகரில் பிறந்தார் என்று பல ஆண்டுகளாக எல்லாரும் நம்பிவந்த நிலையில் இவரின் வரலாற்றை அண்மையில் எழுதிய பிஃபிஸ்டர் என்பவர், “ஃபுல்பேர்ட் பிரான்ஸ் நாட்டில் லாடன் மறைமாவட்டத்தில் பிறந்தார்” என்ற தகவலைத் தருகின்றார்.

தமது தொடக்கக் கல்வியை பிரான்சில் ரீம்ஸ் நகரில் ஆரம்பித்தார். ஜெர்பர்ட் என்ற ஆசிரியரின் அன்பும், அறிவுத் தெளிவும் இவருக்குக் கிடைத்தமை இறைவன் இவருக்கு அருளிய மாபெரும் வரமாகும். இந்த ஜெர்பர்ட்தான் பின்னாளில் 999ஆம் ஆண்டு சில்வெஸ்டர் என்ற பெயருடன் திருத்தந்தையானார்.

சீரிய முறையில் தெளிந்த சிந்தனையுடன் கல்வி கற்ற புல்பேர்ட் 990ஆம் ஆண்டில் சார்ட்ரெஸ் நகரில் பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவினார். மிக விரைவிலேயே கல்வி கற்பிப்பதில் புகழ்பெற்ற பள்ளியாக அது உயர்ந்தது. பிரான்சின் தொலைதூரத்தில் இருந்து மட்டுமல்ல இத்தாலி, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்தில் இருந்தும் மாணவர்கள் இங்கு படிக்க வந்தார்கள். மேதைகளாக, அறிவுக் கருவூலமாகத் திரும்பிச் சென்றார்கள். இவருடைய மாணவர்கள் இவரை, “வணக்கத்துக்குரிய சாக்ரட்டீஸ்” என்றே அழைத்தார்கள்.

சார்ட்ரெஸ் நகர ஆலயத்தின் தலைமைச் செயலாளராக நியமனம் பெற்ற ஃபுல்பேர்ட், போய்டியர்சில் இருந்த புனித ஹிலாரி ஆலயத்தில் அதன் கருவூலக் காப்பாளராகவும் திகழ்ந்தார். சார்ரெஸ் ஆயராக இருந்த ருடால்ஃப் 1007ஆம் ஆண்டு இறந்தார். உடனே அதன் புதிய ஆயராக ஃபுல்பேர்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேராயர் லுதேரிக் இவரைத் திருப்பொழிவு செய்தார்.

ஆயராகப் பொறுப்பேற்ற பிறகும் தமது பள்ளியில் ஆசிரியராகவும், புனித ஹிலாரி ஆலயத்தின் கருவூலக் காப்பாளராகவும் தொடர்ந்து சேவை புரிந்தார்.

சார்ட்ரெஸ் நகரப் பேராலயம் 1020ஆம் ஆண்டு சமூக விரோதிகள் சிலரால் தீயிட்டு அழிக்கப்பட்டது. உடனே அதைப் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கும் பணியை முன்னெடுத்தார். ஏற்கனவே ஃபுல்பேர்ட்டைப்பற்றி எல்லாருக்கும் தெரியும் என்பதால் எட்டுத்திக்கும் இருந்து உதவிக்கரங்கள் நீண்டன. இங்கிலாந்து அரசர் உட்பட ஐரோப்பா முழுவதிலும் இருந்தும் நிதி உதவிகள் கிடைத்தன.

துறவுமடத் தலைவராகவோ அல்லது அதன் உறுப்பினராகவோ இருந்த எந்த அனுபவமும் இல்லாவிட்டாலும் துறவிகள்மீது அளவுகடந்த அன்பும், பாசமும் வைத்திருந்தார். தமது மறைமாவட்டத்தில் இருந்த குருக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளை ஒழுங்குபடுத்தினார். சில ஆயர்கள் பொது மக்களுக்குத் திருப்பட்டம் அளித்து அதன் மகிமையையும், புனிதத்தையும் சிறுமைப்படுத்தியதால் அவர்களின் இச்செயற்பாட்டைக் கண்டித்தார். மேலும் சில ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களை விட்டுவிட்டு, போருக்கான பயணங்களில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். இதையும் விமர்சித்தார்.

ஃபுல்பேர்ட் எழுதிய பல்வேறு பாடல்கள், சுற்றுமடல்கள் இன்றும் இருக்கின்றன. அவை வரலாற்றுத் தன்மையுடன் எக்காலத்திற்கும் அழியக்கூடாத பொக்கிசமாகத் திகழ்கின்றன. சிறப்புடன் பணிபுரிந்த ஃபுல்பெரட் 1029, ஏப்ரல் 10ஆம் தேதி இறைவனடி சேர்ந்தார். முறைப்படி புனிதராக அறிவிக்காவிட்டாலும் இவரை வணங்கிக் கொண்டாட திருச்சபை அனுமதி அளித்திருக்கின்றது.

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## முருங்கன் ஜெயா பாலாஜி கவிதைகள்

### 'கொன்வென்ட்' என்னும் குருஷேத்திரம்


வாழ்வில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும்
"கொன்வென்டின்" வாசனை இருக்கின்றது.
வரிசையாய் நிற்பாட்டி அடித்துக்கொண்டு போகும்போது
சிலரைப் பார்த்து சிஸ்ரர் சொல்லுவா,
"நீங்கள் போங்கள், உங்களுக்கு அடித்துப் பயனில்லை!"
அவர்கள் சிரித்துக்கொண்டு
சந்தோஷமாகப் போகும்போது
பொறாமையாக இருந்தது
எங்களுக்கு மட்டும் இப்படி அடிவிழுகிறதே என்று.
அன்று வலித்தன விரல்கள்.
வாங்கிய ஒவ்வொரு அடியும்
வாழ்வுக்கு எவ்வளவு உதவியாக இருக்கின்றது இன்று.
விடுதி வாழ்வில் சுத்தத்தைக் கற்றுக்கொண்டோம்.
சுவரை விரலால் தொட்டுப் பார்த்து,
"இது என்ன" என்று திட்டு விழும்.
"மலசலகூடம் அரச மாளிகைபோல் இருக்க வேண்டும்
என்று சொல்லித்தந்தீர்கள் 'போடிங் சிஸ்ரர்'.
பாராட்டுக்கள் கிடைக்கப்படும்போதெல்லாம்
உங்கள் நினைவு வருகின்றது நன்றியோடு!

ஒரு குருவின் குருப்பட்டத்தின்போது
அவரைப்பற்றி குறிப்பிடப்படும்போது
இன்ன குருவால் அழைத்தல் ஊக்கம் பெற்றார்
எனக் குறிப்பிடப்படும். இது மிகவும் சிறந்த விடயம்.
ஆனால் ஒரு குருவின் உருவாக்கலில்
ஒரு அருட்சகோதரி நிச்சயம் இருப்பார்.
பிதா, சுதன் போட முன்பள்ளியில் சொல்லித்தரும்போது
அருட்சகோதரிகளுடனான நம் உறவு ஆரம்பித்து
இறுதி நாட்களில் படுக்கையில்,
நற்கருணை வழங்கும்வரை
நம்மோடு அவர்கள் உறவு தொடர்கின்றது.
குரு ஆயராகி கருதினாலாகி பாப்பரசராகி உலகமெல்லாம்
அறியப்படும்போது குட்டி குட்டி அன்னை தெரேசாக்களாக
ஆயிரம் ஆயிரம் அருட்கன்னியர்கள் நம்மிடையே!
இறைவனோடு இணைந்திருக்க,
இசையை இரசிக்க, பூக்களை நேசிக்க,
உண்மையாய் இருக்கக் கற்றுத்தந்தீர்கள்!
அனைத்துக்கும் நன்றி சொல்ல
அனைவரையும் அன்பு செய்ய சொல்லித் தந்தீர்கள்!
சிஸ். விக்ரறின், சிஸ். அசெம்ரா,
சிஸ். டனியலா, சிஸ். காமலிற்றா
சிஸ். தெரேசியா, சிஸ். தெரசில்டா
எத்தனை எத்தனை பேர்கள்!
மாகாண மட்ட, தேசிய மட்ட சாதனைகளின்போது
கன்னியர்மட பாடசாலைகளின் பெயர்கள் இடம்பெற்றால்
மகிழ்ச்சியும் இல்லாதபோது ஏமாற்றமும் அடைகின்றோம்.
கொன்வென்ட் என்னும் எங்கள் குருஷேத்திரம்
வாழ்க! வளர்க! வளர்க்க!

### பார்த்துப்போ என் மகனே!

எழுபதுகளில் எங்கள் கிறிஸ்து அரசர் ஆலயத் திருவிழா
ஆயத்த வழிபாடுகளில் ஒருநாள்....
அன்னையின் அன்புபற்றி ஜெயசீலன் சுவாமி சொன்னார்,
"தாயின் இதயத்தைக் கொண்டு வா" என்று
யாரோ கேட்டார்களாம்!
கொண்டுபோகும் வழியில்
கால் இடறி விழப்போன மகனிடம்
தட்டில் இருந்த தாயின் இதயம் சொல்லிற்றாம்
"பார்த்துப் போ, என் மகனே பத்திரமாய்" என்று.
"அன்று கொன்வென்ட் கேர்ள்"
எதையும் வாதத்துக்குட்படுத்தும் வயது
முடியுமா இது? அன்பு, தியாகம் என்கின்ற பெயரால்
தவறுகள் மன்னிக்கப்படுவது சரியா? நியாயமா?
வாதிட்டது மனது!
இன்று முடிகிறது. முடியும்!
தாயின் இதயத்தால் எதுவும் முடியும்!
எந்த நிலையிலும் முடியும்!
பாதர், நீங்கள் சொன்னது கதையல்ல நிஜம்.

# கொஞ்சம் சிரிங்க



பக்கத்து வீட்டுக்காரன் காய்ச்சல்ல இருக்கான்னு பாக்கப் போனேன்......
என்னையா.... உடம்பு இப்படி கொதிக்குது???? ன்னு கேட்டா
"நெருப்புடா......"
"கபாலிடா...." ங்குறான்.
"சாவுடா...."ன்னு
சொல்லிட்டு வந்துட்டன்.
..................................

**நபர் 1** : உங்கள் மனைவி, ஏன் எப்போதும் கோபமாகவே இருக்கிறாங்க?
**நபர் 2:** கோபத்தில்கூட நீ அழகா இருக்கிறாய் என்று ஒரு நாள் தெரியாமல் சொல்லிட்டேன் அதுதான்.
**நபர் 1:** ???
..................................

ஒரு வயதானவர் சலூனுக்குச் சென்றார்.
அவர் தலையில் 8 முடியைப் பார்த்த சலூன்காரருக்குக் கோபம் வந்துவிட்டது. 'முடியை எண்ணனுமா?' வெட்டனுமா,' என்று கேட்டார். அதற்கு அந்த வயதானவர், 'எட்டு முடிக்கும் கலர் அடிக்கனும்'' (டை) என்றார்.
..................................

**நீதிபதி** : பட்டப் பகலல்ல ஏன் திருடினாய்?
**திருடன்:** தொழில்னு வந்துட்டா ராத்திரி, பகல்னு பார்க்க முடியுமா... எஜமான்!

**கணவன்:** கலண்டரில என்ன பார்க்கிறாய்?
**மனைவி** : பல்லி விழும் பலன்.
**கணவன்:** கொண்டா, நான் பார்க்குறேன், அது சரி, பல்லி எங்க விழுந்தது?
**மனைவி** : நீங்க சாப்பிட்ட சாம்பாறில..
..................................

**நீதிபதி** : பார்த்தா அப்பாவியா தெரியிறாய்? நீயா பிக்பொக்கெட்? நம்பவே முடியலையே?
**குற்றவாளி:** உங்களை மாதிரித்தாங்க எல்லோரும் ஏமாந்துடுறாங்க...
**நீதிபதி:** ???
..................................

**மகன்:** அம்மா, உன்னை நினைச்சா எனக்கு ரொம்ப அழுகையா வருகுது.
**தாய்:** ஏனப்பா... என்னாச்சு?
**மகன்:** ஒரு நாள் தெரியாமல் மெகா சீரியல் பார்த்திட்டேன். அதைப் பார்த்ததால தற்கொலை செய்திடலாம்னு தோணிச்சு. ஆனா நீ தினமும் பார்க்கிறியே?

# மன்னா விளம்பரப் பலகை

ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் தருணத்தில் புத்திசாலியாகின்றான். ஆனால், ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என்று பெருமிதம்கொள்ளும் தருணத்தில் முட்டாளாகின்றான்.

உன்னை மதிப்பவரிடம் தாழ்ந்து பேசணும்.
உன்னை மிதிப்பவரிடம் வாழ்ந்து பேசணும்.
..........................

மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட ஒரு கணப்பொழுதாயினும் உதவிசெய்வது மேல்.
..........................

வெற்றிக்கும் தோல்விக்கும் வித்தியாசம் அதிகம் இல்லை. கடமையை செய்தால் வெற்றி, கடமைக்கு செய்தால் தோல்வி.

எது உன்னை அச்சம்கொள்ளச் செய்கிறதோ
அதை அஞ்சாமல் எதிர்த்து நில்.
..........................

பேச வேண்டிய நேரத்தில் அமைதியாக இருந்துவிட்டால் அமைதியான நேரத்தில் நிம்மதியாக இருக்க முடியாது.
..........................

மரணத்தைப்பற்றி கவலைப்படாதே, நீ இருக்கும்வரை அது வரப்போவதில்லை, அது வரும்போது நீ இருக்கப்போவதில்லை. பிறகு எதற்குக் கவலை?

நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள்.

நம்மால் முடியாது என்று நினைக்கும் செயல்களை, யாரோ ஒருவர் எங்கோ ஓர் இடத்தில் அதை செய்துகொண்டுதான் இருக்கின்றார்.

# மருத்துவக் குணங்கள்



♦ வெண்டைக்காய் சாப்பிடுவதால் உடற்சூடு கட்டுப்படுத்தப்படுகின்றது. வறட்டு இருமலுக்கு மிகவும் சிறந்த மருந்தாகப் பயன்படுகின்றது. வெண்டைக்காயில் அதிகளவு இரும்புச்சத்து உள்ளதால் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ளலாம்.

♦ சிறிய வெங்காயம் நான்கு எடுத்து, அவற்றின் தோலை உரித்துவிட்டு, நன்கு மென்று சாப்பிட்டுவிட்டு, சூடாக ஒரு தம்ளர் வெந்நீர் குடித்தால் எத்தகைய ஜலதோஷமும் நீங்கிவிடும்.

♦ பொன்னாங்காணிக் கீரையைப் பூண்டுபோட்டு வேகவைத்து, கடைந்து சாப்பாட்டுடன் சாப்பிட்டுவந்தால், மூலநோயால் அவதிப்படுபவர்கள் நோய் நீங்கிக் குணமடைவார்கள்.

♦புதினா இலையினை அரைத்துச் சாறெடுத்து இரவில் படுக்கப்போகுமுன் முகத்தில் தேய்த்து, காலையில் குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும். வேறு எந்தக் கிறீமோ, லோஷனோ முகத்திற்குத் தேவையில்லை. பருக்களும் முகத்தில் ஏற்படாது.

♦ நீரில் சிறிதளவு டெட்டோலுடன் சிறிதளவு உப்பையும் கலந்துவிட்டு, பிறகு அத்தண்ணீரினால் குழந்தைகளைக் குளிப்பாட்டினால் எந்தவிதமான தோல்வியாதியும் குழந்தைகளை நெருங்காது.

♦ பச்சை வெங்காயத்தை அரிந்து தயிரில் போட்டு இரவு படுக்கப்போகுமுன் சாப்பிட்டால் நிம்மதியான உறக்கம் வரும்.

♦ அன்னாசிப்பழத்தை அடிக்கடி சாப்பிட்டால், உடலில் ஏற்படும் வலிகளும் மற்றும், கை, கால்களில் ஏற்படும் மூட்டுவலியும் நீங்கிவிடும்.

♦ இரண்டு வெற்றிலையுடன், இரண்டு கராம்பு, ஒருதுண்டு சுக்கு வைத்து பால் தெளித்து நைஸாக அரைத்து நெற்றியில் பற்றுப்போட்டால் கடுமையான தலைவலி நீங்கும்.

♦ அறுகம்புல் சாற்றை அடிக்கடி பருகி வந்தால் நரம்புத்தளர்ச்சி நீங்கும். வயிற்றுப்புண், குடல்புண் குணமாகும்.

♦ சிறு குழந்தைகளுக்கு வாரம் ஒருமுறை வேப்பங்கொழுந்தை உப்பு சேர்த்து அரைத்து உண்ணக்கொடுத்தால் வயிற்றில் பூச்சித் தொல்லை இராது.

♦ இரவில் தூங்காமல் தொந்தரவு செய்யும் குழந்தைகளுக்குப் படுக்கப்போகுமுன் அரை ஸ்பூன் அல்லது ஒரு ஸ்பூன் தேன் கொடுத்தால் நன்றாகத் தூங்குவார்கள்.

♦ தினமும் 50 கிராம் அளவு அல்லது ஒரு துண்டு பப்பாளிப்பழம் சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும். மலம் நன்றாக வெளியேறும் வயிறு சுத்தமாகும்.

♦ முள்ளங்கியை அடிக்கடி சமையல் செய்தோ பச்சையாகவோ சாப்பிட்டு வந்தால் வாதநோய் நீங்கும். இருமல், கபம், குடல் சம்மந்தமான நோய்களுக்கும் முள்ளங்கி ஒருசிறந்த மருந்தாகும்.

# சமையல் குறிப்பு

## சாக்லேட் கேக்

### தேவையானவை:



வெண்ணெய் - 150 கிராம்
சீனி - 200 கிராம்
மைதா மா - 250 கிராம்
முட்டை - 3
பேக்கிங் பவுடர் - 1 மேசைக்கரண்டி
கொதிநீர் - அரை கப்
கொக்கோ பவுடர் - 2 மேசைக்கரண்டி



### செய்முறை :

கொக்கோ பவுடரை வெந்நீரில் கட்டியில்லாமல் கலக்கவும், மைதாவையும், பேக்கிங் பவுடரையும் 3 முறை கலந்துகொள்ளவும். ஒரு பாத்திரத்தில் வெண்ணெயையும், பொடித்த சீனியையும் போட்டு நன்கு மிருதுவாக அடித்துக்கொள்ளவும். பின் ஒவ்வொரு முட்டையாக உடைத்து ஊற்றி நன்றாகக் கட்டி இல்லாமல் அடிக்கவும். அடுத்து மைதா கலவையையும், கொக்கோ கலவையையும் மாற்றி மாற்றி கொஞ்சம் கொஞ்சமாக வெண்ணெய்க்கலவையில் சேர்த்துக்கொண்டே கைவிடாமல் கட்டி இல்லாமல் அடிக்கவும். பின்னர் கேக் செய்யும் அதாவது கனமான அலுமினிய பாத்திரத்தில், ஒரு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி அது எல்லா இடங்களிலும் பரவும்படி தடவவும். அதன்மேலே கொஞ்சம் மைதா மாவைத் தூவவும். இப்படிச் செய்தால் கேக் ஒட்டாமல் வரும். இப்போது கேக் கலவையை அந்தப் பாத்திரத்தில் பாதியளவு வரும்படி ஊற்றவும். எப்பொழுதும் கேக் பாத்திரத்தின் பாதி அளவுதான் ஊற்றவேண்டும். அப்போதுதான் கேக் வெந்தவுடன் மேலே எழும்பிவரும்.
மைக்ரோ வேவ் அவனில் 160 டிகிரி C-யில் 25-35 நிமிடங்கள் வைத்து பேக் செய்யவும். கேக் நன்கு வெந்ததும் அவனில் இருந்து எடுத்துத் துண்டங்கள் போடவும்.
ஸ்பெஷல் சொக்லேட் கேக் ரெடி!

## திருவழிபாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்
# பீடப்பணியாளர்களுக்கான பயிற்சிப் பாசறை






மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், திருவழிபாட்டு இயக்குனர் ஆகியோரது ஆலோசனைப்படி மன்னார் மறைக்கோட்டம், மடு மறைக்கோட்டம், முருங்கன் மறைக்கோட்டம் ஆகியவற்றில் உள்ள பங்குகளின் பீடப்பணியாளர்களுக்கு முழுநாள் பயிற்சிப்பாசறை திருவழிபாட்டு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

### மடு மறைக்கோட்டத்தில்

கடந்த 24.02.2018 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை பெரிய பண்டிவிரிச்சான் பங்கின் புனித மரியகொறட்டி ஆலயத்தில் பண்டிவிரிச்சான், தட்சனாமருதமடு, குஞ்சுக்குளம், கட்டையடம்பன் ஆகிய பங்குகளின் பீடப்பணியாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப்பாசறை திருவழிபாட்டு இயக்குனர் அருட்பணி. அ. ஆரோக்கியம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் அன்பிய மத்தியகுழு உறுப்பினர்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப செபம் மாணவர்களால் நடத்தப்பட்டது. 78 மாணவர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர். தியானப்பயிற்சியும், திருவழிபாட்டுப்பயிற்சி செயல்முறைகளும், புனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களும் கற்றுக்கொடுக்கப்பட்டன. விவிலிய விளையாட்டுக்கள், வினாவிடைப் போட்டிகள் ஆகிய பயிற்சிகளிலும் மாணவர்கள் உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் பங்குபற்றினர்.

அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. நான்கு குழுக்களிடையேயும் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற்றோருக்கு திருவழிபாட்டு இயக்குனர் ஏற்பாடு செய்திருந்த வெற்றிப்பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகளின்போது உடனிருந்து ஒத்துழைப்பு வழங்கிய அருட்பணியாளர்கள் சவுல்நாதன் அடிகளார், பி. எம். மதன்ராஜ் அடிகளார் ஆகியோருக்கு திருவழிபாட்டு இயக்குனர் நன்றி தெரிவித்தார்.

குளிர்பானம், மதிய உணவு, மாலைத் தேனீர் ஆகியவற்றை ஏற்பாடுசெய்த அருட்பணி. சவுல்நாதன் அடிகளாருக்கும், பங்கு மக்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன் பீடப்பணியாளர்களை பயிற்சிக்கு அனுப்பிவைத்த பங்குத்தந்தையருக்கும் பெற்றோர்களுக்கும் இயக்குனர் நன்றி தெரிவித்தார். இறுதியாக அனைத்துப் பயிற்சியாளர்களும் மகிழ்ச்சியோடு ஒருவருக்கொருவர் கைகுலுக்கி அன்பின் சமாதான வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெற்றுச் சென்றனர்.

### முருங்கன் மறைக்கோட்டத்தில்

கடந்த 12.05.2018 அன்று முருங்கன் மறைக்கோட்டப் பங்குகளின் பீடப்பணியாளர்களுக்கான ஒரு முழுநாள் திருவழிபாட்டுப் பயிற்சிப்பாசறை சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முருங்கன், கற்கிடந்தகுளம், பொந்தீவுகண்டல், சிறுக்கண்டல் ஆகிய பங்குகளின் 87 பீடப்பணியாளர்கள் பங்குபற்றினர். மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. அ. ஆரோக்கியம் அடிகளார் இப் பயிற்சி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

ஆரம்ப செபத்துடன் இயற்கையோடு ஒன்றித்த இறைபிரசன்னத்தை கண்டனுபவிக்கும் திருவழிபாட்டு செயல்முறை பயிற்சிகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து 5 குழுக்கள் பிரிக்கப்பட்டது. வினாவிடைப் போட்டிகளும், விவிலிய நாடகப் போட்டிகளும் நடத்தப்பட்டபோது அனைவரும் மகிழ்ச்சியோடு அவற்றில் பங்கெடுத்தனர். மதிய உணவின்பின் கிறிக்கெற் விளையாட்டுப்போட்டி இடம்பெற்றது. பரிசில்களும் வழங்கப்பட்டன. இப்பயிற்சி வேளையில் அருட்பணியாளர்கள் லோறன்ஸ் அடிகளார், ஜெயசீலன் அடிகளார் உடனிருந்து மதிய உணவிற்கு ஏற்ற ஆயத்தங்களை ஒழுங்குசெய்தும் மாணவர்களுக்கேற்ற அறிவுரைகளை வழங்கியும் உதவிபுரிந்தனர்.

பின்னர் அனைத்து மாணவர்களும் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி சமாதான வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். நிறைவாக குருக்களின் ஆசீருடன் இப்பயிற்சிப்பாசறை இனிதே நிறைவெய்தியது.

### மன்னார் மறைக்கோட்டத்தில்

கடந்த 21.04.2018 அன்று மன்னார் மறைக்கோட்ட பங்குகளின் பீடப்பணியாளர்களுக்கு தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்தில் சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. அ. ஆரோக்கியம் அடிகளார் நெறிப்படுத்தலில் 130 பீடப்பணியாளர்களுக்கு திருவழிபாட்டு ஒரு நாள் பயிற்சிப்பாசறை நடைபெற்றது. இப்பயிற்சிப்பாசறையில் தலைமன்னார், கீளியன்குடியிருப்பு, பேசாலை, சிறுத்தோப்பு, தோட்டவெளி, யோசப்வாஸ் நகர் ஆகிய பங்குகளிலிருந்து பங்குத்தந்தையர்கள் தங்கள் பங்குப் பீடப்பணியாளர்களை பயிற்சிபெற அனுப்பிவைத்திருந்தனர். பேசாலைப் பங்கில் இருந்து 10 சிறுமிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்ப செபத்துடன் தியானம், புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, விவிலிய வினாவிடை திருவழிபாட்டு செயல்முறைப்பயிற்சி, விவிலிய நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மதிய உணவின் பின்னர் ஆறு குழுக்களாக பிரிக்கப்பட்டு கிறிக்கெற் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

இப்பயிற்சியின்போது தோட்டவெளி, புனித யோசப்வாஸ் நகர் பங்குத்தந்தையர்களான அருட்பணியாளர்கள் செபமாலை அடிகளார், யூட்குருஸ் அடிகளார் உடனிருந்து அனைத்து உதவிகளும் புரிந்தனர். நிறைவாக நன்றிச் செபத்துடன் குருக்களின் ஆசீரோடு பீடப்பணியாளர்கள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி சமாதான வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்ச்சியோடு விடைபெற்றுச் சென்றனர்.

# எழுத்தூர் பங்கின் ஆன்மீக நிகழ்வுகள்

### 1. கீரி கர்த்தர் ஆலயத்திருவிழா

ஆண்டவரின் விண்ணேற்பு விழாவானது வருடாவருடம் கீரி கர்த்தர் ஆலய விழாவாகக் கொண்டாடப்பட்டு வருவது வழக்கம். அந்த வகையில் வைகாசி மாதம் 9ஆம் திகதி ஆலயக் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது.

முதல் நாளில் வங்காலை உதவிப்பங்குத்தந்தை அருட்திரு. பா. றொஸான் அடிகளாரும், இரண்டாம் நாள் சாந்திபுரம் பங்குத்தந்தை அருட்திரு நேரு குரூஸ் அடிகளாரும், மூன்றாம் நாள் அருட்தந்தை அந்தோனிதாஸ் டலிமா அடிகளாரும், நான்காம் நாளாகிய நற்கருணைத் தினத்தன்று "அன்பின் பிறப்பிடம் நற்கருணை என்னும் கருப்பொருளில் அருட்திரு. வின்சன்ற் அ.ம.தி. அடிகளாரும் வழிபாடுகளைச் சிறப்பித்தனர்.

13ஆம் திகதி திருநாட் திருப்பலியினை அருட்திரு. எஸ். கே. தேவறாஜா அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலி நிறைவில் கர்த்தர் திருச்சுருப ஆசீர் இடம்பெற்று திருவிழா நிறைவுபெற்றது. எழுத்தூர் பங்குத்தந்தை அருட்திரு. பி. ஜேசுறாஜா அடிகளாரின் வழிநடாத்தலில் ஆலய சபையினர் மற்றும் பக்திச் சபைகளின் உறுப்பினர்களும் இணைந்து சிறப்புற அனைத்தையும் செய்து முடித்தமை வரவேற்கத்தக்கதாகும். வழக்கம்போல் பக்தர்கள் அனைவருக்கும் பால்சோறு மற்றும் பணிஸ், குளிர்பானம் வழங்கப்பட்டன.

### 2. எழுத்தூர் ஆலயத்தில் குணமளிக்கும் வழிபாடு

எழுத்தூர் பங்கில் குணமளிக்கும் வழிபாடு அர்த்தமுள்ள வகையில் வைகாசி 14ஆம் திகதி இடம்பெற்றது. இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை மாட்டீன் அடிகளாரினதும் பாடகர் சகோதரினதும் வழிநடத்தலில் இக்குணமளிக்கும் வழிபாடு இடம்பெற்றது. இவ்வழிபாடானது திருச்செபமாலை மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகியது. முதலில் புகழ்ச்சியும் தொடந்து திருப்பலியும் அடுத்து நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றன. நற்கருணை ஆராதனை வேளையில் மறை உரை, செபங்களை அடுத்து நற்கருணை ஆண்டவர் கதிர்பாத்திரத்தில் வீற்றிருந்தபடி மக்களினூடாக வலம்வந்தார். அருட்தந்தை மாக்கஸ் அடிகளாரின் ஆதரவில் எழுத்தூர் பங்குத்தந்தை யேசுறாஜா அடிகளார் இந்நிகழ்வினை ஒழுங்கமைத்திருந்தார்.

### 3. ஜீவபுரம் புனித பத்திமா ஆலய விழா

ஜீவபுரம் புனித பத்திமா ஆலய விழாவானது இவ்வருடம் வைகாசி மாதம் 19ஆம் திகதி மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 16ஆம் திகதி கொடியேற்றமும் திருப்பலியும் இடம்பெற்றது. எழுத்தூர் பங்குத்தந்தை பி. யேசுறாஜாவின் வழிநடத்துதலில் இந்தத் திருவிழா நவநாள் வழிபாடுகள் இடம்பெற்றன. முதல்நாள் அருட்திரு. பா. றொசான் அடிகளாரும் இரண்டாம் நாள் அருட்திரு. கா. சுகணறாஜ் குரூஸ் அடிகளாரும் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றினர்.

நற்கருணைத் தினமான மூன்றாம் நாள் வழிபாட்டின்போது பேசாலை உதவிப்பங்குத்தந்தை அருட்திரு. ப. சாந்தன் சோசை அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுக்க, செபமாலைத்தாசர் சபையினைச் சேர்ந்த அருட்திரு டெனி குரூஸ் அடிகளார் மறையுரை ஆற்றினார்.

மறுதினம் 19ஆம் திகதி இடம்பெற்ற திருநாட் திருப்பலியினை சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனர் அருட்திரு பா. நேசன் அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலி நிறைவில் பத்திமா அன்னையின் திருச்சுருப ஆசீர் இடம்பெற்றது. பங்குத்தந்தை யேசுறாஜா அடிகளாரோடு இணைந்து அனைத்து முன் ஆயத்தங்களையும் மேற்கொண்டோர் ஆலயசபையினர் மற்றும் பக்திச்சபையினராவர்.

## அந்தோனியார் புரம் பங்கில் .....
1ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலில் ஆயர் அவர்கள் கத்தாளம்பிட்டிச் சந்தியிலிருந்து உந்துருளிப் பவனியாக அழைத்துவரப்பட்டார். அதன்பின்னர் அந்தோனியார்புரத்திற்கு செல்லும் வீதியில் மன்னார் சங்குபிட்டி பிரதான வீதியிலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியிலே அந்தோனியார்புர பாடசாலை மாணவர்களின் மேலைநாட்டு இசைக் கருவிகளின் மகிழ்வொலியோடு ஆயர் அவர்கள் அழைத்துவரப்பட்டார். ஆலயத்திற்கு முன்வீதியிலிருந்து சிறுமிகள் நடனம் ஆடி ஆயரை வரவேற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற சிறிய வரவேற்பைத் தொடர்ந்து, தூய அந்தோனியார் திருவிழா தொடக்க நாளுக்கான கொடியை ஆயர் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கத்தோலிக்க திருச்சபையின் திருவழிபாட்டுத் திருமரபிற்கொப்ப புதிய ஆலயத்தினை ஆயர் அவர்கள் திருப்பொழிவு செய்து திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக நிறைவேற்றினார்.

இத்நிகழ்வில் பெருந்தொகையான இறைமக்கள், அரச, அரசசார்பற்ற பணியாளர்கள், துறவிகள், அருட்பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். தேவன்பிட்டி பங்கிலிருந்து பிரிந்து சில வருடங்களுக்கு முன்னர் புதிய பங்காக உருவாக்கப்பட்ட அந்தோனியார்புரம் பங்கின் முதல் பங்குத்தந்தையாகப் பணியாற்றிவரும் அருட்பணி. அ. றஜனிகாந் அடிகளார் அனைத்தையும் சிறப்பாக ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தியிருந்தார்.

## மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப்பங்கின்
# மூத்தோர் சங்கத்தினரின் மகிழ்ச்சிப் பயணம்

வருடாந்தம் நடைபெறும் மூத்தோருக்கான மகிழ்ச்சிப் பயணம் மே மாதம் 26, 27ஆம் திகதிகளில் சிறப்பாக நடந்தேறியது. 40 பேர் கொண்ட குழுவினர் மு.ப 6.30 மணியளவில் புனித செபஸ்தியார் பேராலயத்திலிருந்து புறப்பட்டு மு.ப 8.30 மணியளவில் வவுனியாவை அடைந்து "அம்மாச்சி" உணவகத்தில் காலை உணவை உட்கொண்டோம்.

பின்னர் மு.ப 9.30 மணியளவில் புறப்பட்டு 12.00 மணியளவில் கன்னியா வெந்நீர்க் கிணறுகளைப் பார்வையிட்டோம். அதனைத் தொடர்ந்து கோணேஸ்வரர் ஆலயம் அழகிய மான்கூட்டங்களையும் இரம்மியமான இயற்கை வளங்களையும் 'இராவணன் வெட்டு' ஆகியவற்றையும் கண்டுகளித்து பி.ப 1.30 மணியளவில் திருகோணமலையில் மதிய உணவு உண்டோம்.

பி.ப 2.30 மணியளவில் நிலாவெளிக் கடற்கரையைக் கண்டுகளித்தோம். பி.ப 3.30 மணியளவில் உப்புவெளி மறைக்கல்வி நிலையம் சென்று எமது பாசமிகுந்த அதிவந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையைச் சந்தித்து மகிழ்வுடன் கலந்துரையாடினோம். பின்னர் அவரது ஆசீரைப்பெற்று பி.ப. 4.30 மணியளவில் பாலையூற்று புனித லூர்து மாதா ஆலயம் சென்றோம். திருநாள் வேஸ்பர் அன்று இடம்பெற்றதால் அருட்தந்தை போல் றொபின்சன் அவர்களது மறை உரை எமக்கு மிகுந்த பயனளித்தன. நிலத்தடியில் அமைந்துள்ள லூர்து கெபியில் பல படிகள் தாண்டிச்சென்று வழிபாட்டில் பங்கெடுத்தோம். எமது முதியோர் சமாச இயக்குநர் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் அவர்களின் கோரிக்கையின் பேரில் தங்குமிடவசதிகள் எமக்குத் தரப்பட்டன.

திருநாட் திருப்பலியின் முதலாம் பூசையில் அருட்பணி. ஜெறி கூஞ்சு அவர்கள் வழங்கிய திருவுரை எமது உள்ளங்களைக் கவர்ந்தது. இதனைத் தொடர்ந்து திருமலையில் காலை உணவை முடித்து துறைமுகம், "மாபிள் பீச்" ஆகிய இடங்களுக்கும் சென்று இயற்கைத் துறைமுக அமைப்பு, அழகு ஆகியவற்றை கண்டுகளித்தோம்.

பிறீமா ஆலை, அரும்பொருட்காட்சி ஆகியவற்றை வெளியில் நின்றுதான் தரிசிக்க முடிந்தது. முன்கூட்டி அனுமதி பெறாததால் உட்பிரவேசிக்க முடியவில்லை. மீண்டும் வவுனியாவை அடைந்து. மதிய உணவை அருந்தியபின். பி.ப 3.00 மணியளவில் மடுப்பதியை அடைந்தோம். அதன்பின் பி.ப 5.00 மணியளவில் மன்னாரை வந்தடைந்தோம்.

எந்தத் தடங்களுமின்றி எமது மகிழ்ச்சிப்பயணம் திருப்தியாக நிறைவேறியதில் இறைவனுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**தகவல்: அ. அந்தோனிமுத்து – தலைவர்.**


## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.191

## தானியேல் (அதிகாரம் 1 முதல் 12 முடிய)

உங்கள் விடைகளை யூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | ❖ | | ❖ | 02 | | |
| | 03 | | | | 04 | | | ❖ | |
| | | 05 | | 06 | ❖ | 07 | | | 08 |
| 09 | | | 10 | | | 11 | | | |
| | | ❖ | ❖ | | | | 12 | 13 | |
| ❖ | | | 14 | | 15 | | | | ❖ |
| | 16 | 17 | | 18 | | 19 | 20 | 21 | |
| | ❖ | | | ❖ | | | | | |
| | 22 | | | | | ❖ | | | 23 |
| 24 | | | | 25 | | | | 26 | |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அதன் ........................ மிகவும் அழகாய் இருந்தன.
2. ஏனெனில் அவரே ................. கடவுள்.
3. நிமிர்ந்து .......................
4. அது உண்மையான ................................
7. நாங்கள் .................. செய்தோம்.
9. அவர் ................ மிகு கடவுளின் ஆவியால் நிரப்பப் பெற்றவர்.
10. இதுவே நீர் கண்ட ......................
11. உம் தெய்வங்களை .................. வில்லை.
13. .............................. தயை கூர்ந்து பத்து நாள் உம் ஊழியர்களாகிய எங்களைச் சோதித்துப்பாரும்.
15. அது ..................... மண்ணுக்குத் தள்ளியது.
22. .......................... எத்தியோப்பியரும் அவன் பின்னே செல்வார்கள்.
24. எனவே இந்த மேற்பார்வை ---- அவனிடம் .................. அரசரே, நீர் நீடூழி வாழ்க!
25. எல்லா அரசுகளும் அவர்களுக்குப் ............. கீழ்ப்படியும்.
26. நீர் பெரிய ......................... ஒன்றைக் கண்டீர்.

### வலமிருந்து இடம்

4. அவருள் சிலர் முடிவில்லா ......................... பெறுவர்.
5. என் தலைவரே! .............
8. ......................... அரசரே என்று அவர்கள் விடையளித்தனர்.
14. இதுவே என் .........................
21. ஆனால் ...................... மன்றம் தீர்ப்பு வழங்க அமரும்.
23. அவரது அரசு ................. வழி நிலைக்கும்!
25. வானத்தின் ......................... யால் அந்த மனிதன் நனையட்டும்.

### மேலிருந்து கீழ்

1. அதற்குப் பெரிய ................ பற்கள் இருந்தன.
6. ஞானிகளுக்கு .................. வழங்குபவர் அவரே.
7. ஏனெனில், நாங்கள் உமக்கு எதிராகப் ............... செய்தோம்.
12. நீ இறந்து ................. பெறுவாய்.
14. அவர் ................ விந்தைகள் எத்துணை வலியன!
15. தானியேல் ஆகிய நான் ................ கலங்கினேன்.
17. ஏனெனில் அவர் தம் கடவுளை உறுதியாக .................. னார்.
19. அரசன் அவர்களை நோக்கி ...................... ஒரு கனவு கண்டேன்.
20. நூல்கள் ......... வைக்கப்பட்டன.
21. அரசரே! நீர் ........... வாழ்க!

### கீழிருந்து மேல்

3. ஆயினும் இந்த ............ சிறிது காலமே நீடிக்கும்.
4. தம் விருப்பப்படி யாரையும் ......................... விடுவார்.
8. அதற்கும் ................ உரிமை அளிக்கப்பட்டது.
10. நீர் வணங்கும் கடவுளே தெய்வங்களுக்கெல்லாம் ................
15. அதில் எல்லா உயிர்களுக்கும் போதிய ..................... இருந்தது.
16. முன்னிலும் அதிக ......................... எனக்குக் கிடைத்தது.
23. பின்பு தென் திசை மன்னன் .................... பெறுவான்.
24. .............. தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்டார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 189

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
ஆர். றொஷாணி,
எமில்நகர், மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
ஈ. அன்ஸ்லின்,
பெரிய பண்டிவிரிச்சான்,
மடு.

**மூன்றாம் பரிசு:**
எம். மனோகரன்,
தாழ்வுபாடு வீதி,
மன்னார்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 189ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. நிறோஜன் சில்வா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
02. லா. கிறேஸ் ஜெஸ்மின், இல. 137, வவுனியா.
03. ஜி. வினோதர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
04. ஈ. ஆர். றமீசலா, எழுத்தூர், மன்னார்.
05. நி. யாழிசன், யோசவ்வாஸ் வீதி, செட்டிகுளம்.
06. வி. தாசன் டலிமா, தலைமன்னார் கிராமம்.
07. எஸ். வரதன் குரூஸ், துணுக்கா வீதி, தாழ்வுபாடு.
08. கே. அபிஜாஸ், இல. 168, மடுக்கரை, நானாட்டான்.
09. செ. அகில் மதி. பெரிய பண்டிவிரிச்சான், மடு.
10. சூ. சூசானா சில்வா, கொவ்வங்குளம், நானாட்டான்.
11. புஸ்பா சேவியர், இல. 58/6 A மத்திய வீதி, உவர்மலை.
12. இ. வரவணிக்கா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
13. செ. அமந்தா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
14. ஆர். கெயில் குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
15. ப. மேரி. சிறோஜன் பீரிஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
16. வயலட் யோண், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
17. ஜே. இனிதா குரூஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
18. ஈ. ஆர். றிபோசலா, எழுத்தூர், மன்னார்.
19. ஜெகன் லெம்பேட் நிக்சலா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
20. செ. மேரி அன்சியா, களிமோட்டை, முருங்கன்.
21. எஸ். பி. தயாளன், இலுப்பைக்குளம், நேரியகுளம்.
22. ஜே. ஜெரோஷா லெம்பேட், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
23. மேரி ஆன் சபீனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
24. ஈ. ஏ. டிவைன்சி, சாவற்கட்டு, மன்னார்.
25. அ. விபுஷிகன் சோசை, சுகந்திபுரி, வங்காலை.
26. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி, மன்னார்.
27. ஆர். ஜெகநாதன், இல: 161 மடுக்கரை, நானாட்டான்.
28. என். நேகா குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
29. ஏ. கில்டா, கட்டையடம்பன், மடு வீதி.
30. ஈ. ஆர். றமீசன், எழுத்தூர், மன்னார்.
31. ஏ. கில்டா, கட்டையடம்பன், மடுவீதி.
32. வி. நிவேதினி, கொன்னையன் குடியிருப்பு, தோட்டவெளி.
33. அன்ரனி ஜெகன் லெம்பேட், பெரியபண்டிவிரிச்சான், மடு.
34. ஜே. மெறின் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
35. அன்ரனி கலிஸ்ரன் நிரோஜன் லெம்பேட், மடு.
36. பி. சோபியா, கொன்னையன் குடியிருப்பு, தோட்டவெளி.
37. எஸ். ராணி பீரிஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
38. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
39. டெபேறா மோகன்ராஜ், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
40. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
41. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
42. என். தவமலர், முதலியார்குளம், செட்டிகுளம்.
43. சி. நவரத்தினராஜா, முதலியார்குளம், செட்டிகுளம்.
44. கே. டொறின் மீனா, நாச்சிக்குடா.
45. வி. டிவைனா குரூஸ், லூக்கா வீதி, தாழ்வுபாடு.
46. பி. டேவிற், பெற்றா, மன்னார்.
47. இ. மெகன்சியா, இல: 161, மடுக்கரை, நானாட்டான்.
48. அ. பெனிலன், எழுவைதீவு, யாழ்ப்பாணம்.
49. என். ஜஸ்மின், பாடசாலை வீதி, முதலியார்குளம்.
50. எஸ். டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.

## முருங்கன் டொன் பொஸ்கோவின் ஏற்பாட்டில் ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை கோஸ்ராறிக்கா எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பனாமா நாட்டில் நடைபெறவுள்ள உலக கத்தோலிக்க இளைஞர் ஒன்றுகூடலுக்கு ஆயத்தமாக இவ்வாண்டு இறுதியில் வத்திக்கானில் நடைபெறவுள்ள ஆயர் மாமன்றத்தின் ஒன்றுகூடலில் கலந்துரையாடப்படவேண்டிய விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக உலகமெங்கும் உள்ள மறைமாவட்டங்களில் நடைபெற்றுவரும் ஒன்றுகூடலின் ஒரு பகுதியாகவே இந்த நிகழ்ச்சித்திட்டம் முருங்கனில் முன்னெடுக்கப்பட்டது.

அன்றைய தினம் காலை நிகழ்வுகளை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளார் ஆரம்பித்து வைத்தார். அன்றைய தினம் மாலையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் இந்நிகழ்விற்கு வருகைதந்து சிறப்பித்தார். இந்நிகழ்வுக்கு வருகைதந்த ஆயரை டொன் பொஸ்கோவின் சலேசிய அருட்பணியாளர்களின் முருங்கன் தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும், குழுத் தலைவருமான அருட்பணி. போல் அடிகளாரும், ஏனைய குருக்களும் அங்கு தொழிற்பயிற்சி பெறும் மாணவர்களும் வரவேற்றனர்.

மன்/ பரிகாரிகண்டல் மகாவித்தியாலய மாணவர்கள் தமிழ்ப் பண்பாட்டு இன்னிய வாத்திய மகிழ்வொலியோடு ஆயரை வரவேற்று அழைத்துச்செல்ல, நிகழ்விற்கு வருகை தந்திருந்த அனைத்து இளைஞர்களும், இளம் பெண்களும் கரவொலி எழுப்பி தங்கள் மகிழ்வையும், அன்பையும் தெரிவித்து ஆயரை வரவேற்றனர்.

பல்சுவை அம்சங்களைக் கொண்டிருந்த இந்நிகழ்வின் இறுதியில் ஆயர் மாமன்றக் கலந்துரையாடலுக்கு உதவியாக அனுப்பப்பட்டிருந்த வினாக்கள் இளைஞர்களால் கலந்துரையாடப்பட்டு அதன் அடிப்படையில் எழுந்த கருத்துக்கள் கோவையாக்கப்பட்டு ஆயர் மாமன்றத்திற்கு அனுப்புவதற்காக மன்னார் ஆயரிடம் கையளிக்கப்பட்டது. இளைஞர்கள் சார்பில் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஒன்றியத்தலைவர் செல்வன் டன்ஸ்ரன் அவர்கள் ஆயரிடம் இதனைக் கையளித்தார். இறுதியாக ஆயர் ஆசியுரை வழங்கினார். நடைபெற்ற கலை பண்பாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசினை வழங்கி தனது ஆசீரையும் ஆயர் வழங்கினார்.

அருட்பணி. போல் தலைமையிலான தூய டொன் பொஸ்கோவின் சலோசிய சபை அருட்பணியாளர்கள் இந்நிகழ்வை மிகவும் அர்த்தமுள்ள - பயனுள்ள விதத்தில் ஒழுங்குபடுத்தி நடாத்தியது பாராட்டப்பட வேண்டியதொன்று.

## கிளரீசிய சபையில் 109 மறைசாட்சிகள் .....

7ஆம் பக்கத் தொடர்ச்சி

இன்று முதல் நூற்றாண்டைவிட அதிகமான விசுவாசிகள் “கிறிஸ்துவை மறுதலிக்கமாட்டோம்” என்ற திடமான சாட்சிய வாழ்விற்காய் தம்மையே தியாகம் ஆக்குகின்றனர். இதுவே திருச்சபை. திருச்சபையால் இனங்காணப்பட்டுள்ள கிளரீசிய துறவற சபையின் 109 மறைசாட்சியரை நினைவுகூரும் நாமும் அவர்களின் ஆன்மீக வாழ்வைப்பற்றி ஆழமாக சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

இவர்களின் மரணம் மனுக்குலத்தின் இன்றைய நிலையின் வெளிப்பாடாய் அமைகின்றது. இவர்கள் தங்களது நம்பிக்கையை காத்துக்கொண்டதால் மனுக்குல மீட்பின் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். இவர்களின் இறப்பு இழப்பு அல்ல, மாறாக இறை வல்லமையை வாரிவழங்கும் வரமாக அமைகின்றது. தீமையை நன்மையால் வெல்லமுடியும் என்பதற்கு இவர்களின் வாழ்வும் வழியும் எடுத்துக்காட்டாய் அமைகின்றன.

“இவர்களை மன்னிக்கின்றோம்” என்பதே இக்கிளரீசிய மறைசாட்சிகளின் இறுதி வார்த்தையாக இருந்தது. கொடூரமான துன்புறுத்தலின்போது வாய் திறந்து இவ்வார்த்தைகளை உச்சரிக்க முடியாதுபோனவர்கள் தங்கள் இதயத்தால் எல்லோரையும் மன்னித்தனர்.

இதயத்தில் அன்பு இருந்தால் மட்டுமே நாம் மற்றவர்களை மன்னிக்க முடியும் என்பதனை இவர்களின் வாழ்வு எமக்கு எடுத்தியம்புகின்றது. மேலும் இப்புனித நிகழ்வில் ஆயர்கள் உட்பட 250ற்கும் மேற்பட்ட குருக்கள் மற்றும் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!



மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

**- மன்னா நிர்வாகம்.**

## செபமாலைதாசர் துறவற சபையின் .........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கண்டி, நீர்கொழும்பு துறவற இல்ல அதிபராகவும், மெய்யியல், இறையியல் கல்வி மாணவர்களின் பயிலுனராகவும் , இலங்கை செபமாலைத்தாசர் துறவற சபையின் மாகாண சபை ஆலோசகராகவும் பணிசெய்துள்ளார். இவர் உரோமையில் உள்ள தோமஸ் அக்குவானஸ் பல்கலைக்கழகத்தில் ஆன்மீக இறையியலில் முதுமாணிப் பட்டத்தைப் (Licentiate) பெற்றுள்ளார். இச்சபையின் உதவித்தலைவராக 2012-2018 வரை சபையின் பெங்களூரில் உள்ள தலைமைச் செயலகத்தில் பணியாற்றியுள்ளார்.

இத்துறவற சபையானது யாழ்ப்பாணத்திலுள்ள தோலக்கட்டியில் அருட்தந்தை இறையடியார் பி. ஏ. தோமஸ் அடிகளாரினால் 1928ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் சிறப்பு ஆசியாகக் கண்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது காட்சித் தியான சபையாகும். இதன் இன்னொரு சிறப்பு இச்சபை ஈழத்து மைந்தனால் உருவாக்கப்பட்டமை ஆகும். எனவே இவ்வாறான சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட செபமாலைத் தாசர் துறவற சபையின் 8ஆவது பொது அமர்வில் இலங்கை மண்ணின் மைந்தரான அருட்தந்தை ஐஸ்ரின் ராஜ் அடிகளார் தெரிவுசெய்யப்பட்டமை மகிழ்ச்சிக்குரியதாகும். இவரது பணிசிறக்க மூவொரு இறைவனின் நல்லாசீரும் பரிசுத்த செபமாலை அன்னையின் பரிந்துரையும் என்றும் துணைநிற்கப் பிரார்த்தித்து வாழ்த்திநிற்கின்றோம்.

**தகவல் : அருட்பணி. எஸ். ஜெபன் (செ.தா.)**

## நீங்காத நினைவுகள்

### 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 12 1933



உதிர்வு 26 06 2008

**திருமதி. ச. ஜேட்றூட் அழகேஸ்வரி (அழகு)**
**(முருங்கன் பிட்டி, முருங்கன்)**

**"மண்ணில் வாழ்ந்து சென்ற நல் இதயமே,**
**விண்ணில் இறைவன் இன்பம் தருவார்"**

எங்கள் அன்பான அம்மா, அம்மம்மா! நீங்கள் இயற்கை எய்தி 10 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் நிழல்போல் எம்மைத் தொடர்கின்றன. செபத்தின் ஊடாக எங்கள்மேல் அருள்மழை பொழிந்தீர்கள். எம்மைக் கண்மணிபோல் காத்தீர்கள். கஸ்ரப்பட்ட நிலையிலும் எங்களுக்குக் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கினீர்கள். விசுவாசத்தில் எம்மை வேரூன்றச் செய்தீர்கள். நோயினால் துன்புற்ற வேளையிலும் எமக்குத்துணையாக நின்றீர்கள். நல்வழியில் எம்மை வழிநடத்தி நன்மை தீமைகளை அறியச்செய்தீர்கள். என்றும் நற்கருணை பிரசன்னமும், உங்கள் பிரசன்னமும் எம்முடன் இருக்க வேண்டுகின்றோம்.

*இவரின் ஆன்ம சாந்திக்காக 26.06.2018 அன்று காலை 6.30 மணிக்கு முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

"நிபந்தனையற்ற பாசம், உனக்காக அழும் விழிகள், நீ மட்டும் சாய்ந்துகொள்ள ஒரு தோள் உள்ளது. பசிக்காமல் பார்த்துக்கொள்ளும் ஒரே ஒரு தேவதை உன் அம்மாதான்"

**பிரிவால் நினைந்துருகும் :**
அன்புக் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# இலங்கையின் மத அரசியலும் மக்களும்

06ஆம் பக்கத் தொடர்ச்சி

இற்றைக்கு 2554 ஆண்டுகளுக்குமுன் விஜயனுடன் கரையொதுங்கிய உபதிஸ்ஸன என்ற பிராமணன் மேற்குறிப்பிட்ட சிவாலயங்களுக்கும் சென்று வழிபட்டதாக பௌத்த துறவிகளால் எழுதப்பட்ட மகாவம்சம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்று இந்துமதத் தொன்மை என்பது இலங்கையைப் பொறுத்தவரை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் அதனைத் தக்கவைப்பதற்குமான கருவி என்ற நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது.

பௌத்த மதமானது அன்பையும், அமைதியையும் சமாதானத்தையும் தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ளும் இலங்கை நாட்டில் ஏன் பௌத்த மதத்தின் பெயரில் போர், வன்முறை, இனங்களுக்கும் மதங்களுக்குமிடையிலான அச்சம், பகைமை, விரோதம், குரோதம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது? ஆகவே பௌத்த மதம் என்பது வெறும் அரசியலுக்கான ஒரு கருவி மட்டும்தானா என்பது இன்றைய கேள்வியாக உள்ளது.

ஆரம்ப காலங்களில் மதங்கள் ஒவ்வொன்றும் இங்கு தனித்துவமாகவும், சமத்துவமாகவும் பிரிவினைக்குட்படாது இருந்தமையும் வாணிப நோக்கில் அராபியரின் வருகையைத் தொடர்ந்து இஸ்லாம் மத உள்வருகையும் அக்கால வரலாற்று சம்பவங்கள் ஊடாக அறியலாம். குறிப்பாக பௌத்தமதத் தலைவர்களின் கிளர்ச்சியின்போது அநாகரிக தர்மபால மற்றும் சுமங்கல தேரர் போன்றோர் பிரித்தானியரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சேர் பொன். இராமநாதன் கடல் மார்க்கமாக பிரித்தானியா சென்று இவர்களுக்காக வாதாடி விடுதலை பெற்றுக்கொடுத்தமையும் இதனைத் தொடர்ந்து 1919ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது அதன் தலைவராக சேர் பொன். அருணாச்சலம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டமையும் இன, மத ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகும்.

பிரித்தானியர் 1948ஆம் ஆண்டில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியதைத் தொடர்ந்து இலங்கையரால் உருவாக்கப்பட்ட யாப்பில் மதச்சுதந்திரம் முன்வைக்கப்பட்டபோதும் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானமும் ஏனைய மதங்களுக்குரிய சமவாய்ப்பினை நிராகரித்தமையும் குறிப்பிடதக்கது. இலங்கை அரசியலில் ஆரம்பத்தில் காணப்பட்டதுபோலவே பௌத்த பிக்குமாருக்கு முதன்மையிடம் வழங்கப்பட்டு வருகின்றமையினை இன்றுவரை நாம் அவதானிக்கலாம். குறிப்பாக உயர் பதவிகளுக்கு நியமனம் பெறுவோர் பௌத்த பீட முதல்வரிடம் ஆசீர்வாதம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் இடதுசாரிகள்கூட தாம் மதச் சார்பற்றவர்கள் என்று கூறிக்கொண்டதாலும் மதத்துக்கு அப்பால் இவர்களால் வளரமுடியவில்லை. எடுத்துக்காட்டாக முதலாம் குடியரசு யாப்பின் வரைபில் கொல்வின் R.D. சில்வாவின் பங்கு நினைவுகூரத்தக்கது.

இன்று காணப்படும் இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு இறுதித்தீர்வினை எட்டமுடியாமைக்குக் காரணம் பௌத்த குருமாரின் அரசியல் பிரவேசமும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வின்மையும் எனலாம். மதத்தின் பிளவுகளை கூர்மைப்படுத்துவதற்காக ஒவ்வொரு மதத்திற்கும் தனித்தனி அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கையின் சுதந்திரத்தின்பின் பெரும்பாண்மை பௌத்த சிங்கள ஆட்சியாளர்களால் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மதம் அரசியலாக்கப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை முடிவடைந்த நிலையிலும் மதத்தின் வடிவில் முரண்பாடுகள் தோன்றியவண்ணமே உள்ளன.

ஒரு மனிதனைக் கட்டுப்படுத்தும் ஆயுதம் மதம் என்பதை ஆட்சியாளர்கள் தெளிவாக அறிந்துவைத்துள்ளனர். ஆகவே இதனை அடிப்படையாகக்கொண்டு மதத்தினை அரசியலாக்கியுள்ளனர் என்பதே உண்மை. முன்னாள் இராஜதந்திரியான மங்கள முனசிங்க அவர்கள் கூறிய கருத்தைக் குறிப்பிடுவது பல்லின சமூகங்களைக் கொண்ட இலங்கைக்கு பொருத்தமானதாக அமையும். நாம் இந்திய அரசியல் யாப்பினை கருத்திற்கொண்டு அதிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சரத்துக்களை எமது அரசியலிலும் இணைத்துக்கொள்ள வேண்டும். உலகின் பெரும்பான்மையான மக்களால் கடைபிடிக்கப்படும் இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களே இங்கும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த நான்கு மதங்களும் அடிப்படையில் ஒன்று. குறிப்பாக பௌத்தம் இந்து மதத்திலிருந்தே தோற்றம்பெற்றது. பகவத்கீதையின் 18ஆம் அதிகாரத்தின் சரத்துக்களில் சில பௌத்த தத்துவங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அதேபோல் கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மதத்தில் பல வகையான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் எம்மிடையேயான வேறுபாடுகள் களையப்பட வேண்டும்.

ஆனால் ஆயுதப்போர் முடிவடைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் இன்று உருவெடுத்துள்ள பூதம் மதக் கலவரமே. இதனை அனைவரும் நாளுக்குநாள் அறிந்துகொண்டும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டும் வருகிறோம். கடவுள் சிலை உடைப்புக்கள், பள்ளிவாசல் தகர்ப்புக்கள் என இவை அனைத்தும் உலகை அழிவுக்கு இட்டுச்செல்கின்றதே தவிர மதத்திற்கான அடையாளத்தை பெற்றுத்தருவனவல்ல. இன்றைய இளைஞர் சமுதாயம்கூட மதத்தை ஒரு ஆயுதமாகக்கொண்டு செயற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

"மதம் மனிதனை மயக்கும் மது". மதத்தை அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தக்கூடாது. அது மதத்தினை இழிவுநிலைக்கு இட்டுச்செல்லும் ஒரு செயற்பாடாகும். மதச்செயற்பாடுகள் போன்ற எந்தவொரு செயற்பாடுகளும் அரசியலில் நுழைவதை மதத்தலைவர்கள் அனைவரும் தடைசெய்ய எத்தணிக்க வேண்டும். மதத்தையும் அரசியலையும் ஒரே குடையின்கீழ் நோக்கக்கூடாது. கடவுள்கள் அனைவரும் ஒற்றுமையாகவே இருப்பர். ஆனால் மனிதர்கள் மட்டுமே கடவுளை வேறுபடுத்தி முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றார்கள். இதன் பயன் என்ன? இதனால் ஒவ்வொருவரும் எதனைச் சாதிக்க விரும்புகின்றார்கள்? இதுவரை காலமும் எதனை சாதித்தார்கள்? முரண்பாடுகளினால் மிஞ்சியது உயிர் அற்ற உடல்கள் மட்டுமே.

இலங்கை மக்களின் ஒற்றுமையைக் குலைக்கும் தற்போதைய சிறந்த கருவி 'மதம்' என்பதே உண்மை நிலவரம். இதனை மக்கள் ஏற்க மறுத்து முரண்பாட்டுக்கு ஆதரவளிக்கின்றனர்.

இலங்கை நாடானது பல்லினக் குழுக்களைக் கொண்ட சிறிய அழகான நாடு இதனை மேலும் அழகூட்டுவது எம் அனைவரினதும் கடமை. நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கான சரிசமமான அங்கீகாரத்தையும், மதிப்பையும் வழங்கிவிட்டு அரசியலை நடாத்த வேண்டும். இதனை ஆட்சியில் நுழைத்துவிட்டால் மதம் அரசியலாகிவிடும். இதனது விளைவினை மேற்கூறப்பட்ட வரலாற்று விளைவுகளின் ஊடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலே சுட்டிக்காட்டியவாறு அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை அரசியலில் மதம் தனது தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இலங்கை அரசியல்வாதிகள் 'லிகுவான் யூ'வின் தலைமையில் இருந்த சிங்கப்பூரை உதாரணமாகக் கொள்ளவேண்டும். காரணம் அந்நாடு ஏனைய நாடுகளில் ஏற்பட்ட முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டு தனது நாட்டின் அரசியல் யாப்பினையும் ஆட்சிச் செயற்பாடுகளையும் செயற்படுத்தி பல்லின சமூகத்தையும் பல மொழி பேசும் மக்களையும் பல மதங்களையும் ஒரு குடையின்கீழ் ஒன்றாக ஆட்சியமைத்து நிர்வகித்து வருகின்றது. எனவே அதைவிடச் சிறந்த உதாரணம் எமக்குத் தேவையில்லை.

மேற்படி விடயங்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது இலங்கையின் அரசியலில் ஆரம்பத்தில் இருந்து மதமே தனது செல்வாக்கினைச் செலுத்தி வருகின்றது என்பதனை உணரலாம். ஏற்கனவே வரலாற்றில் ஏற்பட்ட பாதகமான விளைவுகளைக் கொண்டு இதனை உறுதிப்படுத்தலாம். தற்காலத்தில் அவ்வாறானதொரு பாதக விளைவுகளை மதம் உருவாக்காமல் இருக்க ஆட்சியாளர்கள் - சிறப்பாக மதம் தொடர்பான விடயங்களை முகாமை செய்வது அவசியமாகும். இலங்கை அரசியலில் மதத்தினது வகிபங்கைக் குறைத்துக்கொள்வதன் மூலமாக மக்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

# அதிர்வுகள் ......

10ஆம் பக்கத் தொடர்ச்சி

## அநுராதபுர முதல்வரின் முன்னுதாரணம்

இதற்கு முன்னுதாரணமாக அநுராதபுரம் மாநகர மேயர் எம்.ஜீ.சோமதாச ஒரு அருமையான திட்டத்தை அநுராதபுர நகரில் நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளார். அநுராதபுர நகரம் கட்டாக்காலி நாய்கள், நுளம்புப் பரவல் ஆகிய இரண்டு பெரும் சுற்றாடல் பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டு, இவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கையில் இறங்கியுள்ளார். சுற்றாடலுக்கு நாய்கள் அவசியம் எனக் குறிப்பிட்ட அவர், நாய்களைச் சரியான முறையில் வளர்க்கவேண்டும் என்றும் தெளிவுபடுத்தி உள்ளார். நாய்களை வளர்க்க வரி அறவிடுவதன் வழியாக நாய் வளர்ப்பது கட்டுப்படுத்தப்படுவதோடு, கருத்தடை ஊசி மருந்துகள், சத்திர சிகிச்சை போன்ற வசதிகளை ஏற்படுத்தி இத்திட்டத்தை அமுல்படுத்த உள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஆகக்குறைந்தது நம்முடைய பிரதேச, நகரசபைகள் தெருநாய்களையாவது கட்டுப்படுத்துவதை தமது தலையாகிய பணியாகக்கொண்டால் அதுவே முதல் வெற்றியாகும். இவ்வாறாக அநியாய உயிரிழப்புக்களையும், வீதி விபத்துக்களையும் இல்லாமல் செய்யும் திட்டத்தை முன்மொழிந்து நடைமுறைப்படுத்தச் சில நல்ல மனிதர்கள் இந்நடப்பாண்டிலேயே முன்வரலாம். ஆனால், இதனைத் தடுத்து நிறுத்தி தெருநாய்களைக் காப்பாற்ற, அவைகளின் பக்கமாக நின்று வாதிட தேர்தலில் வெற்றிபெற்ற எத்தனை 'தெரிந்தெடுக்கப்பட்டவைகள்' அணிதிரள்வார்களோ என்ற ஆதங்கம் ஏற்படுவதும் இவ்விடத்தில் தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் எத்திட்டத்தைக் கொண்டுவந்தாலும் எதிர்ப்பதற்கு என்றே ஒரு கோஸ்டி இருக்கின்றதே!

## காட்டு விலங்குகளின் காப்பகங்கள் காடுகளே!

மிருகங்கள் - விலங்குகளுக்கு காப்பகங்கள் அமைப்பதுபற்றி ஆங்காங்கே சிலர் சிந்தித்து வருகின்றார்கள். உண்மையில் மிருகங்கள் - விலங்குகள் இயற்கையாகவே வாழக்கூடிய இடங்களில் அவற்றை வாழ விட்டுவிட வேண்டும். குறிப்பாகக் காட்டு விலங்குகளைக் காட்டில் வாழவிட வேண்டும். ஆனால் இன்று காடுகளை மனிதர்கள் அழிப்பதனால் மிருகங்கள் காடுகளைவிட்டு நாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைவதையும், நுழைவதோடல்லாமல் பாரிய சேதங்களை ஏற்படுத்துவதையும் அவதானிக்கலாம். மிருகங்கள் வாழும் காடுகளை அழித்தால் மிருகங்கள் மனிதர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது போகும்!

## மனநிலைகளை மாற்ற ஆவன செய்ய வேண்டும்!

தெருநாய்களுக்குக் காப்பகம் அமைப்பது தொடர்பாகச் சில செய்திகளைக் கடந்தசில மாதங்களாக ஆங்காங்கே பார்க்கக்கூடியதாக இருந்தது. நல்ல செய்தி! ஆனால் இவ்விடத்தில் இன்னுமொன்றையும் கட்டாயமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும். நாய்களுக்கான காப்பகங்களை அமைக்கின்ற அதேநேரத்தில் நாய்களிலும் கேவலமான மனநிலைகளை மனிதர்கள் மாற்றுவதற்கான செயற்த்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது நம் சமூகம் உயிர்ப்புப்பெற மிகமிக அவசியமானதும் இன்றியமையாததும் ஆகும்! "... இந்தச் சமூகம் நாய்களை, பூனைகளைக் கொண்டாடும். மாட்டை தெய்வமாகப் பூசிக்கும். பல நூற்றாண்டுகளாக அடிமைகளாக உழைத்துழைத்துத் தேய்ந்திருக்கும் மனிதர்களை மட்டும் தீண்ட மறுக்கின்றது! தனக்குச் சமமான ஒருவன் என்ற சமஉரிமையைத் தரமறுக்கின்றது! இது கொடிய மனநோய். இத்தகைய சம்பவங்கள் மன உழைச்சலை ஏற்படுத்துகின்றன..." எனப் பத்திரிகை ஆசிரியர் புனித பாண்டியனின் கூற்று ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

## அநாவசியப் பெருக்கம் ஆபத்தானது!

அடுத்து விலங்குகள், மிருகங்கள், எதுவாக இருப்பினும் அவைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இயலுமானவரை பராமரிக்கப்படவேண்டும். ஆனால், இந்த மனிதர்கள் தங்களுடைய இனவிருத்தியை கவனமாகக் கையாண்டு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுபோல மிருகங்களின் விலங்குகளின் இனவிருத்தியைக் கட்டுப்படுத்த ஆவன செய்வதில்லை. ஆறாவது அறிவில்லாத இந்த மிருக ஜீவன்கள் குறிப்பாக நாய்கள் தங்கள் இனவிருத்தியைக் கொஞ்சம் கட்டுப்பாட்டோடு பேணுவதற்கு வழிவகை மேற்கொள்ளப்பட்டால் அவை அநாவசியமாகப் பெருகாது தடுக்கலாம்.

இதுபற்றி ஏன் நம்முடைய பிரதேச சபைகளும், நகரசபைகளும் அக்கறைப்படுவதில்லை என்பதைப்பற்றி பொறுப்பிலுள்ள புத்திசாலிகள் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். நாலாபக்கமும் நாய்கள் பெருகி அவற்றின் தொல்லைகள் கட்டுக்கடங்காமல் போனதின்பின், நாய்களைப் பிடிக்க நான்கு வண்டில்களோடு நான்குபேர் சென்று நாற்பது நாய்களைப் பிடித்து அழித்தால் தெருநாய்களின் அட்டகாசம் குறைந்துவிடப் போவதில்லை – அவைகளால் ஏற்படும் பிரச்சினைகளும் தீர்ந்துவிடப் போவதில்லை என்பதை மேற்சொன்ன சபைகளும் புத்திசாலி அதிகாரிகளும் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே மக்களின் நலன்பேணும் திட்டத்தில் ஈடுபடுகின்ற உள்ளூராட்சிச் சபைகளும், ஏனைய அதிகாரிகளும், நிறுவனங்களும் இதுபற்றி மிக நிதானமாகச் சிந்தித்துத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முன்வரவேண்டும். ஆகக்குறைந்தது தெருநாய்களைக் கட்டுப்படுத்துவதிலாவது நம் பிரதேச, நகர சபைகள் நடப்பாண்டில் வெற்றிகாணுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

**மன்னா வாசகர்களே!**
**எம்மோடு ஒத்துழையுங்கள்!**

பங்குகளில் நேரடியாகவும், பிற இடங்களில் தபால் மூலமாகவும் மன்னாவைப் பெறும் அன்புக்குரிய மன்னா வாசகர்களே, மன்னா பத்திரிகைக்கான பணத்தை விரைவாகச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்!

# நீங்காத நினைவுகள்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி



**அருட்பணி. ச. விக்ரன் அவிதப்பர்**
**(பிச்சைகுளம்)**

மலர்வு : 17 - 06 - 1959
குருத்துவத்தில் : 06 - 09 - 1988
உதிர்வு : 22 - 06 - 2015

பிச்சைகுளம் மண்ணின் வளமுறு குருவே
விசுவாச குடும்பத்தின் குலமுதுவே
எம் இதயத்தில் என்றும் ஒளிர்பவரே
எளிமையின் வடிவமுதே!

மறைமாவட்டக் குருவாய் அவனியில் பணிபுரிந்தீர்
இறைமக்கள் அனைவரையும் அன்பினால் கவர்ந்தீர்
நிமலனாம் இயேசுபுகழ் மனதார உரைத்தீர்
நித்தமும் மற்றவர்க்கு நேசக்கரம் கொடுத்தீர்!

நகைச்சுவை கலந்து நயமாகப் பேசுவீர்
நலமுறு பணிகளை நாற்றிசையும் செய்தீர்
இறைமகன் பாதையில் இன்புறப் பயணித்தீர்
தகைமையாய் பற்பல விசுவாசிகளை உருவாக்கினீர்!

ஆண்டுகள் மூன்று கடந்து சென்றதுவே
ஆண்டவர் அடியினில் அமைதியாய் இளைப்பாறும்
மீண்டும் உம்மைப் பேரின்ப வீட்டினில்
மகிழ்வுடன் ஒருநாள் நாமும் சந்திப்போம்
அதுவரை நாமெல்லாம் காத்திருப்போம் தரணியில்!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு அம்மா மற்றும் உறவுகள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி, 16ம் ஆண்டு நினைவஞ்சலி





**திரு. டெனீஸ் அந்தோனிப்பிள்ளை**
**திருமதி. அ. செபஸ்ரியம்மா**
**(முருங்கன் பிட்டி, முருங்கன்)**

மலர்வு :- 17.07.1927
உதிர்வு :- 12.06.2008

மலர்வு :- 12.06.1933
உதிர்வு :- 30.04.2002

“இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ எனக்கே சொந்தம்” (எசாயா: 43:1)

எங்கள் மனதை என்றும்
விட்டுவிலகாத எங்கள் அன்புத்
தெய்வங்களே! ஐயா, அம்மா,
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள்
பத்து, பதினாறு ஆனாலும்,
எம் உள்ளத்தின் துயரம் இன்னும்
ஆறவில்லையே
எம் சகோதரர்கள் மரியநாயகம்
(கண்ணா) ஜெயசீலன்
இவர்களையும் நினைத்து ஆண்டவர்
பாதம் நீங்கள் அமர்ந்திருக்க
எந்நாளும் சிரம் தாழ்த்தி எம்
செபத்தில் வேண்டுகின்றோம்.

*கனடா, பரீஸ் கல்முனை ஆகிய இடங்களிலும் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 12.06.2018 காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

உங்கள் பிரிவால் துயருறும் :-
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தகவல்: ***மகள் R. றெஜி***

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 02 1930



உதிர்வு 01 06 2016

**திருமதி. சே. லோறன்சியா டபரேரா**
**(ஆனந்தம்மா – முத்தரிப்புத்துறை)**

தாயே என்று அழைத்தோம், நீரில்லையே
பாசத்திற்கு ஏங்குகின்றோம், நீரில்லையே
இரண்டு வருடங்கள் கடந்தும் - உம்
நினைவுகள் மறையவில்லையே
உம் வாழ்வு ஆலம் விழுதுபோல்,
எம்முன் உறுதியானதே!
ஆயினும் உம் பிரிவு இன்னும் எம் உள்ளங்களில்
கண்ணீர் ஓடைதானே
இறைவனின் தாயே! எம் தாய்க்கு
உம் பாதத்தில் இடம் தாரும்மம்மா!

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்.

## 18ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 03 1936



உதிர்வு 05 06 2000

**திரு. நீ. சந்தியாப்பிள்ளை (குணசிங்கம்)**
**(இளைப்பாறிய அதிபர் – ஒலிமடு, நானாட்டான்)**

ஈரொன்பது ஆண்டுகள் ஆனாலும்
எம் இதயத்தினைவிட்டு நீங்காத அன்புத் தெய்வமே!
எம் கண்ணீர் துளிகள் ஓயவில்லையையா.
அன்புமிகு கணவனாய், நேயமிகு தந்தையாய்
கருணைமிகு அதிபராய் அமைதியின் திருவுருவாய்
வாரி வழங்கும் வள்ளலாய், அணையாத தீபமாய்
இதயத்தில் பிரகாசித்த அகல் விளக்கே!
நினைக்காத நாளில்லை, உம் அன்புமிகு செயல்களை
மறக்க முடியவில்லையே, உம் புன்னகைத் திருமுகத்தை!
உங்கள் ஆன்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்கி ஈரவிழிகளுடன் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 02 1959



உதிர்வு 15 06 2017

**திரு. கயித்தாமப்ளளை அநதோன் (ஆசை அண்ணா)**
**(தரவன்கோட்டை, மன்னார்)**

கரைதிரண்டு ஓராண்டு ஓடினாலும்
ஆறவில்லையே மனதின் காயங்கள்.
இன்னும் கண்களில் கசிகின்றதே கண்ணீர்.
நீர் வாழ்ந்த இல்லம் காணுமா மீண்டும் உம் பாதச்சுவடுகளை?
கணீர் என்ற சத்தம் இன்று மங்கிபோனதே,
ஓடித்திரிந்த கால்கள் - இன்று
முடங்கிப்போனதே ஆறடி நிலத்திற்குள்!

காட்டாற்று வெள்ளம்போல் வந்த உம் மரணம்,
அள்ளிப்போனதே எங்கள் பாசக்கூட்டின் பறவை ஒன்றை!
இறப்பினும் மறப்போமா நீர் காட்டிய அன்பை?
வரப்போகும் பரமனின் வருகையில்
நீரும் சேர்ந்திட வேண்டுகின்றோம்...

**பிரிவால் நினைந்துருகும்** : குடும்பத்தினர்.

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 08 1995



உதிர்வு 11 06 2010

**செல்வன். நீக்கிலாஸ் கனிலன்**
**(சிறுக்கண்டல், முருங்கன்)**

**“இதயத்தில் ஆறாத காயங்களுடன்
இன்னும் எத்தனை நாட்கள்?”**

கருவிலே உருவாகியதிலிருந்து
ஒரு கணமேனும் உன்னைப் பிரிந்ததில்லை
ஆனால்! எட்டு ஆண்டுகளாய் ஏக்கத்திலும், தவிப்பிலும்,
வேதனையிலும், விரக்தியிலும், வாழ்விழந்து
இன்று உனக்காகவும் உன்போன்ற பலருக்காகவும்
முழந்தாள் பதித்து பரலோக தந்தையிடம் உறவாடும்
மணித்துளிகள்தான் இன்று
உன் உறவில் கலந்த மணித்துளிகள்.

**பிரிவால் நினைந்துருகும்** :
அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, தம்பி றொமேல்சன்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 05 1940



உதிர்வு 13 06 2015

**திரு. அந்தோனிப்பிள்ளை யோசவ் சவுந்தரநாயகம்**
**(இறம்பைக்குளம், வவுனியா)**

ஆண்டு மூன்று வந்திடினும்,
உம் நினைவு இன்னும் மறையவில்லை!
எப்பக்கம் திரும்பினாலும்
உம் உருவமே எமக்கு தெரியுதப்பா!
உமது வழியில் நாமும் நடந்து
இறைபக்தியைக் கடைப்பிடித்து
ஆன்மீக வாழ்வை இழக்காதிருக்க
விண்ணக தந்தையை இரஞ்சுவீர் எமக்காய்!
நிரந்தர அமைதியில் இறைபதி வாழ
நித்தம் பரமனை வேண்டுகின்றோம் அப்பா!

**பிரிவால் நினைந்துருகும்** :
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

## 15ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 04 1950



உதிர்வு 28 06 2003

**திரு. சந்தியோகு யேசுதாசன் சம்பாய்வா**
**(கற்கிடந்தகுளம், முருங்கன்)**

மறையாது உம் ஞாபகங்கள்
மங்காது உம் நினைவலைகள்!
குறைவில்லா எம் வாழ்வின்
குலவிளக்கு நீர்தானய்யா!
பதினைந்து வருடங்கள்
பறந்தோடிப் போயினும் - உம்
பிரிவென்னும் துயர் பகிர
வார்த்தைகள் போதாதையா!
உடல்விட்டு உயிர்போகினும்
எம் உள்ளமெங்கும்
என்றென்றும் நீர்தானய்யா!

**பிரிவால் நினைந்துருகும்** : குடும்பத்தினர்.